வெளியீடு—உ

# முப்பெண்மணிகள் வரலாறு

T
1777

1777 T

ஆசிரியர் :
**தி. நீலாம்பிகை அம்மையார்**
எழுதியது.

GOVERNMENT ORIENTAL MSS. LIBRARY
13 DEC 1951
TRIPLICANE P.O., MADRAS

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த
:: நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், ::
திருநெல்வேலி :: சென்னை

வெளியீடு—௨

உ

திருச்சிற்றம்பலம்

# முப்பெண்மணிகளின்

# வரலாறு

மறைமலையடிகள் புதல்வியாரும்,
மாணவியாரும், சென்னை, ராயபுரம், நார்த்விக்
மகளிர் கல்லூரித், தலைமைத் தமிழாசிரியரும் ஆகிய
**திருவாட்டி தி. நீலாம்பிகையம்மையார்**
இயற்றியது.

கிடைக்குமிடம்:

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி, சென்னை.

*Fourth Edition Feb. 1946*

[ALL RIGHTS RESERVED]

*Published by*
*The Author*
*February 1946*

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.
Q. H. M. S. 95-B. 1000

சென்ற
ஒன்பது ஆண்டுகளாக எனக்கு
இருந்த இளைப்பிருமல் நோயை
எல்லாம்வல்ல இறைவனருளால்
தக்க மருந்துதவி நலப்படுத்திய

தமிழ் மருத்துவமணி
கீழைப்பாட்டம்,

**திரு. சு. பிச்சாண்டியாபிள்ளை யவர்கட்கு**

என் உளமுவந்த நன்றிக் கறிகுறியாக
இந்நூல் வெளியிடப்பட்டது.

# முகவுரை

"அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு." (குறள்)

உலகத்தில் இறைவனது பேரருளாற் படைக்கப் பட்ட எல்லா உயிர்களிலுஞ் சிறந்தது ஆறறிவுடைய மக்களுயிராகும். 'அரிதரிது மானிடராதலரிது' என்று ஔவையார் கூறியதற்கேற்ப ஆண், பெண் என்னும் இரு பகுப்புக்குள் அடங்கிய மக்கட் பிறவியே மிக மேலானதாகும். ஏனெனில், மக்களாய்ப் பிறந்தவர்க்கே நல்லது இது, தீயது இது என்று பகுத்துணரும் உணர்ச்சியும், அதனுல் தம்மைப் படைத்த இறைவன் ஒருவன் உளன் என்னுந் தெளிவும் உண்டு. இப்பகுத்துணர்வும், அதனுல் இறைவனுண்மையும் அறியாதவர்கள் ஆணயினும் பெண்ணயினும் மக்களாய்ப் பிறந்தும் பிறவாதவரேஆவர்.

'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்'

என்று திருவள்ளுவப் பெருமான் கூறுமாற்ருல், ஆண் பெண் எனு மிரு பகுப்பாருள் அறிவுடையாரே எல்லாச் செல்வமும் உடையராவர்; அவர்க்கே அருளுலகந் திறக்கும். இவ்வுண்மையைச் சிறிதும் உணராத நந்தமிழ் நாட்டவர் தம் பெண்மக்கள் கல்வியில் உயர்ந்து மேன்மக்களாக வேண்டுமென்று கருதுகின்ருர்களில்லை. இவர்கள் தமக்குப் பெண்மக்கள் பிறந்தவுடனே வருந்துவதுமன்றி, அப்போதே அவர் தமக்குக் கணவர் யார் அமைவார்களென்னும் கவலை கொள்கின்றனர். இன்னும், 'தீவினை

செய்தவர்களே பெண் மக்களாய்ப் பிறக்கின்றனர்; இவர்கள் வீட்டு வேலைகளை ஒழுங்காகக் கற்றுக்கொண்டாற் போதும்; இவர்கட்குக் கல்வி ஏதுக்கு? இவர்கள் கல்வி கற்று ஆண்மக்களைப்போற் பொருள் தேடுவார்களா? இவர்கள் அங்ஙனங் கற்றுப் பேரறிவாளர்களானாலும் ஊரார்க்குப் பயன்படுகின்றவர்களே யல்லாமல் நமக்குச் சிறிதும் பயன்படார்?' என்று பலவாறாகக் கூறிப் பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதிற் சிறிதுங் கருத்தில்லாதவர்களா யிருக்கின்றார்கள். இவர் தம் கருத்துக்கு மாறாக, நம்மவருள், தாய்மாரிற் சிலர் மட்டுமே தம் பெண் மக்களுக்குக் கல்வி கற்பிக்க முன் வருகின்றார்கள். ஆனால், இவர் முயற்சியும் சிறந்த முறையின்பாற் பட்டதன்று. இவர்கள் தம் பெண்மக்களை உயர்தரக் கல்லூரிகட்கு அனுப்பி ஆங்கிலக் கல்விமட்டுங் கற்றுப் பெரும் பட்டங்கள் பெறும்படி செய்கின்றார்களே யொழிய, அவர்கள் தம் தாய்மொழிக் கல்வியிலும் பெரும் புலமையடையுமாறு ஊக்குகின்றார்களில்லை. இவர்தம் பெண் மக்கள் ஆங்கிலக் கல்வியில் உயர உயரத் தம் தாய்மொழியினிடத்துச் சிறிதும் பற்றில்லாமல், நம் நாட்டுப் பழக்க வழக்கங்களையும் அறவே மறந்து, மேனாட்டவர்களைப்போல் நடக்கத் தொடங்குகின்றனர். ஆதலாற், பட்டம்பெற முயலும் ஆங்கிலக் கல்வியும் நம் பெண் மக்களுக்கு ஒரு பயனுஞ் செய்வதாகத் தெரியவில்லை. ஆனால், இவர்கள் தாங் கற்கும் ஆங்கிலக் கல்வியோடு தாய்மொழிக் கல்வியும் உடன் சேர்த்துக் கற்று அவ்விரண்டு கல்வியிலும் அறிவு நிரம்பிக் கடவுளிடத்தும் பேரன்புடையராய்த், தம் மொழி கொள்கை ஆகிய இவைகளின் உண்மைகளைப் பிற நாட்டினர்க்கும் அறிவுறுத்தித் தாமும் பேரறிவாளர்களாய்த் திகழ்வார்களானால் மட்டும் பெருநன்மை யுண்டாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் அறிவு

நூற்கல்வி யில்லாத பெண்மக்கள் அறிவுடையராதல் முடியாது.

அறிவு நூற் கல்வி இறைவனைப் பற்றியும், அவனருள் பெற்ற அடியார்களைப் பற்றியும் உள்ள உண்மைகளை உணர்த்தும். நாம் நம் உள்ளத்தின்கண் உள்ள அறியாமை நீங்கி, அறிவு விளக்கம்பெற வேண்டுமாயின், இறைவனது பேரருளால் அறியாமையிருள் முழுதுந் தேயப்பெற்று அவனருள் கைகூடிய அருட்பெரியார் வரலாறுகளைப் பயிலுதல் வேண்டும். அறிவுடையோர் வரலாறுகளை அடிக்கடி பயிலுவதால் அந்நினைவே நம் மனத்திற் காழ்ப்பேறப் பெறுவோம். அந்நினைவுடையார்க்கே சிறந்த மகப்பேறு வாய்க்கும். எடுத்துக்காட்டாகப் போர் புரிவதிற் பேராண்மை பெற்று விளங்கிய நெப்போலிய மன்னன் அங்ஙனம் அஞ்சா ஆண்மையும் அறிவும் பெற்றுப் புகழ்பெற் றோங்கியதன் ஏது, அவன் தாய் அவனைக் கருக்கொண்டிருந்த காலத்து ஆண்டகையாளர் பலர் வரலாற்றைப் பலமுறை கற்றமையேயாம். தம் பிள்ளைகள் அறிவுடையராயும், அறிவிலராயும் வளர்தற்கு அவர்தம் தாய்மார்களே வாயிலா யிருக்கின்றனர். ஆதலால், நம் பெண்மக்கள் அறிவுடையராயிருத்தல் இன்றியமையாததாகும். பெரியபுராணத்திற் கூறப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மார்கட்கு அவர்தம் மனைவிமார் அறிவுடையராய் அமைந்து, தங் கணவன்மார் அருட்கருத்துக் கிசைந்து ஒழுகினமையாற்ருன் அவர்கள் இறைவனருளைப் பெற்றனர்.

இத்தகைய அருள் நிறைந்த தெய்வப் பெண்மணிகளின் வரலாறுகளை நம் பெண்மக்கள் கற்பராயின், அவர் தாம் திருந்துவதுடன் தம் வயிற்றிற் பிறக்கும் ஆண்பெண் மக்களையும் அறிவுடையராக்குவர். ஆகவே,

பெண்மணிகட்குப் பயன்படும் பொருட்டே, 'காரைக்காலம்மையார்', 'திலகவதியார்', 'மங்கையர்க்கரசியார்' ஆகிய இவ் அருட்பெரியார்களின் வரலாறுகளையும், அவ் வரலாறுகளாற் பெறப்படும் நுட்பங்களையும் எடுத்தோதி ஒரு சிறு நூல் இறைவனருளைத் துணையாகக் கொண்டு எழுதலானேன். இதனை ஆண்மக்கள் மட்டுங் கற்பதோடமையாது அவரவர் தாய்மார், மனைவிமார், பிள்ளைகளுங் கற்குமாறு ஊக்குவார்களாயின், பெரு நன்மை யுண்டாம்.

இச் சிறு நூலைப் பார்த்துத் திருத்தங்கள் செய்து உதவிய அட்வகேட், சைவத் திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை (எம்.ஏ.,எம்.எல்.,) அவர்கட்கும், மறைத் திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகட்கும் என் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன்.

**தி. நீலாம்பிகை.**

திருச்சிற்றம்பலம்

# 1. காரைக்காலம்மையார்

சோழநாட்டிற் **காரைக்கால்** என்னும் ஒரு கடற் றுறைப் பட்டினம் இருக்கின்றது. இவ்வூர் துறை முகப் பட்டினமாதலின் பல ஊர்ப் பண்டங்களும் இதன்கண் வந்திறங்கி நிரம்ப, அவ்வாற்றாற் பல் வளங்களும் பெருகப் பெற்று நாகரிகமுடையதாய் விளங்கும். இவ் ஊரில் வணிக மரபில், அம்மரபினர் கட்கெல்லாந் தலைமை பெற்று விளங்கிய **தனதத்தன்** என்னும் பெருஞ் செல்வன் ஒருவனிருந்தான். அவன் பல பிறவிகளிலுஞ் செய்த தவத்தின் பயனாக அவனுக்கு மிகுந்த அழகும் மிகுந்த அறிவுமுடைய ஒரு தவப்புதல்வியார் பிறந்தனர். இவர்க்குப் **புனித வதியார்** என்று பெயரிடப்பட்டது. தனதத்தன் தனக்குப் புனிதவதியார் ஒரே மகளாயிருந்தாலும், அவரை அணிகலன்களால் மட்டும் அழகு பெறச் செய் யாமல், அவர் தாம் அறிவிலுங், கல்வியிலும் ஓங்கி வளருமாறு கருத்தூன்றினான். புனிதவதியாரும் பல அறிவு நூல்களையும் நன்றாய்க் கற்று, அங்ஙனங் கற்றதன் பயனாகச் சிவபிரானை ஓயாமல் உள்குவதிலும், அவனிடத்து உண்மை யன்பு பாராட்டும் அடியார் பசித்துவரின் அவர்கட்குச் சோறுங் கூறையும் பொருளுந் தந்து பணிவிடை புரிவதிலுங், கூன் குருடு முதலிய ஏழை உயிர்கட்கு இரங்குவதிலுமே மிகுந்த

விருப்பங்கொண்டு தம் வாழ்நாளைப் பயன்படுத்துவா ராயினர்.

இவர் இவ்வாறு தூயராய் வளர்ந்து வருகையில் இவர்க்கு மங்கைப் பருவம் நெருங்கியது. இதுகண்டு தனதத்தன் அறிவும் அருளும் மிக்க தன் திருவளர் நங்கைக்குத் தக்கதொரு மணமகனைத் தேடுவானு யினன். இவன் கருத்துக்கிசையக் கடற்றுறைப் பெரும்பட்டினமாகிய **நாகையிற்** பெரும் புகழ் பெற்று விளங்கிய **நீதிபதி** என்னும் ஒரு வணிகன் இருந்தான். இவன் மகனாகிய **பரமதத்தன்** என்பான் அறிவிலுங் கல்வியிலுஞ் சிறந்து விளங்கினன். இவன்தான் புனிதவதியார்க்கு மணமகனாய் அமைதற்கு ஏற்ற வனென்று அறிவுடையார் பலர் கூறக்கேட்டுத் தன தத்தன் தன் அருமை மகளாரைப் பரமதத்தனுக்கு மணஞ் செய்விக்க இசைந்து, திருமண அழைப்புக் களைப் பல ஊர்களுக்குப் போக்கி, மணத்திற்கான சிறப்புக்களை எல்லாம் தன் அழகிய மாளிகையிலேயே அழகுபெறச் செய்து குறித்த நன்னாளிற் புனிதவதி யார்க்கும் பரமதத்தனுக்குந் திருமணத்தை மிகவும் பொலிவுடன் நடத்தினன்.

திருமணம் முடிந்த பிறகு தனதத்தன் தன் பெருங் குடிக்கு அரும்புதல்வியாகிய அம்மையைப் பிரிந்திருக்க மனமில்லானாய், அவரை நாகையிலுள்ள மணமகன் வீட்டிற்குச் செல்லவிடாமல், தன்னில்லிற்கருகே பெரியதொரு வனப்புமிக்க மாளிகை அமைத்து, வேண்டும் பொருள்களும் ஏராளமாகத் தந்து, இல்லற வாழ்க்கையை அவ் இருவரும் மகிழ்வோடு நடத்தச் செய்தனன். இவ்வாறு இவ்விருவருஞ் சிவபிரானரு ளால் எல்லாச் செல்வங்களும் பொருந்தப் பெற்று வாழுநாளிற் பரமதத்தன் தான் வருந்தித் தேடிய பொருளாலுங் குடிவளம் பெருக வேண்டுமென்று

கருதி வணிகத் தொழிலை மேற்கொண்டான். இவன் தன் வாழ்க்கைத் துணைவியாராகிய புனிதவதியார் தாம் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தமையால் அதனை யும் ஒழுங்குபெற நடத்திக்கொண்டு, தம் பிறவிப் பிணி நீக்கவல்ல எல்லாம்வல்ல சிவபிரானிடத்து ஓர் இமைப் பொழுதும் மறவாத பேரன்பிலும் சிறந்து ஓங்குவா ராயினர். அம்மையார் சிவபிரானிடத்துக் கொண்ட பேரன்பினால் உந்தப்பட்டு அவன் மெய்யடியார் எந் நேரத்தில் எவர் வரினும் அவரை வரவேற்று மிக மகிழ்வோடு அவர்கட்கு உணவளிப்பது வழக்கம்.

இங்ஙனம் இவர் வாழுநாளிற் பரமதத்தன் தன் தொழிலிடத்தில் இருந்தபோது, அவனைப் பயன் கருதிக் காணவந்தார் சிலர், அவனுக்கு இன்சுவை மிக்க இரண்டு மாங்கனிகளைக் கொடுத்துப் போயினர். இவ் இரண்டு கனிகளையும் பரமதத்தன் தன் மனைவியாரிடஞ் சேர்ப்பிக்கப், புனிதவதியாரும் அவைகளை வாங்கி வைத்தனர். அதன்பிறகு ஆண்டு மிக்க அடியார் ஒருவர் பசித்துக் களைத்து வியர்பொடிப்ப அம்மையார் தம் வீடுவந்து சேர்ந்தனர். இவ் அடியாரது நிலையினைக் கண்டு, இப்பெரியார் பசியை இப்போதே தீர்ப்பே னென்று அம்மையார் உட்சென்று பார்க்கக் கறிவகை கள் ஒன்றும் ஆக்கப்படாமலிருந்ததனால், அவர்க்கு உணவைக் கலத்தில் இட்டு அதனுடன் சேர்த் துண்ணத் தம் கணவன் தம்மிடத்துச் சேர்ப்பித்த மாங்கனிகளிரண்டில் ஒன்றைக் கொண்டுவந்து வைத் தனர். தள்ளாடிக் களைத்தயரும் அம்முதியவர் அம்மை யார் அளித்த தீஞ்சுவைமிக்க உணவை மாங்கனியோடு மகிழ்ந்து உண்டு பசி தீர்ந்து அம்மையாரை வாழ்த்திச் சென்றனர்.

இவர் சென்ற பிறகு மனைத்தலைவனாகிய பரம தத்தன் நடுப்பகலில் தன் வீட்டுக்கு வந்து நீராடி

உணவு கொள்ளலாயினன். புனிதவதியாரும் அவனுக்கு அன்போடு உணவு படைத்து மிஞ்சியிருந்த ஒரு மாங்கனியையுங் கொண்டுவந்து வைத்தனர். சுவைமிக்க அம்மாங்கனி ஒன்றை உண்ட பிறகு அதன் இன்சுவையால் வேட்கை அடங்கப் பெருனுய், மற்ருென்றையும் இடுக எனத் தன் மனைவியாரைக் கேட்டனன்; உடனே அம்மையார் அக்கனியைக் கொண்டு வருவார்போல் உட்சென்ருர். சென்றவர் அங்கு மாங்கனியில்லாமையாற் பெரிதுந் தளர்வடைந்து, தம் மெய்யடியார் தளர்வுற்றயரும்போது அவர் வேண்டியதனை வேண்டியவாறு ஈயவல்லாஞகிய முழுமுதற் சிவபிரானை ஐம்புலனும் ஒடுங்க நினைவு வொருப்பட்டு நினைந்து உருகினுர். அவ்வளவிற் சிவபிரானருளால் அம்மையார் திருக்கைகளில் இனியதொரு மாங்கனி வரப்பெற்று அதனைக் கொண்டுபோய்த் தன் கணவனுக்கு இட்டனர். அவன் இக்கனியை உண்ணும் போதே அப்பழத்தின் மிக்க சுவை வேறுபட்டதொரு புதுமையினை உடையதாய் அமிழ்தத்தினுஞ் சிறந்திருத்தலை உணர்ந்து, இஃது யான் தந்த மாங்கனி அன்று; மூவுலகிலும் பெறுதற்கு அரியதுபோற் ருேன்றுகிறது; இதை எங்குப் பெற்றனை? என்று புனிதவதியாரைக் கேட்டனன். அவ்வுரை கேட்டலும் அம்மையார் அம்மாங்கனி சிவபிரானருளால் கிடைக்கப் பெற்றமையால் அப்பேரருளின் திறத்தை வெளியே சொல்லுதற்கஞ்சித் திகைப்புற்றனர். பின்னும், தம் கணவனுக்கு நடந்ததை உள்ளவாறு சொல்லுதலே தம் கடனென நினைந்து தாம் மாங்கனிபெற்ற அருட்டிறத்தை எடுத்துக்கூறினர். இதுகேட்ட, பரமதத்தன் அம்மையார் அருண்மொழியைத் தெளியாதவஞகி ஐயங்கொண்டு புனிதவதியாரை நோக்கி, “இம்மாங்கனி உனக்குச் சிவபிரானருளாற் கிடைத்தது உண்மையாயின், அவனருளாலே இன்னும் ஒரு கனி கொண்டு

வருக" என்ருன். இது கேட்டுப் புனிதவதியார் அப்புறம் அகன்று கைதரவல்ல கடவுளாகிய சிவ பெருமானை நோக்கி, 'அப்பனே! எளியேன்பொருட் டிரங்கி இப்போதும் ஒரு மாங்கனி அளித்து அருளா விடின் யான் என் கணவனிடம் உரைத்தது பொய்யாகி விடும்' என்று நைந்துருகி அவனை வேண்ட, உடனே பிறிதொரு மாங்கனியும் அவனருளால் வரப்பெற்று அதனைக் கணவனிடம் கொடுத்தனர். அதனைக் கண்டு பரமதத்தன் பெரிதும் வியப்படைந்து வாங்கினன். ஆனால், அவன் அதைக் கைகளில் வாங்கியவுடன் அவ் அருண் மாங்கனியைக் காணப்பெருனுய் அச்சம் மேற் கொண்டு, உள்ளந் தடுமாறித் தன் மனைவியாரை ஒரு தெய்வப் பெண்மணியாரெனக் கருதி அவரை விட்டுத் தான் நீங்குவதற்கெண்ணி, எவர்க்கும் ஒன்றுஞ் சொல்லாது அவரிடந் தொடர்பின்றி வாழ்ந்து வந்தான்.

பரமதத்தன் எவ்வகையிலாயினும் அம்மையாரை விட்டு அகலவேண்டுமென்ற எண்ணத்தால், தான் கடல்மீது சென்று பிறநாடு புகுந்து பெரும்பொருள் திரட்டி வருவதாகத் தன் சுற்றத்தவரிடந் தெரிவித் தான். சுற்றத்தவர்களும் பொருள் மிகுதியாகச் செலவு செய்து பெரியதொரு மரக்கலஞ் செய்வித் தனர். பரமதத்தன் பிறநாட்டினர் பாராட்டி விரும் பத்தக்க சிறந்த பண்டங்களை அம்மரக்கலத்தில் ஏற்றிக் கம்மியர் பலருடன் நல்ல நாளிற் கடவுளை வணங்கி அக்கப்பலிற் புறப்பட்டான். புறப்பட்டுப்போய்ப் பிற நாடுகளிற் றங்கித் தான் கொணர்ந்த பொருள்களை விற்றுப் பேருதியம் பெற்று, மிகுந்த பொருளுடன் அம்மரக்கலத்திலேறிக் காரைக்கால் வந்து சேராமற், கன்னி நாட்டிலுள்ள ஒரு பட்டினம் போய்ச் சேர்ந் தான். அப்பட்டினத்திற் புகழ்பெற்ருேங்கிய வணிகன் ஒருவன் றன் அருமை மகளை மணஞ் செய்துகொண்டு

தன் முதன் மனைவியாராகிய அம்மையாரைப்பற்றி வெளியே ஒன்றுங்கூறுமல், அவரைத் தன் மனத்துளே வழிபடுபவனுகி முறை வழுவாமல் வாழ்ந்து வருவானுயினன். அவ்வூரிற் பரமதத்தனே பெருஞ் செல்வனும், நன்னெறியில் நன்கு ஒழுகுபவனுமாவன் என்று அவ்வூரார் புகழுமாறு வாழுநாளில், அவனுக்குத் திருமகளே ஓர் உருவெடுத்தாற்போன்ற ஒரு பெண் மகவு பிறந்தது. அப்பெருமகிழ்ச்சியை ஒரு பாற்கொண்டு, தான் முன்பு உடனிருந்து வாழ்தற்கு அஞ்சி நீத்த ஒப்புயர்வற்ற தன் தெய்வத் திருமனைவியாரை ஓரிமைப்பொழுதும் மறவாதவனுய் அவரையே தான் வழிபடு தெய்வமாகக் கொண்டு, அவர் அருமைப் பெயரையே தன் இளங்குழவிக்கு இட்டனன்.

இந்நிலைமையில் இவணிருக்கக் **காரைக்காலிற் புனிதவதியார்** கடல்மீது சென்ற தம் கணவர் வருவரென்று எதிர்பார்த்தவண்ணமாய்த் தம் மனையிலேயேயிருந்து சிவபிரானை ஓயாது வழிபடுவாராயினர். பாண்டி நாட்டிலே ஒரு பெரும் பட்டினத்திற் பரமதத்தன் பெருஞ் செல்வனுய் வாழ்கின்ருன் என்பதை அவன் சுற்றத்தவர் கேள்வியுற்று மனம் வருந்தி, அம்மையாரை அவ்விடத்துக் கொண்டுபோய்விட எண்ணி, அவரைச் சிவிகையில் ஏற்றிக்கொண்டு பல ஊர்கள் கடந்து பரமதத்தன் இருக்கும் பட்டினம் போய்ச் சேர்ந்தனர். உடனே தாம் வந்து சேர்ந்ததை அவர் கணவனுக்குத் தெரிவித்தனர். பரமதத்தன் இச்செய்தியை அறிந்து, தானே தன் மனைவி மகவுடன் முந்துறச் சென்று அவரைக் காண்பேனென்று அம்மையாரிடம் வந்து, தானும் தன் மனைவியோடும் தளர் நடை மகவினேடும் மானிளங் கன்றுபோல் நின்ற திருமிக்க தன் மனைவியார் திருவடிகளில் நிலமுற வீழ்ந்து, 'அம்மையே,' உமதருளால் வாழ்கின்றேன்; உமது திருப்பெயரையே இவ் இளங்குழவிக்கு இட்டிருக்

கின்றேன்' என்று மொழிந்தான். கணவன் தம்மை வணங்கக்கண்ட **புனிதவதியார்** சுற்றத்தவரிடம் அச்சத்தோடு ஒதுங்கி நின்றனர். இவ்வாறு அம்மையாரை அவர்தம் கணவனே நிலத்தில் வீழ்ந்து வணங்கக் கண்ட அவர்தம் சுற்றத்தவரும் பெரிதும் திடுக்குற்று, 'நீர் உம் மனைவியை வணங்குவது தகுமோ' என்று **பரமதத்தனைக்** கேட்டனர். அதற்கு அவன் அவர்களை நோக்கி, 'இம்மாதரார் மண்ணுலகத்தவர் அல்லர்; இவர் தெய்வத்தன்மை பொருந்தியரென்பதை யான் அறிந்தேன். அதன்பின் பெற்ற இப்பெண் மகவுக்கும் அவரது திருப்பெயரையே சூட்டியிருக்கின்றேன். ஆதலால், அவரடி பணிந்தேன்; நீங்களெல்லீரும் அவரை வணங்குமின்கள்' என்றான். என்று அவன் கூறக்கேட்ட சுற்றத்தாரும் மிகவும் வியப்படைந்து மனைவியை இவன் வணங்கியது என்ன புதுமை? என்று இப்பெரியார் அருட்டிறம் அறியாது மயங்கி நின்றனர்.

**புனிதவதியார்** தம் கணவன் கூறியதைக் கேட்டுச் சிவபெருமானை உள்ளம் நைந்துருகிப் பின்வருமாறு வேண்டுகின்றனர். 'பிறவிப் பிணி நீக்கும் பெரியோனே! என் அருமைக் கணவன் யான் உன்னால் ஆட்கொள்ளப்பட்டதனால் என்னை விட்டகன்றான்; அவனுக்காக யான் தாங்கியிருந்த இவ் அழகுமிக்க என் உடம்பைவிட்டு எக்காலமும் உன் திருவடிக் கீழிருந்து வணங்கும்பொருட்டு அடியேனுக்குப் பேய் வடிவு தந்தருளல் வேண்டும்' என்றனர் அம்மையார். அவர் அங்ஙனம் வேண்டியவுடனே, அவனருளால் தம் வனப்புமிக்க வடிவம் நீங்கப்பெற்று எலும்புடம்பே யாகிப் பேய் வடிவு பெற்றனர். இது தொடங்கிப் புனிதவதியார்க்குக் 'காரைக்காற் பேயம்மையார்' என்னும் பெயர் வழங்கலாயிற்று. அம்மையார் திடீரெனச் சிவபிரானருளாற் பேய் வடிவு பெற்றதைக்

கண்ட அவர்தம் சுற்றத்தவர்களெல்லாரும் அவரைத் தொழுது அஞ்சி அகன்று போயினர்.

உலகத்தார் தொடர்பும் துன்பமும் ஒரு சிறிது மில்லாமல் நீங்க, அம்மையார் இறைவனருளோடு ஒன்றுபட்டு '**அற்புதத் திருவந்தாதி**' பாடியருளினர். அதன்பிறகு '**திருவிரட்டைமணிமாலையந்தாதி**' என்ப தொன்றும் இறைவன்மேற் பாடி, மேலும் மேலுந் தம்மிடத்து மெய்யுணர்வும் இறையருளுங் கிளர்ந் தெழுதலின் வெள்ளி மலையை அடைந்து இறைவனை வணங்க விழைவு மீதூர்ந்து புறப்பட்டனர். இவர் போம்போது இப்பெரியாரைக் கண்டார் பலர் வியப் புற்று அஞ்சி ஓடினுர்கள் என்று கூறக்கேட்ட அம்மை யார், 'எல்லா உலகங்கட்குந் தலைவனுகிய இறைவன் என்னை அறிவராகில், இவ் உலக மக்களுக்கு யான் எந்த உருவில் எப்படி இருந்தால் என்னை?' என்ருர். சிவபிரான் எழுந்தருளியிருக்கும் வெள்ளிமலை யேறும் பொருட்டு அங்குச் சென்று, எம்பெருமான் அமர்ந் திருக்கின்ற மலைமேல் அடிவைத்து நடப்பது தவ றென்று எண்ணி, அதன்மீது தலையாலே நடந்து செல் வாராயினர். அம்மையார் தலையினுலே நடந்து வருவதைக்கண்ட உமைப்பிராட்டியார், 'எம்பெரு மானே, இவ் எளிய எலும்புடம்பு தாங்கி இவ்வாறு உழன்று ஏறி வருபவருடைய அன்புதான் என்னே!' என்று இறைவனைக் கேட்க, இறைவனும், உமையே! இங்ஙனம் வருந்தி வரும் இவள் நம்மிடத்துப் பேரன்பு காட்டும் அம்மையானவள். இவளே இப்பெருமை வாய்ந்த என்புடம்பை நம்மிடத்து வேண்டிப் பெற்ற னள்; என்று கூறும்போது, பேயம்மையாரும் அருகே செல்ல, எம்பெருமான் அவரை நோக்கி, 'அம்மையே' என்று உலகமெல்லாம் மகிழுமாறு அழைத்தனன். இறைவன் அம்மையே! என்றழைக்க, அம்மையும் 'அப்பா' என்று அன்பினுல் அலறி அவனடிமேல்

வீழ்ந்தனர். வீழ்ந்தெழுந்தவரைச் சிவபெருமான் உனக்கு என்னிடத்தில் வேண்டுவதென்னை ? என்றான். அதற்கவர், "வினைகெட அருளும் இன்பப் பெருமானே! யான் உன்னிடத்து என்றும் இறப்பில்லாத இன்பமாகிய அன்பு கொள்ளல் வேண்டும்; இன்னும் பிறப்பு அடியோடு நீங்க வேண்டும்; அங்ஙனமின்றி மறுபடியும் யான் பிறக்க நேர்ந்தால் நின்னை மறவாமை வேண்டும்; இன்னும் யான் எப்போதும் நீ திருக்கூத்து இயற்றுகையில் நின் திருவடிக் கீழிருந்து பாடி மகிழப் பேரருள் புரிதல் வேண்டும்" என்று குறையிரந்து இறைஞ்சினர். சிவ பெருமான் அம்மையார் வேண்டியவாறு அருள் கொடுத்துப், "**பழையனூர்க்கு** அடுத்துள்ள **திருவாலங் காட்டில்** நானிருக்குங் கோயிலை நண்ணி என்னடிக் கீழ் நீ இருந்து என் ஆட்டங்கண்டு மகிழ்ந்து பாடு வாயாக!" என்றருள் செய்தனன். சிவனருண் மொழியை முடிமேற் கொண்டு அம்மையார் தலையினால் நடந்து திருவாலங்காட்டை அடைந்து, ஆண்டுத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்குஞ் சிவ பிரான் திருவடிக்கீழிருந்து '**மூத்த திருப்பதிகம்**' பாடி, என்றும் அப்பேரின்பத்தில் திளைத்திருந்தனர்.

---

## அம்மையார் வரலாற்றின் முதன்மையான கருத்துக்கள்

**புனிதவதியார்** வணிகர் குலத்திற் பிறந்தவரென்பது முன்னமே எழுதப்பட்டது. அம்மையார் பெருஞ் செல்வக் குடியிற் பிறந்து ஒரு குறைபாடும் இல்லாமல் வளர்ந்து வந்தவர். பெரும்பாலுஞ் செல்வக் குடியில் தோன்றும் ஆண் பெண் என்னும் இரு வகுப்பாருந் தம் பெரும் பொருளைச் செலவழித்து உலகப் பொருள்

களைத் தம் மனமார நுகர்ந்து இன்புறுவதிலேயே பேரின்பம் உண்டெனக் கருதுவர். இவ்வாறு கருதும் இவர், தம் செல்வம் இழந்து துன்பம் நெருங்கிய காலத்திலேதான் தாம் துய்த்த உலக இன்பம் நிலையற்றதென்றும், அதனின் வேறுயதோர் அழிவில்லாப் பேரின்பப் பொருளாகிய கடவுள் ஒருவர் உளர் என்றும் உணர்கின்றனர். இது குறித்தே மாணிக்க வாசகப் பெருமானும்,

"கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி"

என்றருளினர்.

செல்வமென்னுந் துன்பப் பொருளிற் பற்று நீங்கிப் பிழைத்த பிறகே மக்களுக்குத் தெய்வமென்பதோர் எண்ணம் உண்டாகின்றதென்றார். மாணிக்க வாசகப் பெருமான் அமைச்சராய் அமர்ந்து கவலையின்றிப் பெருஞ் செல்வ வாழ்க்கையிலிருந்தும், அதிற் பற்றுவிட்டு இறைவனருள் பெறுதல் ஒன்றே உவர்ப்பில்லாத பேரின்பந் தருவதென்பதை உணர்ந்தார் உணர்ந்தபின் அமைச்சர்க்குரிய ஆடை அணிகலன்களை அறவே ஒழித்துப் 'பசுமரத்தில் அறைந்த ஆணி அம்மரத்தை இறுகப் பற்றிக்கொள்வது போல, எல்லாம் வல்ல இறைவனிடத்தே பதித்த உள்ளமுடையரானார். தம் எண்ண முழுதும் இறைவனிடத்தே அழுந்தப் பெற்றதாற், பெருமான் தம்மையும் மறந்து, தம்மை உலகத்தார் பித்தனென்று பேசுமாறு தம் நிலையையும் மறந்தார். இறைவனது பேரருளைப் பெறுதல் தவிர, வேறு எத்தகைய உயர்ந்த நிலையும் வேண்டுவதில்லை என்பதைக் கீழ்வருந் திருப்பாட்டில் விளக்கியருளினர்.

"யானேதும் பிறப்பஞ்சேன்
இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன்
மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயு மலர்க்கொன்றைச்
சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் அருள்பெறுநாள்
என்றென்றே வருந்துவனே."

இதுபோலவே புனிதவதியாரும் பெருஞ் செல்வ வாழ்க்கையிற் பெரு மகிழ்வோடிருந்தும், அதிற் பற்றின்றி, அருட் செல்வமாகிய இறைவனருள் பெறுவது தானே ஒப்பற்ற உயர்ந்த நிலையாம் என்றும், அது தவிர்ந்த ஏனை எவ்வகையான உயர்ந்த நிலையும் வேண்டற்பாலதன்று என்றும் தாம் அருளிச் செய்த **அற்புதத்திருவந்தாதியில்,**

"கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான்
செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன்—
துண்டஞ்சேர்
விண்ணுளுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணுளா ஈதென் கருத்து."

பெரும்பாலுஞ் செல்வர்கள் வீட்டிலுள்ள நம் பெண்மக்கள் ஈர நெஞ்சமில்லாதவர்களாயும், தக்கவர்க்குப் பொருந்திய வழியில் அறஞ்செய்ய அறியாதவர்களாயும் இருக்கின்றனர். இன்னும் இவர்கள் ஆடை அணிகலன்களிற் பெருவிருப்பு வைத்து அவைகளால் தம்மை ஒப்பனை செய்துகொண்டு தம்மை ஒத்த பெண்களோடு ஓயாமல் வீண் பேச்சுப் பேசுவதிலேயே காலங்கழித்து வருகின்றனர். இவர்கள் கடவுளையும் அவனடியார்களையுங் கனவிலும் நினையார். ஆனால்,

அம்மையாரோ இயற்கையிலேயே தவப் பிறவியின ராகலின், தாம் குடும்பத்தில் ஈடுபட்டிருந்தும், நேரங் கிடைத்தபோதெல்லாம் அறிவு நூல்கள் பல கற்ப திலும், இறைவனை உருகி வணங்குவதிலும், தக்கார்க்கு அறஞ் செய்வதிலுமே கருத்தூன்றி நின்றார்.

ஆனால், அறஞ் செய்யுந் தமிழ்ச் செல்வர்களோ பெரும்பாலும் அவ் அறத்தைத் தக்க வழியிற் சிறக்கச் செய்ய அறியாராய்ப், பிறரைத் தாழ்த்தித் தாமே கடவுளர் என்று கூறிக்கொண்டலையும் பார்ப்பன மக்களுக்கு ஆங்காங்கு உணவு விடுதிகள் அமைப்பித் தலினுஞ் சமக்கிருதக் கல்விக் கழகங்கள் நிலைபெறு வித்தலினுமாகத் தக்க அல்லாவழிகளிற் செய்து தம் மையுந் தம் மொழியையும் இழிவுபடுத்தித் தமக்குக் கேடு தாமே சூழ்ந்து வருகின்றனர். இவர்கள் உண் மைச் சிவனடியார்க்குங் கூன் குருடு முதலிய ஏழை கட்கும் ஒரு கைப்பிடி சோறேனும் ஒரு பழங் கந்தை யேனுங்கூடக் கொடுக்க ஒருப்படார். இவர்கள் இவ்வாறு செய்யும் அறம் அறமெனப்படாது. இது குறித்தே **மணிமேகலையில்**,

> "ஆற்றுநர்க் களிப்போர் அறவிலை பகர்வோர்
> ஆற்று மாக்கள் அரும்பசி களைவோர்
> மேற்றே யுலகில் மெய்ந்நெறி வாழ்க்கை
> மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."
>
> (11, 92-96)

எனப் போந்த பகுதி, தாமே உழைத்துச் சாப்பிடக் கூடிய உறுப்பு நலம் நிரம்பியவர்க்கு அறஞ்செய்வோர் அறத்தை விலைக்கு விற்பவராவரெனவும் ஆற்று மக்கட்கு அரும்பசி களைய உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே யாவரெனவுங் கூறுவதாயிற்று. பசி யாற் களைத்து அயர்ந்துவரும் ஏலாத முதியோர்க்கும்,

உறுப்புக் குறையுடையார்க்கும் உணவளிப்பது, அவர் கட்கு நாம் உயிரையே கொடுப்பது போலாகின்ற தன்றோ ?

ஆகவே, அம்மையார் அறஞ் செய்தமுறை மிகவும் உயர்ந்ததாதல் தெளியப்படும். இவர் பயனும் புகழுங் கருதி அறஞ் செய்தாரல்லர். அறத்தை அன்பின் வழி யாக எவர் எக்குலத்தராய் வரினும், அவர் ஏழையாக வும், சிவபிரான் மெய்யடியாராகவும் இருந்தால் அவர் கட்கு உணவு தந்து, தகுமுறையில் அவர் வேண்டிய பிறவற்றையுங் கொடுத்துவந்தார். இதை விளக்கவே சேக்கிழார் பெருமான்,

“ வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்றன் அடியாரைப் பசிதீர்ப்பே னெனநண்ணி ”

என்றும்,

‘ தம்பரிவினால் அவர்க்குத் தகுதியின்
வேண்டுவ கொடுத்தும் ’

என்றும் மொழிந்தார். இச்செய்யுட்களில் அம்மையார் சிவபிரானை உண்மை அன்போடு நினைந்துருகும் மெய்த் தொண்டர்க்கே தகுமுறையில் வேண்டுவ கொடுத்தன ரென்பது குறிக்கப்பட்டது. ஓருழைப்புமில்லாமலும், ஒருவர்க்கும் பயன்படாமலுந் திரிந்து வயிறு வளர்ப் பார்க்கு அம்மையார் அறஞ்செய்தாரல்லர். இன்னும் இவர் பசித்துக் களைத்துவந்த அம்முதியவர்க்குத் தம் கணவனுந் தாமும் உண்ணுவதற்கு முன்னமே அவர் பசிநிலை அறிந்து உணவளித்தார்.

பெரும்பாலும் நம்மவர் தாம் உண்பதற்குமுன் ஏழைகள் எவர் பசித்து எந்நிலையில்வரினும் அவர்க்குச் சிறிதுகூட உணவு தரமாட்டார். தாம் உண்ட பிறகு தான் அவர்க்கு மிஞ்சியதை இடுவர். இன்னும், எவரும் தமக்குள்ள அருமையான பண்டத்தைத் ஏழைகட்குக்

கொடார். ஆனால், அம்மையாரோ தம்மிடம் மிகவும் அருமையாக வைக்கப்பட்ட மாங்கனிகளிரண்டில் ஒன்றைக் களைத்துவந்த அம்முதியவர்க்கு உணவாக இட்டனர். இவ்வாறு அம்மையார் செய்த அறமே அன்பின்வழிப்பட்டதாகும்.

அம்மையாரும் அவர்தங் கணவனும் ஒருவர்பால் ஒருவர் மிகவும் அன்பு பாராட்டி வந்தனர். புனிதவதியார் தம் கணவனை மிகவும் விரும்பி இருந்ததினாலேயே தங் கணவன் 'இன்னுமொரு மாம்பழங் கொணர்க' என்றதும் உட்சென்று இறைவனை மெய்ம்மறந்து இறைஞ்சி அதனைப்பெற்று அவனுக்குக் கொடுத்தனர். பரமதத்தன் தம் மனைவியார் இரண்டாமுறை தந்த மாங்கனியின் உயர்ந்த தீஞ்சுவையை உணர்ந்தபின், அதனை 'எவ்வாறு எங்குப் பெற்றனை ?' என்று அம்மையாரைக் கேட்டனன். புனிதவதியார் அப்போது தாம் பெற்ற அருட்டிறத்தை உடனே தங்கணவனிடங் கூறாமல் திகைத்து நின்ற செயல்தான் பெண்களுக்குரிய மன அடக்கமென்னும் '**பேதைமை**' இயல்பாகும். பேதைமை என்பது 'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை' என்றார் **ஆசிரியர் நக்கீரனார்**. இதன் பொருள் :—பேதைமை யென்று சொல்லப்படுவது, அறிவுடையோரால் அறிவுறுத்தப்பட்டவைகளை ஏற்றுக்கொண்டு அவைகளை எளிதிலே வெளிவிடாது தக்க காலம் வாய்த்தபொழுது பிறர்க்கு அறிவித்து வெளிவிடுதலாம். அறிவுடைய பெண்மக்கள் எதனையும் ஆராய்ந்தறிந்து நேரமறிந்து சொல்லுவர். ஊழூழி காலந் தவமுயலும் தவமுடையாரும் பெறற்கரிதாம் இறைவனது பேரருட்டிறத்தைத் தாம் பெற்றதனை அம்மையார் தம் கணவனுக்கு உடனே சொல்லாது மயங்கினர் ; அதன்பின்னும் அவர் தம் கணவனுடைய அருமையான இயல்பை உணர்ந்திருந்தாலும், இன்னும் அதனை ஓர்ந்தறிந்த பின்னர்த்தான் அப்பேரருமறையை

அவனுக்குச் சொல்லக் கருதி நின்றனர். இன்னுங் கணவன் தகுதியுடையவன் அல்லனாயினும், நடந்ததை ஒளியாது உடனே தங்கணவனுக்குச் சொல்லுவதே சிறந்த மனைவியின் இயல்பாகும் என்பார் ஒரு சிலர். அது பொருந்தாது. என்னையோவெனில், மனைவியுங் கணவனும் ஒத்த இயல்பினராய் அமைந்து, அவர் தமக்குள் ஒருவர் இயல்பை ஒருவர் அறிந்திருப்பாராயின் தம் அருமறையைத் தமக்குள் வெளியிடுதல் பொருத்தமுடைத்தாம். அஃதின்றிக் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் தெளியாதவர்களாகி இருக்கும் நிலையில் அவர் அருமறைகளைத் தமக்குள் வெளியிட்டுக் கொள்ளுதலால் பெருங்கேடு விளைவது முண்டு. இது குறித்தே **ஒளவையாரும்** 'உடையது விளம்பேல்' என்பதனால் மக்கள் மனநிலையை யறிந்தே உடையதைச் சொல்லுதலும், சொல்லாமையும் வேண்டுமென்றார்.

இன்னும்,

"உருவின் மிக்கதோர் உடம்பது பெறுதலும் அரிதே"
(சீவகசிந்தாமணி, முத்தியிலம்பகம், 154)

என்றவாறு அம்மையார் பெறுதற்கரிதான பேரழகு மிகப்பெற்ற வடிவினராய்ப் பிறந்தனர். இவர்க்கு அமைந்த உறுப்புக்களின் வனப்பானது, நூல்களிற் கூறிய உறுப்பிலக்கணத்திற்கேற்ப அமையப்பெற்று அழகே கொழுந்துவிட்டொளிர்வது போலிருந்தது. இது,

"நல்லவென உறுப்புநா லவருரைக்கு நலநிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினால்"
(கா. பு. செ. 6)

என்றும்,

"அல்கிய அன்புடன் அழகின்
கொழுந் தெழுவதென வளர்வார்" (கா. பு. செ. 4)

என்றும் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்தவாற்றுல் நன்குணரப்படும். பெரும்பாலும், மிகுந்த அழகுடைய பெண்கள் தம் உடம்பழகிலே பெரிதும் இறுமாந் திருப்பர். இவர்கள் தம் மனத்தை உயர்ந்த எண்ணங் களால் அழகுபடுத்த முயல்வதில்லை. ஆனல், அம்மை யார்க்கு உடம்பழகோடு மன அழகும் சிறந்து விளங் கியது. அம்மையார் தம் உடம்பழகை ஒரு பொருட் படுத்திஞரில்லை. தம் மனம் இறைவனுணர்ச்சியில் ஈடுபட்டு அழகுபெற்று வளரவேண்டுமென்றே நினைவு கொண்டார். இன்னும், அம்மையார் தம் எழில்மிக்க வடிவத்தைத் தம் கணவனுக்குரியதாகக் கருதிஞரே யொழியத் தாம் அதனுன் மகிழ்ந்து தன்னயம் பாராட்டிஞரல்லர். இவர் தங்கணவன் இவரை வழி படு தெய்வமாக எண்ணி இவர்தம் திருவடிகளில் வீழ்ந்து வணங்கியதும், இவர் திடுக்கிட்டு ஒதுங்கி நின்று சிவபிரானை அப்போதே வேண்டித், தம் எழி லுடம்பு நீங்கப்பெற்றுப் பேய்வடிவு கொண்டனர். அம்மையார் தங்கணவன் தம்மோடிருப்பதற்கு அஞ்சி விலகிஞன் என்பதை உணர்ந்து, தாமும் அவன் தொடர்பை விலக்கித் தம்மைச் சிவபெருமானுக்கே ஆளாக்கிஞர். அம்மையார்க்கும் அவர் தங் கணவனுக் கும் இறைவனுணர்ச்சியில் மிகுந்த வேற்றுமை இருக் கின்றது. அம்மையார் உலக வாழ்க்கையில் ஈடுபட்டார் போல் பிறர்க்குக் காணப்படினும் அவர்தம் நினைவு முழுதும் இறைவனிடத்தே பதிந்திருந்தது. ஆனல் அம்மையாரின் கணவன் அருமையான இயற்கை அமையப்பெற்றவனுயிருந்தும், பொருள் தேடி உலகத் தார்க்கு இனியனுய் ஒழுகுவதிலேயே கருத்தூன்றினன். மேலும் ஒப்புயர்வற்ற தம் மனைவியாரின் கடவுட் டன்மையோடு நெருங்கிப் பழகினனல்லன். இவன் அம்மையாரைப் பிரியாமல் அவர் தெய்வ இயற்கை யோடு ஒத்துப் பழகி வந்திருப்பானுயின், அம்மை

யாரைப்போல் அவனும் அருள்நிலை வாய்க்கப்பெற் றிருப்பான். கணவன் அருள் நினைவுடையவனாயின், அவன்வழி நடத்தலே மனைவியின் கடமையாகும். மனைவி அம்மையாரைப்போற் சிறந்த அருட்டிறம் பெற்றவளாயின் அவள்வழி நடத்தலே கணவனுக்கு நன்மையாகும். இவ்வாறு ஆணென்றும், பெண் ணென்றும் வேற்றுமை பாராது எவர் அறிவாற்றலில் மிகுந்திருக்கின்றனரோ அவர் வழியைக் கடைப் பிடித்து ஒழுகுதலே அறிவுடையோர்க்கு அழகாகும்.

இன்னும், அம்மையார் தம் அழகுமிகுந்த உடம் போடு இறைவனை வணங்கினால் என்னை யென்று நினைக்கலாம். இறைவனை வணங்குவதற்கு அழகு டம்பு வேண்டுவதில்லை. உடம்பழகு இறைவனை வணங்குவதற்குக் கருவியாகமாட்டாது. அழகிலாரும் அழகுடையாரும் அவனை அழுக்கற்ற தூய மனத்தோடு வணங்கினாற்றான் அவனருளைப் பெறலாம். இறைவன் நம்மிடம் வேண்டுவது மன அழகேயாம். அம்மையார் தம்மன அழகைச் சிவபெருமானுக்கும், உடம்பழகைத் தங் கணவனுக்குமாகப் பயன்படுத்தக் கருதினர். ஆதலால், தம கணவன் தம்மோடிருப்பதை விரும்ப வில்லை என்பது அறிந்ததும், அவனுக்குப் பயன்பட வேண்டிய ஊனுடம்பின் அழகை வெறுத்துப் பேய் வடிவு பெற்றனர். உலகத்தாராற் புகழப்படுகின்ற ஊனுடம்பின் அழகைப் பெரியார் பெரிதாக நினையார். இறைவனை வணங்குவதற்கு ஏற்ற அருளுடம்பே வேண்டிநிற்பர்.

இது குறித்தே மாணிக்க வாசகர்,

'ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி'

என்றருளினர். பல அவாக்களுக்கும் இடந்தருவதான இவ்வூனுடம்பு உருகி ஒடுங்கிய பின்னர்த்தான் உள் ளத்தே அருளொளி பெருகும் என்றார் பெரியார்.

இன்னும் பெரியாரிற் சிலர் தாம் உலகத்தார் வெறுப்பனவற்றையே செய்து அவர் தொடர்பை விலக்கித் தாம் தனியராயிருந்து சிவபிராளுேடு ஒன்றுபட்ட நிலையிலிருப்பர். உலகத்தார் தம்மைப் பழித்துக் கூறுமவற்றை ஒருபொருட்படுத்தார். இதனையே மணிமொழிப் பெருமான்,

'நாடவர் பழித்துரை பூண் அதுவாகக் கோணுதலின்றி'

என்ருர் திருவாசகத்தில்.

அம்மையார் தாம் எழில்மிக்க உடம்போடிருந்தால் வெளியே நினைத்த இடங்கட்கெல்லாம் போய்ச் சிவபெருமானை வணங்குவதற்கு இடையூருகுமென்றும் உலகத்தார் தொடர்பை அறவே நீக்கவேண்டுமென்றும் பேய்வடிவு பெற்றனர். அம்மையார் வெளியே பல இடங்கட்குப் போகத் தக்கவாறு ஒரு கிழவி வடிவம் வேண்டிப் பெற்ருல் என்னை? இவர் ஏன் பிறர் அஞ்சி ஓடத்தக்க பேய்வடிவு பெறல்வேண்டுமென்று சிலர் நினைக்கலாம். ஆனல், ஒரு மன்றமொழிக்காரனை (மந்திரக்காரனை)க் கண்டாலே அவனை நூற்றுக் கணக்கான மக்கள் சூழ்ந்துகொள்கின்றனர். மற்றும் உண்மையில் இறைவனருள்பெற்று, அவனருளால் மக்கள் இழந்த உயிரையும் திரும்ப அழைத்துத் தரவல்ல பெரியோர்களைக் கண்டால் மக்கள் பதினுயிரக் கணக்காய் அவர்களைச் சூழ்ந்துகொண்டு தம் இறந்த உற்ருர் பெற்ருர் மக்களையும் எழுப்பித் தருமாறு இரந்து நிற்பரல்லரோ? இவ்வாறு மக்கட்கூட்டம் மிகுதிப்பட மிகுதிப்பட பெரியார் தனித்திருந்து மன அமைதியோடு இறைவனை வணங்க இடம்பெருது வருந்துவர். இதனுலேயே மக்கட் கூட்டத்தினிடையே யிருந்து, இறைவனருளின் திறத்தை அவர்கட்கு அறிவிப்பான் வேண்டித் தம் ஐந்தாவது ஆண்டில் வலிய சமணர்களை

வழக்கில் வென்றும், எலும்பைப் பெண்ணுருவாக்கியும் இவைபோன்ற இன்னுஞ் சில அருள் நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டிய திருஞானசம்பந்தப் பெருமானும் மக்கட் கூட்டத்தினிடையே நீண்டகாலமிருந்து நெருக்குண்பதற்கு விருப்பமில்லாமலன்றோ தம் பதினாறுவது ஆண்டிலேயே இறைவன்றன் அருள் ஒளியிற் கலந்தனர்? இதுபோலவே பெரியாரிற் பலர் இறைவனருள் தமக்குக் கிட்டியதும், வாய்பேசாமல் இயங்கியும், மக்கள் வெறுப்பனவற்றைச் செய்தும், தனித்திருந்து தவஞ்செய்தும், மக்களைத் திருத்துவான் வேண்டி அவர்களிடையே சில காலமிருந்து இறைவன் அருள் நிகழ்ச்சிகளைக் காட்டியும், இவ்வாறு அவர்கள் சில காலமே இம்மண்ணுலகிலிருந்து பின் இறைவனோடு கலந்தனர். ஆதலின் அம்மையார் கிழவி வடிவம் பெற்றிருந்தாலுங்கூட மக்கள் தொடர்பு மிகுதிப்படும்; அத்தொடர்பை அறவே விலக்கவேண்டுமென்றே பேய்வடிவு பெற்றனர்.

இன்னும்,

"கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன்று ஓடுவார்கள்
கொண்டதோர் வேடத்தன்மை உள்ளவா கூறகேட்டே
அண்டர்நா யகனார்என்னை அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்களுக்கு யான் எவ்வுரு வாயென்
னென்பார்" (கா. பு. 54)

என்று இவ் அழகிய செய்யுளிற் சேக்கிழார் பெருமான் குறித்தவாறு தம் பேயுருவைக் கண்டு அஞ்சி ஓடுகின்றார்கள் என்று பிறர் கூறக்கேட்டு அம்மையார் உலகங்கட்குத் தலைவனாகிய இறைவன் என்னை அறிந்தாற் போதும்; உலக மக்களுக்கு யான் எந்த உருவில் எவ்வாறு இருந்தால் என்னை? என்றார். இதனால் இறைவனுக்கு நம் அன்பின் அழகே சிறந்ததென்று அம்மையார் கூறுவதால் நம் பெண்மக்கள் இறைவனை

வணங்கக் கோயிலுக்குப் போம்போது தம் உடம்பை விலையுயர்ந்த ஆடை அணிகலன்களால் அழகுபடுத்தாமல், தம் உள்ளத்தை நல்ல நினைவுகளால் அழகு படுத்திக்கொண்டு விலை குறைந்த தூயஆடை அணிந்து செல்லவேண்டுமென்பது பெறப்பட்டது.

அம்மையார் கொண்ட பேய்வடிவம், மற்ற இழிந்த உலகப் பேய்களோடு சேர்க்கப்படுவதன்று. அவர் கொண்ட பேய்வடிவம் அருள் நிரம்பியதாகும். உடம்பின் மிக்க அழகு நீங்க அம்மையார் தந் தவத்திரு உடம்பின் எலும்புகள் வெளியே காணப்பட்டுத் தோற்றம் குன்றியதனுலேயே அவர்க்குப் '**பேயம்மையார்**' என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

இன்னும், அம்மையார் தாம் குழவியாய் நின்ற காலத்திற் பேசத் தொடங்கியபோதே இறைவனிடத்து அன்பு மிக்கு இறைவன் பெயரையே முதலாகச் சொல்லத் தொடங்கினுர் என்பதைச் **சேக்கிழார் அடிகள்,**

"வணிகர் பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரு மொழிபயின்றுர்"

(கா. பு. 3.)

என்று கூறியுள்ளார். அம்மையாருந் தாமியற்றிய **அற்புதத் திருவந்தாதியில்** தாம் சொற் சொல்லத் தொடங்கிய காலத்திருந்தே சிவபிரானிடத்துப் பேரன்பு கொண்டார் என்பதைப்,

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்"

(செ. 1.)

என்னுஞ் செய்யுளால் விளக்குகின்றனர். இவர் பிள்ளைமைக்காலத்தே விளையாடிய விளையாட்டுக்களி லெல்லாம் இறைவனுணர்ச்சியே நிரம்பப் பெற்றிருந்ததைக் குறித்து,

"வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணையவருவன பயின்று"
(கா. பு. செ. 5)

என்று **சேக்கிழார்** பெருமான் கூறினர். அம்மையார் சிறிய ஆண்டிற் கைக்கொண்ட உயர்ந்த பழக்கமே, தாம் வளரும்போதெல்லாம் உடன் வளர்ந்து இறைவனுண்மையை அறிவதற்கு வழிகாட்டியாயிற்று.

அம்மையாரது தந்தையாராகிய தனதத்தனுக்குங் கடவுளிடத்தன்பும் வாய்மையும் உடையவராகலின், இவரது நற்பழக்கமே அம்மையார்க்குங் குழவிக் காலத்திலேயே பதிவதாயிற்று. 'தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டும்' என்னும் பழமொழிக்கு ஏற்பக், குழந்தைகள் தாம் சிறிய ஆண்டிற் கைக்கொள்ளும் பழக்கங்களே அவர்தம் பிற்கால வாழ்க்கையின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் ஏதுவாகும். நம் தாய்மார்கள் தமக்குப் பிறக்கும் பிள்ளை பெண்ணுயிருப்பினும், ஆணுயிருப்பினும் அவ் இருதிறத்தாரிடத்தும் வேற்றுமை காணுது கல்வி கற்பித்தல் வேண்டும். தம் பிள்ளைகள் பேசத் தொடங்கும்போதே அவர்கட்கு நன்மைதருஞ் சொற்களையுஞ் சொற்றொடர்களையுஞ் சொல்லித் தருதல்வேண்டும். இவ்வுயர்ந்த முறையை விட்டு அவர்கட்கு, 'அம்மாவைத் திட்டு; அண்ணனை உதை; ஆத்தாளை ஏசு' என்று சொல்லித் தருதல் கூடாது. இக்கெட்ட பழக்கம் பிள்ளைகளின் அறிவைக் கெடுக்கும். ஐரோப்பியர்களின் பெருந்தொகையினரான பெண்மக்கள் கற்றறிவுடையவர்களா யிருத்தலின், அவர்கள் தம் பிள்ளைகளை வளர்க்கும் முறை மிகவும் உயர்ந்த பயன் தருவதாய் இருக்கின்றது.

அவர்களின் பிள்ளைகள் பேசத் தொடங்கும் காலத்திலேயே தாய்மார்கள் தம் கொள்கைக்குத் தலைவராகிய ஏசுநாதரைப்பற்றியும் இறைவனைப் பற்றியும் கற்பிப்பதோடு, அவர்கள் தம் உடைகளை அழுக்குப் படியாமல் வைக்கவும், அவர்கள் உணவு கொள்ளும்போதும், உறங்கப் போம்போதும் இறைவனை வணங்கவும் கற்பிக்கின்றனர். நம் தமிழ்நாட்டுத் தாய்மார்களுந் தாம் கல்வி கற்பதில் ஊக்கமுடையவர்களாதலோடு, தம் பெண் மக்களையும் அம்மையாரைப்போல் உயர்ந்த தவப் பெண்மணிகளாக்க முயலுதல் வேண்டும்.

இன்னும் எல்லாம்வல்ல சிவபெருமானே அம்மையாரைக் கண்டு மகிழ்ந்து அவரை 'அம்மையே' என்று சிறப்பாக அழைத்தானெனில், அவரது அளவிலா அருட்சிறப்பை நாம் எவ்வளவு எடுத்துச் சொல்லினும் போதாதாகும். அம்மையார் தலையாலே நடந்து சென்று இறைவனருள் தலைக்கூடிய இடம் **திருவாலங்காடாதலின்**, அவ் ஊர்க்குத் **திருஞானசம்பந்தப் பெருமான்** சென்றபோது, அவ் ஊரை மிதிப்பதற்கு அஞ்சி ஊர்ப்புறம்பே நின்று ஆலங்காடனைப் பாடி வழிபட்டுச் சென்றாராம். அம்மையார் இறைவனிருக்கும் வெள்ளிமலையின்மீது தம் தலையினாலே நடந்து போனபோது அப்பன் அம்மையை நோக்கி, '**அம்மையே**' 'உனக்கு என்ன வரம் வேண்டு'மென்று கேட்க,

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து
[பாடி
அறவாநீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க
[வென்றார்" (கா. பு. 60)

இச் செய்யுளிற் குறிப்பிட்டவாறு அம்மையார் எப்

போதும் சிவபெருமானை வணங்குவதற்கு நிலைபெற்ற இன்பமாகிய அன்பும், பிறவாமையும். அங்ஙனம் பிறந்தாலும், எக்காலமும் இறைவனை மறவாமையும், இன்னும் அவனடிக் கீழிருந்து வணங்கிப் பாடிக்கொண்டிருக்கும் மகிழ்ச்சியும் வேண்டுமென்றார். அம்மையார் இறைவனருள் பெறுதல் ஒன்றையே வேண்டி நின்றாரே ஒழியப்பிறிதோர் உலக இன்பத்தையும் வேண்டினாரில்லை. நாம் இறைவனை வணங்குவதெல்லாம் பெருஞ் செல்வ வாழ்க்கையில் இருக்கவும், மக்கள் உற்றார் பெற்றாரோடிருக்கவுமேயாகும்.

இன்னும் அம்மையார் அறிவு நூல்கள் கற்கும் உயர்ந்த முறையிற் பழகினமையினாலே அவர் உணர்ச்சி துவக்கத்திலேயே பிறவாயாக்கைப் பெரியோனாகிய சிவபிரான் ஒருவனையேபற்றி நின்றது. இவர் மற்றத் தெய்வங்களை வணங்காது எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் பொருளையே வழுத்தலாயினர் என்பது,

"ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றே என் உள்ளத்தின் உள்ளடைத்தேன்—
ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது" (செ. 11)

என்றும்,

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாயம்
அப்பொருளுந் தானே அவன்" (செ. 20)

என்றுந் தாமியற்றிய அற்புதத் திருவாந்தாதியிற் கூறியுள்ளார்.

"மற்றோர் தெய்வம் கனவிலு நினையாது"

என்று **மணிமொழிப் பெருமான்** அருளியவாறு, அம்மையார் எல்லாம் வல்ல அழிவில் பொருளாகிய சிவபிரான் ஒருவனையே தம் உள்ளத்தே இருத்தி வணங்கினார். 'இறைவன் ஒருவனே எல்லாப் பொருள்களையும் அறிபவன்; அப்பொருள்களை நமக்கு அறிவிக்கின்றவனும் அவனே: நமதறிவுக்கு அறிவாய் உள்நின்று அறிபவனும் அவனே; நாம் அறியவேண்டுமென்கிற மெய்ப்பொருளும் அவனேயாகின்றான்; ஞாயிறு, திங்கள், தீ, உலகம், வெள்ளி முதலான எல்லாந் தானேயாகி நிற்கின்றான்' என்னும் இறைவனுண்மையைத் தெளிவாக மேற்குறிப்பிட்ட செய்யுளில் விளக்கி அருளினர். இவ்வாறு இறைவன் ஒருவனே எல்லாப் பொருள்களுக்குந் தலைவன்; அவனருளே நமக்கு வேண்டும்! அவனையே அல்லும் பகலும் நினைந்துருகுவார்க்கு அவர் வேண்டியதை அவர் வேண்டியவாறே கொடுப்பான் என்பது விளக்கிக் காட்டினர்.

இன்னும், தம்பிரான் தோழரான **சுந்தரமூர்த்தி அடிகள்** தமக்கு வேண்டுவனவெல்லாம் பிறரைக் கேளாது இறைவனிடத்தே உருகிக்கேட்டுப் பெற்றது போல், அம்மையாருந் தாம் வேண்டிய வெல்லாம் இறைவனிடத்தே வேண்டிப் பெற்றனர். எவ்வாறெனில், தம் கணவன் 'இன்னுமொரு மாம்பழம் கொணர்க' என்றதும், அம்மையார் அதைப் பிறரிடங் கேளாது எல்லாந் தரவல்ல இறைவன் ஒருவன் உளன்; அவன் தமக்கு வேண்டியவற்றைத் தந்து உதவுவான் என்ற உறுதியான எண்ணத்தோடு அவனையே அகங் குழைந்து வேண்டிப் பெற்றனர். இவ் உரம் பெற்ற உயர்ந்த எண்ணம் இறைவன்பால் நமக்கு உண்டாதல் ஒரு சிறிதும் இல்லையே' நாம் வேண்டுவன வெல்லாம் உற்றார், பெற்றார், கணவன்மார், நண்பர் ஆகிய இவர்களிடமன்றோ கேட்க முயற்சி செய்கின்றோம்! நாம் கேட்பவற்றை மேற் குறிப்பிட்டவர்களே தரவல்லார்

எனப் பிழைபட நினைந்து அவர்களிடத்தே பேரன்பு கொள்கின்றோம். இவ்வாறு இவர்களைக் கேட்பது பயனில்லாமை குறித்தே,

" தம்மையே புகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தருஞ் சோறுங் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே "

என்று **சுந்தரமூர்த்தி அடிகளும்** திருவாய் மலர்ந்தருளினர். இவ்வாறு இறைவன் ஒருவனே எல்லாப் பொருள்களுக்குந் தலைவன்! அவனருளே நமக்கு வேண்டும். அவனை அல்லும் பகலும் நினைந்துருகுவோர்க்கே அவன் துன்பங்களைவான் என்பதும் நன்றாகக் காட்டினர். நம் நாட்டுப் பெண்மக்கள் அம்மையார்போல் இவ் உயர்ந்த இறைவனுணர்ச்சி ஒரு சிறிதும் வரப் பெறாமல்,

" செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
பத்தி செய்மனப் பாறைகட்கு ஏறுமோ "

என்று **அப்பரடிகள்** அருளியவாறு, தம்மைப்போல் பிறந்து உழன்று இறக்கும் சிற்றறிவுடைய நிலையில்லா உயிர்களின் ஆவிகளையே தாம் வழிபடு தெய்வங்களாகப் பிழைபட எண்ணி, அவ் இறந்தொழியும் உயிர்கட்காக உயிர்க்கொலை புரிந்தும், அவற்றின் ஊனை உண்டும், இன்னும் இவைபோன்ற பல அறிவில்லாக் கொடுஞ் செய்கைகளைப் புரிந்துந் தீவினைக்கு உள்ளாகின்றனர். நாம் எவ்வகையான நூல்களைக் கற்கின

றனமோ அவ்வகையான நூல்களிற் கூறியிருப் பனவற்றையே கையாள எண்ணமுறுவோம். நாம் கற்கும் நூல்களின் பொருள்களுக்கேற்பவே நம் அறிவு வளர்ந்துங் குறைந்துந் தோன்றும். இது குறித்தே,

"தாங்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு"

என்று ஔவையாரும்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாருங் கூறினர். நம்மவரிற் சிறிது படிக்கத் தெரிந்த பெண்கள் முயற்சி எடுத்து அறிவு நூல்களைக் கற்க விரும்பாமல், தம் மனத்தை வீண் எண்ணங்கட்குந், தீயவழிகட்கும் ஆளாக்கும் 'விக்கிரமாதித்தன் கதை,' 'அல்லி அரசாணி மாலை,' 'பவளக்கொடி மாலை,' 'ஏணியேற்றம்,' முதலிய பயனற்ற நூல்களைக் கற்பதில் அல்லும் பகலுஞ் செலுத்துகின்றனர். இன்னும் பெண்மக்களிற் சிலர் நானே கடவுளென மறைபொருளாய்க் கூறும் 'கைவல்லியம்,' 'ஞானவாசிட்டம்' முதலிய இறைவ னுண்மை அறியாத போலி வேதாந்தம் அல்லது மாயா வாத நூல்களைக் கற்கின்றனர். இன்னுமொருசாரார் கல்வியறிவு ஒரு சிறிதும் இன்றித் தம் குலக்குருக்கண் மாரிடம் 'தீக்ஷை' பெற்றுக்கொண்டோமென்று இறு மாந்து இறைவனுணர்ச்சி ஒரு சிறிதும் அறியாமலிருக் கின்றனர். 'தீக்ஷை' என்னும் சொல்லுக்குப் பொருள் அருள்வயமாக்கல் (தீக்ஷை—தீ—கொடுத்தல்; க்ஷை—மெய் யறிவை நல்கி அறியாமையை நீக்கல்) என்பதாகும். தம் இறைவனைப்பற்றித் தாம் தெளியாத உண்மை களைத் தம்மினுங் கல்வி அறிவும், மெய்யுணர்வும் மிக்க ஆசிரியன் ஒருவனால் தெளிந்து இறைவனடையாளக் குறிகளைத் தம்மேற் பொறிப்பித்து, இறைவனை வழி

படுமுறையையும் அறிந்து அறிவு பெறுதலே 'தீக்ஷை' யாகும். நாம் எது செய்யினும், எது கற்பினும் அதனால் நாம் அறிவும் நன்மையும் அடைதல்வேண்டும். நாம் நூலறிவு ஒரு சிறிதுமின்றி இறைவனியல்பையும் அவனை வழிபடு முறையையும் அறிதல் முடியாது. அளவு கடந்த நூல்களைக் கற்றாருள்ளும் பலர் கடவுளுண்மை அறியாது மயங்கினாரென்றால், அவனையும் அவனருட்டிறத்தையுங் கனவிலும் கண்டுங் கேட்டுமறியாத நம் பெண் மக்கள் தீக்ஷை பெறுவது ஒன்றான் மட்டுந் தாம் கடவுளுண்மை யறிந்து அறிவுடையராதல் கூடுமோ? கூறுமின்கள். முழுமுதற் கடவுளின் அருட்டன்மையினை உணர்த்தும் ஐந்தெழுத்தாலாகிய **சிவாயநம** என்னும் ஐந்தெழுத்தின் (பஞ்சாக்கரத்தின்) உண்மைப் பொருளொன்றும் விளக்காமல் அதைப் பலமுறை ஓதிச் சில செய்கைகளையும் உடன் சேர்த்துச் செய்யுமாறு குருக்கண்மார் நம்மவர்கட்குக் கற்பிக்கின்றனர். இவ் ஐந்தெழுத்துண்மையைத் தீக்ஷை வழியாகப் புகட்டத் தோன்றிய இக்குருக்கண்மார்களிற் பலர் பேரறிவாளர்களல்லர்: இவர்தாமும் இவர்கள் மாணாக்கர் போல் உயர்ந்த நூலுணர்ச்சி யில்லாத் தம் ஆசிரியன்மார்களிடம் அதனைப் பயின்றவர்களேயாவர் இவ்வாறு தீக்ஷை பெற்றுத் திருநீறு இடும் பெண் மக்கள், சிறிது கல்வியறிவோடு அதன் பொருளும் அறிந்து, அதனைச் செய்வார்களாயின் மிகவும் நன்றாகும். **தேவார திருவாசகங்களைப்** பொருள் தெரிந்து வாய் விட்டுப் பாடி அதனால் இறைவன்பால் உள்ளமுருகிக் கண்ணீருங் கம்பலையுமாய்த், தம்மை மறந்து நிற்கு நிலையே மிகவும் உயர்ந்ததாம். இதுவே இறைவனருளைப் பெறுதற்கு ஏற்ற வழியாம் என்பது **திருவாசகத்திற்** போந்த,

"ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை என்புருகிப்
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர்

சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை துணையிலி பிணநெஞ்சே
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை செய்வதொன்
றறியேனே "

என்ற திருப்பாட்டானும் நன்கு விளங்கும்.

இறைவனை நேரேகண்டு அவன் பேரருட்டிறத்தை வியந்து 'கனலிடைப்பட்ட மெழுகுபோல்' அன்பால் நெஞ்சம் உருகித் **திருவாதவூரடிகள்** திருவாய் மலர்ந் தருளிய **திருவாசகத்**திலுள்ள ஒருமொழியே நம்மையும் இறைவனையும் ஒன்றுபடுத்தும் என்பது,

"வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே என்னையும்என் னுடையனையும்
ஒன்றுவித்துத்
தருமொழியா மென்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பிஅயல் கூடுவதேன் கூறுதியே"

என்று **இராமலிங்க அடிகள்** அருளிச்செய்த வாற்றுலும் விளங்கா நிற்கும்.

பெண்மக்கள் நூலறிவோடு கூடிப்பெறுகின்ற தீக்ஷை'யைக் குறைகூற முன்வரேன். ஆனல் இக் காலத்தில் தீக்ஷை மட்டும் பெறும் முறையின் நன்மை மிகச் சிறியதாகவும், தீக்ஷையுடன் **தேவாரம், திருவாசகம் பெரிய புராணம்** முதலிய அருள் நூல்களைக் கற்றறித லால் வரும் பயன் மலையினும் மிகப் பெரிதாகவும் இருத்தலாற், பெரு நன்மை விளையக்கூடியதை நாம் கைப்பற்ற வேண்டுமென்பதே என் கருத்தாகும். பெண் மக்களின் அறிவின் குறைபாட்டை உற்று நோக்கியே அவர்களைப் **பட்டினத்தடிகள், தாயுமான அடிகள்** முதலியோர் இழித்துப் பாடினர். இவ்வாறு நம்மை இழித்துப் பேச இடந் தந்தவர்கள் நாமே. மேற் குறிப்பிட்ட அம்மையார் போன்ற தெய்வப் பெண்மணிகளை அவர்கள் எவ்வளவு பாராட்டி

வணங்கி யிருக்கின்றார்கள். எல்லாம் வல்ல இறைவனே அம்மையாரைப் பாராட்டி அவரை 'அம்மையே!' என்றழைத்தானல்லனோ? உலகன்னையாகிய உமையம்மையே, மிக உழன்று தலையினாலே தாமிருக்குமிடத்திற்கு வரும் புனிதவதியாராங் காரைக்காலம்மையாரைக் கண்டு வியந்து,

"அம்பிகை திருஉள் ளத்தின் அதிசயித் தருளித் தாழ்ந்து
தம்பெருமானை நோக்கித் தலையினால் நடந்திங் கேறும்
எம்பெரு மானோர் எற்பின் யாக்கைஅன் பென்னே என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு நாயக னருளிச் செய்வான்."
(கா. பு. 57)

என்று இறைவனைக் கேட்டனர். ஆதலால், பெண் மக்களாகிய நாம் அம்மையார்போல் அறிவிலும், இறைவனை யுணரும் மெய்யுணர்ச்சியிலும் மேம்பட்டு வருவோமாயின் ஒருவரும் நம்மைக் குறைகூறுவாரல்லர்; நம் பிறவியும் தூயதாய் விளங்கும்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

# 2. திலகவதியார்

திருமுனைப்பாடி நாட்டின் ஒரு பகுதியிலே திருவாமூர் என்னும் ஓர் ஊர் உளது. முன்னாளில் இவ்வூர் நீர்வளம் நிலவளம் முதலிய பல வளங்களால் நிறைந்து விளங்கியது. இவ்வூரில் வேளாளர் மரபிற் புகழனார் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். இவர் சிவபிரானை உள்ளன்போடு வணங்கும் பெருந்தகையார். இப்பெரியார் தம் இயற்கைக்கு இசைய அவர்க்கு மாதினியார் என்னும் மாசுஅற்ற மனைவியார் வாய்த்தனர். இவ்விருவரும் நீண்டநாட் செய்த தவத்தின் பயனாக, இவர்கட்குத் திருமகளே ஓர் உருவெடுத்தாற் போன்ற ஒரு பெண் மகளார் பிறந்தார். இவருக்குத் திலகவதியார் என்று பெயரிடப்பட்டது. இவர்க்குப் பின் மருணீக்கியார் என்னும் ஓர் ஆண் புதல்வரும் பிறந்தனர்.

அம்மையார் கல்வியிலும், அழகிலுஞ் சிறந்து வளர்வாராயினார். இவர்க்குப் பன்னிரண்டாம் ஆண்டு நெருங்கியதும், இவர்தம் தாய்தந்தையர் இவருக்கேற்ற மணமகனைத் தேடுவாராயினர். புகழனார் கருத்தின்படியே, சிறந்த ஆண்டகைமையும் பேரழகும் அமையப்பெற்றவராகிய கலிப்பகையார் என்பவர்க்குத் திலகவதியாரை மணஞ்செய்விக்க எண்ணி அறிவுடையார் பலர் வந்து புகழனாரைக் கேட்டனர். புகழனாரும்

கலிப்பகையாரது பேராற்றலையும் உயர்ந்த இயல்பினையும் பாராட்டித் தம் மகளாரை அவர்க்கே மணமுடிக்க உறுதி செய்தனர். இவ்வாறு உறுதிசெய்த சில நாட்களுக்குள், அவ்வூர் அரசன்மேல் வடநாட்டினர் பகை கொள்ளலாயினர். இதுகண்ட அவ்வரசன் பகைவர்களை வெல்லும் பேராற்றலுடைய கலிப்பகையாரை அப் போர்க்குப் போமாறு கட்டளையிடக், கலிப்பகையாரும் தம் வேந்தனுக்குத் துன்பம் நெருங்காதவாறு பெரும் படை திரட்டிக்கொண்டு அவன் பகைவரது நாடு நோக்கிச் சென்றனர்.

அந்நாளில் புகழனார் நோய்வாய்ப்பட்டு வருந்தி இம் மண்ணுலக வாழ்வு நீத்தனர். இவ் அளவிலாத் துயரம் பொறுக்கமாட்டாத மாதினியாருந் தங் கணவனாருடன் விண்ணுலகேகினர். தாயுந் தகப்பனும் அற்ற திலகவதியாரும், அவர்தந் தம்பியாராகிய மருணீக்கியாரும் பெருந்துயரில் ஆழ்ந்திருந்தனர். இவ்வாறு இவர்கள் துயருழந்து வாழுநாளிற் போர் மேற் சென்ற கலிப்பகையாரும் செருமுனையில் உயிர் துறந்தார் என்பது கேட்டு, ஐயகோ! திலகவதியார் கனலிடைப்பட்ட புழுவெனத் துடித்துப் பதறித் தம் உயிரையும் அவரோடு இசைத்து விடுவதே சிறந்த முறை என்று எண்ணினர். ஆனால், மருணீக்கியார் திலகவதியார் திருவடிகளில் வீழ்ந்து, 'தமக்கையே! எம் அன்னையுந் தந்தையும் ஒருங்கிழந்தேன்; ஆயினும், நீர் எனக்குப் பெருந்துணையாயிருத்தலாலே அத் துன்பம் ஒருவாறு ஒழிந்து வாழ்கின்றேன்; நீர் என்னைத் தனியே விட்டு உயிர் நீங்குவீராகில் உமக்கு முன் யானும் துயிர்துறப்பேன்' என்று அலறிப் புலம்பினர். அம்மையார் தம் தம்பியார்க்காகப் பேரிரக்கங்கொண்டு உயிர்தாங்கி வீட்டிலிருந்தே சிவபிரானை உள்ளன்போடு உருகி வணங்கிவருவாராயினர்.

இவர் இவ்வாறிருக்கத், தம்பியாராகிய மருணீக்கியார் கவலை ஒழிந்து வாழுநாளில் உலக நிலையாமையை உணரத் துவங்கி, இவ் உலகப் பற்றின்றி ஆங்காங்குக் குளங்கள் வெட்டுதல், தண்ணீர்ப்பந்தர் அமைத்தல், ஆகிய பல அறங்கள் செய்வதில் முனைந்து நின்றார். இன்னும், நிலைபெறுதலில்லாத உலகவாழ்க்கையைப் பொய்யெனக் கருதி அதனைத் துறந்து பாடலிபுத்திரம் என்னும் ஊருக்குச் சென்று, ஆங்குள்ள சமண மடத்திற் சார்ந்தார். கொல்லாமை மறைந்துறையும் அச்சமண சமய நூல்களெல்லாம் முற்றக் கற்றனர். இச்சமணக் கொள்கையே வீடுபேற்றினை அடைதற்கு ஏதுவாமெனப் பிழைபட உணர்ந்து, அவர் அச்சமணக் குறிகளுந் தாங்கித் தமது புலமைத் திறங்கண்ட சமண் குருக்களாற் பெரிது கொண்டாடப்பட்டு அவரால் தருமசேனர் என்னும் பட்டப்பெயரும் பெற்று அவர்கட்குத் தலைமை யாசிரியராய் அமர்ந்திருந்தனர்.

இவர் இவ்வாறிருக்கத், திலகவதியார் தம் சுற்றத் தொடர்பை அறவே ஒழித்துத் தனித்திருந்து தூயசிவ நெறி சேர்வதற்கு எண்ணினார். இவ்வுலகப்பற்றை அறவே களைபவனாகிய சிவபிரானிடத்து அளவில்லாத பேரன்பு பெருக அம்மையார், திருவதிகை என்னுந் திருக்கோயிலுக்குப் பணிசெய்யப் போய்ச் சேர்ந்தனர். அம்மையார், அன்று முதற் சிவ அடையாளங்கள் தாங்கி அத்திருவதிகையில் எழுந்தருளியிருக்கும் செம் பவளக் குன்றனைய சிவபிரானை அகங்குழைந்து பரவி வருவாராயினார். அம்மையார் அத்திருக்கோயிலில் அலகிடுதல், மெழுகுதல், மலர்கொய்தல், மாலைகட்டல் முதலான திருத்தொண்டுகளைத் தாமே நாடோறும் செய்துவருவாராயினார். அம்மையார் இவ்வாறு இறைவனுக்குத் தொண்டு செய்வதிலும், அவனை ஓயாது வணங்குவதிலுங் காலங்கழித்து வரும்போது அவர்க்கு ஒரு பெருங் கவலையிருந்தது; அது தம்

தம்பியார் உண்மை நெறியல்லாத சமணக் கொள்கையைக் கைக்கொண்டு சிவபிரானை மறந்து தம் வாழ்நாளை வீணை போக்குவதாலெழுந்ததேயாம். அம்மையார் தம் தம்பியாரது பெருங் குறைபாட்டினை நீக்கி அவர் சிவபிரானிடத்துப் பேரன்பு கொள்ளுமாறு எவ்வளவோ முயன்றும் அது பயன்படாதொழிந்தது. முடிவில் ஒருநாள் **திலகவதியார்** எல்லாம் வல்ல தந்தையாகிய சிவபெருமானை நோக்கி, 'வினைகெட அருளும் ஐயனே! எளியேனுக்குப் பின் வந்தவனைச் சமணப் படுகுழியினின்றும் எடுத்தாளவேண்டும்; அக்கத்திற் பாயிடுக்குதலும், மயிர்பறித்தலும், நின்றுண்ணுதலுமாகிய இவைகளே தவநெறியாமெனப் பிழைபடக் கருதும் என் தம்பிக்கு மெய்யுணர்வு தந்தருள்க' என்று பலமுறை நைந்து வேண்டினர். இவர் வேண்டுகோளுக்கிரங்கிச் சிவபிரான் அவரது கனவிடைத் தோன்றி, 'அம்மையே உன் மனக்கவலை ஒழிப்பாயாக; உன் தம்பிக்குச் சூலைநோய் தந்து அவனை ஆட்கொள்வோம்' என்றருளினர். திலகவதியாரும் அப்பனருளுரை கேட்டு ஒருவாறு ஆறுதலடைந்திருந்தார்.

ஒருநாள் சமண்பள்ளியிலிருந்த மருணீக்கியார்க்குத் திடீரென அளவிடப்படாத பெருந்துன்பத்தை விளைக்கின்ற சூலைநோய் வயிற்றினிடையே தோன்றியது. அனற்பிழம்பே ஓர் உருவெடுத்து உருளுவது போல், தருமசேனரது வயிற்றில் அச்சூலைநோய் மேலும் மேலும் ஓங்கி எழுந்து அவர் குடரை முறுக்கித் துன்புறுத்தியது; நஞ்சு தலைக்கேறியதுபோல் தருமசேனர் அந்நோய் பொறுக்க மாட்டாராய் மயங்கி வீழ்ந்தனர். இவரது துன்ப நிலைமையைக் கண்ட சமணர்கள் விரைந்து ஓடிவந்து தருமசேனர்க்கு இக் கொடிய நோய் எவ்வாறு வந்தடைந்தது? இனி இதற்கு யாது செய்வோமென்று துயருழந்தனர். சமணர்கள் தம்மறைமொழிகளாலுஞ் செயல்களாலும்

தருமசேனரது நோய் நீங்க எவ்வளவோ முயன்றும் அம்முயற்சி பயனில்லாது போயிற்று. சமணர்கள் தீர்க்கும்முறை ஏது செய்யினும், அம்முறையில் அந் நோய் அடங்காமல் மேன்மேலும் மூண்டெழுவ தாயிற்று. இதுகண்டு சமணர்கள் பெரிதுந் தளர்வுற் றுத் தருமசேனரைக் கைவிட்டுச் சென்றனர்.

தருமசேனரும் இந்நோய்த் துன்பத்தினின்றும் பிழைக்க வழியறியாராய்ப் பெரிதுங் கலங்கித் தம் அருமைத் தமக்கையாராகிய திலகவதியாரை நினைத் தார். இச்செய்தியை அம்மையார்க்கு உடனே உணர்த்த அவரிடம் ஓர் ஆள் விடுத்தனர். அத்தூதுவன் போய்த் திருவதிகையை அடைந்து திலகவதியாரை வணங்கி, "அம்மையே! உமக்கு இளையார் தம் ஏவலினால் இங்கு வந்தேன்" என, அம்மையார் அவனை நோக்கி, "என் இளையானுக்குத் தீங்கு உளதோ" என்று கேட்டார். அதற்கவன், "தவத்திரு அம்மையே! உமது தம்பியார் நஞ்சினுங் கொடிதாய்த் துன்பஞ் செய்கின்ற சூலை நோயால் அளவின்றித் துன்புறுகின்றார். எவ்வளவோ தீர்க்குமுறைகள் செய்தும் அந்நோய் சிறிதுந் தணி யாமை கண்டு சமணர்களும் அவரைக் கைவிட்டகன்ற னர்; இச்செய்தியை தங்கட்கு அறிவிக்கவே என்னை ஈண்டு விடுத்தனர்" என்றலும் அம்மையார், "நன் னெறி யறியாத சமண்பாழிக்கு யான் வரேனென்று என் தம்பிக்குச் சென்று உரைப்பாயாக" என்று கூறினர். அவனுந் திரும்பிச் சென்று அம்மையார் கூறியதைத் தருமசேனரிடம் உரைத்தான். அவன் கூறியது கேட்டவுடன் தருமசேனர் இனி என் செய்வோமென்று பெரிதும் அயர்வடைந்து சிவபெரு மானருள் கைகூடுதலால், "என் தமக்கையாரை எவ்வகையிலுஞ் சென்று காண்பேன்; அவரைக் காணுதலால் இக்கடுந்துயர் ஒழியப் பெறுவேன்" என்று உறுதி செய்து சமண அடையாளங்களை

அறவே ஒழித்து, வெள்ளாடை உடுத்து அப்போதே புறப்பட்டுத் திருவதிகை போய்த் திலகவதியார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, 'நங்குலஞ்செய்த தவத்தின் பயன் அனையீர்! தமியேன் உடல் கொடுஞ் சூலை நோயால் பெரிதுந் துடித்து வாடி மடிகின்றது; இனி யான் மயங்காது கரை ஏறும் வழி அருளல் வேண்டும்' என உரைத்தார். தம் திருவடிமேல் விழுந்த தம் தம்பியாரைத் திலகவதியார் நோக்கிச், "சமணப் படுகுழியில் வீழ்ந்த அறியாமையால் இத் துன்பம் அடைந்தாய்; எழுந்திருப்பாயாக; எல்லாம் வல்ல சிவபெருமானருளால் இச்சூலை நோய் வரப் பெற்றாய்; ஆதலால், அவனடிபணிந்து அவனுக்குத் திருப்பணி செய்வாயாகில் இந்நோய் விலகு" மென்று சிவபிரானை நினைத்து அவர்க்கு ஐந்தெழுத்தோதித் திருநீறு கொடுத்து விடியற்காலையிலே அவரை உடன் கொண்டு திருவீரட்டானக் கோயிலுக்குட் புக்கனர்.

மருணீக்கியாரும் தம் தமக்கையார் திருக்கையினாலே திருநீறு தந்தபோதே தமக்குப் பெருவாழ்வு கிடைத்ததென்று நினைத்து அத்திருநீற்றைத் தம் உடம்பெங்கும் நிறையப் பூசிக் கோவிலுக்குள்ளே எழுந்தருளிய சிவபிரானை நிலமுற வீழ்ந்து வணங்கிக் "கூற்றாயினவாறு" என்னுந் திருப்பதிகம் பாடி நோய் நீங்கி, அன்றுமுதல் அவனை உள்ளங்கனிந்து பாடும் பேராற்றலும் வரப்பெற்றுப் பெரியாராகித் **திருநாவுக்கரசர்** என்றும், **அப்பர்** என்றும் பெயர் தாங்கி உலகிற் பல அருணிகழ்ச்சிகளை அவனருளால் நடத்திக்காட்டிச் சிவபிரானருளிற் கலந்தனர். தாமுந் தம் இளையாரும் சிவபிரானது பேரருளைப் பெறவேண்டுமென்று தாம் மேற்கொண்ட பெருந்தவம் முற்றுப் பெற்றதால் அம்மையாரும் அக்கோயிலிலேயே சிவபிரானுக்குத் தொண்டு செய்து இருந்து முடிவில் இறைவனருளிற் கலந்தனர்.

# திலகவதியாரது வரலாற்றின் அருங் கருத்துக்கள்

திலகவதியார் சைவ வேளாள குலத்திற் பிறந்தவ ரென்பது முன்னரே காட்டப்பட்டது. அம்மையார் புகழனார் என்னும் பெரியார்க்கு அருமை மகளாராய்ப் பிறந்தனர். இவர் தமது பிள்ளைமைக் காலந்தொட்டே சிறந்த இயற்கை அமையப் பெற்றவராயுஞ், சிவபிரா னிடத்துப் பேரன்பு கொண்டவராயும் வளர்ந்து வருவாராயினர். இவ்வரை மக்கள் மிகவும் வியந்து பாராட்டினர். இவருக்குப் பன்னீராண்டு நிரம்பியதும் இவர் தந்தையாராகிய புகழனார், ஆண்மையும் அழகும் மிக்க கலிப்பகையார் என்னும் பெரியார் ஒருவர்க்கு இவரை மணம் பொருத்துமாறு உறுதி செய்தனர்.

உறுதிசெய்த பின்னர்த் தம் நாட்டரசன்மேல் வடநாட்டரசர் சிலர் பகைகொண்டார் என்பது தம் அரசனால் உணர்த்தப்பட்டுக் கலிப்பகையார் படை யுடன் வடநாடு நோக்கிச் சென்றனர். கலிப்பகையார் வடநாடு சென்றிருந்தபோது திலகவதியாரது தந்தை யாகிய புகழனார் இவ்வுலக வாழ்வு நீத்தனர்; இக்கடுந் துயர் பொறுக்கமாட்டாமல் அம்மையார் அன்னையா ராகிய மாதினியாரும் தம் அருமைப் பிள்ளைகளைத் தனியேவிட்டுத் தம் கணவனாரோடு இறந்தனர். அதன் பின், போர்மேற்சென்ற கலிப்பகையாரும் போர்க் களத்தில் உயிர்துறந்தார் என்பது கேட்டுத் திலகவதி யார் அடைந்த துன்பத்திற்கும் ஓர் அளவுண்டோ?

கலிப்பகையாரை அம்மையார்க்கு மணஞ்செய் விக்கத் தம் தாய் தந்தையர் உறுதி செய்தார்களே ஒழிய, அம்மையார் கலிப்பகையாரை நேரே கண்டு அன்புகொள்ளவில்லை. தமக்குத் தக்கார் ஒருவரைத்

தம் தந்தையார் மணஞ் செய்விக்க இசைந்ததால் அம்மையார் அவரையே தம் கணவனாராக எண்ணி விட்டனர். நம் கற்றறிந்த கற்புடைய மகளிரெல்லாம் தங் காதலர்களை நேரே கண்டும், அவரோடு பழகியும், பேரன்பு கொண்டார்கள். ஆனால், திலகவதியாரோ தாம் நினைந்த அளவானே கலிப்பகையாரிடத்துப் பெருங் காதல்கொண்டு அவரைத் தம் காதற் கணவனாராக எண்ணினார். கலிப்பகையாரை நேரே கண்டு அவரியற்கையோடு பழகி அதன் பின்னன்றோ அம்மையார் அவரைக் கணவனாராக எண்ணுதல் வேண்டும். தாய் தந்தையர் தம் பெண்மக்களுக்குத் தேடுங் கணவன்மாரெல்லாம் தகுதியுடையவர்களாயிருக்கின்றார்களா? தம் தாய் தந்தையரால் உறுதி செய்யப்பட்ட கலிப்பகையார் அம்மையார்க்குத் தகுந்த கணவர் தாம் என்பதை அவர் எவ்வாறு அறிந்தார்? என்று வினவுவார்க்கு விடை கூறுவாம். அம்மையார் தம் தாய் தந்தையர் சொல்லை நம்பி அவரிடங் காதல் கொண்டதற்கு ஒரு சிறந்த ஏது உண்டு. அது யாதோவெனில், அம்மையார் ஆண்டிற் சிறியவராயிருந்தாலும் அறிவிற் பெரியராயிருந்தனர். எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபிரானையே வணங்கும் மெய்யுணர்வு நிரம்பப்பெற்றவர். அம்மையார் அவனருள் பெறுவதிலும் அவனடியாரைத் தம்மவராக நினைப்பதிலுமே பதிந்த எண்ணமுடையவர். கலிப்பகையார் சிறந்த இயல்புகள் அமையப் பெற்றவரென்பது ஒருபுறமிருப்பினும், இவரும் சிவபிரானிடத்து பேரன்பு கொண்ட மெய்யடியார் என்பதை உணர்ந்தமையினாலேயே அம்மையார் அவரை நேரே காணாராயிருந்தும், அவரை மணஞ் செய்துகொள்ள மனங்கொண்டாராகல் வேண்டும். இறைவனிடத்து முதிர்ந்த அன்புடையவர்கள் அவ்வடியாரோடு இணங்கி வாழவே விழைவர். இது குறித்தே, மாணிக்கவாசகப் பெருமானும்,

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்குஎங்கோ னல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோ ரெம்பாவாய்"

என்று அருளிச் செய்தனர். அதுவேயுமன்றி, அம்மையாரது அருட்கருத்து நன்குணர்ந்து அதற்கிசையவே அவரது தாய்தந்தையர் கலிப்பகையாரை அவர்க்கு உறுதி செய்தாராகல் வேண்டும். அறிவுடைய தம் பெண் மக்கள் எண்ணத்திற்கு மாறுபடாமற் கணவன் மாரைத் தேடி அவர்க்கு அமைப்பதுதான் சிறந்த முறையெனக் கருதும் தாய்தந்தையரும் உளர். இத்தகைய அறிவுள்ள தாய் தந்தையரை வாய்க்கப்பெற்ற பெண் மக்கள் தம் பெற்றோர் தஞ்சொற் கிணங்கி அவர் குறித்த ஆடவரை மணஞ்செய்து கொள்வது குற்றமாகாது.

அங்ஙனமாயினும், தம் மக்களுக்கு மாறான கணவன்மாரை அவர்களோடு பிணைத்துவிட்டு அதனால் அவர் துன்புறுதலையும் பெற்றோர் காணப் பொறுப்பரோ என வினவின்; எத்தனையோ தாய்தந்தையர் பொருள் மிகுதியாயுள்ள கிழவர்க்கும் முன்னரே மனைவியுள்ள ஆடவர்க்கும், செல்வமுடைய தீயோர்க்கும் தம் மக்களை மணஞ்செய்து கொடுத்துப், பின்னர் அதனை ஊழ்வினைப் பயன் என்கின்றனர். பிறகு தம் மக்கள் செல்வம் இழந்தோ அல்லது தம் கணவன்மார் கொடுஞ் செயலுக்கு ஆளாகியோ வருந்தும் போதுங்கூட 'ஊழ்வினை' யெனக் கூறுவரே ஒழியத், தாம்

செய்தது பிழை என்று உணரார். அம்மையார் அறி விற் காற்பங்காயினும் நம் பெண்மக்கள் உடையவரா யிருந்தால், அவர்கள் தாமே தமக்கியைந்த கணவன் மாரைத் தேடிக்கொள்ளல் பொருந்தும். மற்றுக் கல்வியறிவும் மக்களியற்கையுணரும் உணர்வாற்றலு மில்லாத நம் பெண் மக்கள் தம் விருப்பப்படி கணவன் மாரைத் தேடிக்கொள்வது பெருங்கேடாய் முடியும்.

ஏனைக் கற்புடை மகளிர் போல, அம்மையார் தாமுந் தங் காதலருடன் மடியாது, உயிர் தாங்கி இருந்தது முறையோ என்பராயின்; கற்புடை மகளிர் சிலர் கணவன்மாரோடு இறந்துபடுவது ஒன்றே தாம் அவர்களிடத்துப் பேரன்புடையராதலைக் காட்டுவ தாகும் என்று பிழைபட நினைப்பர்: அது பொருந்தாது. பெண் மக்கள் தம் கணவன்மார் உயிரோடிருக்கும் வரையில் அவர்க்குத் தங் கடமையை ஒழுங்காகச் செய்து முடித்தலே மிகவும் மேலானதாம். தங்கணவன் மார் இவ் உடலை விட்டு நீங்கிய பிறகு மனைவிமார் தம் அருமை மக்கட்கு உறுதுணையாயிருந்து அவர்களை நல் வழிப்படுத்துதல் வேண்டும். இன்னும், இறந்தோர் உயிர் நல்லுலகங்கட்கு இறைவனருளாற் செலுத்தப் பட்டுத் தூயதாய்த் துன்பமின்றி விளங்க வேண்டு மென்று இறைவனை வழுத்தி வருதலும் வேண்டும். இன்னும், நாம் அறிவு விளங்கி இறைவனருளைப் பெறு தற்கு ஏதுவான உடம்பிருக்கும்போதே, அதனை அவன் கருத்துக்கு மாறாக அழியாமல், அவனருளைப் பெறு தலிலேயே கருத்துக் கொள்ளல் வேண்டும். உடம்பு அறிவு விளக்கத்திற்கு ஏதுவாகத் தரப்பட்டதாதலால் அதனைப் பாதுகாத்தல் முதன்மை என்பது குறித்தே தெய்வத் திருமூல நாயனாரும்,

"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே"

என்றருளினர். "உடம்பழிந்தபோதே உயிர் அழியும்; உயிர் அழிந்த அளவானே இறைவனை உணர்தல் ஏலாததாகும். ஆதலால் உடம்பை நோயின்றி வளர்க்குஞ் சூழ்ச்சி அறிந்த பின்னரேதான் உடம்பையும் வளர்த்தேன்; அதனிடையே வாழ்கின்ற உயிரையும் வளர்த்தேன்; அதனால் இறைவனுணர்ச்சியும் வரப் பெற்றேன்" என்றார்.

அம்மையார் தங்காதலர் இறந்தஞான்றே தாமும் இறந்திருப்பர். ஆனால்,

"தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததயா
உம்பருலகு அணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி
அம்பொன்மணி நூல்தாங்காது அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி
இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யார்இருந்தார்"

என்று சேக்கிழார் பெருமான் கூறியவாறு தம் கணவனுக்குப் பின் அம்மையார் உயிர் தாங்கியது, தம் நலங் கருதியன்று; தம் இளையாரையும் சைவத்தையும் பாதுகாத்தற்காகும். அம்மையார் தங்காதலர்பின் இறந்திருப்பாராயின், முழுமுதற் கடவுளாகிய சிவத்தை அறிவதும், அப்பரடிகளாற் சைவம் தமிழ் நாடெங்கும் தழைத்து ஓங்குவதும் எவ்வாறு கைகூடும்? கூறுமின்கள்! அப்பரடிகளது அருட்பேற்றிற்கு ஏதுவாயிருந்தவர் நம் அம்மையாரே அல்லரோ?

அப்பரடிகள் சமணக் கொள்கையைச் சார்ந்து பாடலிபுத்திரத்தில் இருந்தகாலத்தில், அம்மையார் திருவதிகை வீரட்டானஞ் சென்று நீண்டகாலம் அக்கோயிலிலிருந்தே திருத்தொண்டு செய்துகொண்டு தம் இளையாரைச் சமணப் படுகுழியினின்றும் எடுத்தாள

வேண்டுமென்று இறைவனைப் பணிந்து வேண்டி வந்தனர். அம்மையாரின் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபிரான் அப்பரை ஆட்கொளல்வேண்டித் திடீரென அவர்க்கு மிகக் கொடியதொரு சூலைநோய் தந்தருளி னர். அப்பர் கொடுஞ் சூலைநோயால் தாக்கப்பட்டுப் பெரிதுங் கலங்கித் தம் நிலைமையை அருமைத் தமக்கை யார்க்கு ஆள்வழியாக அறிவித்தும், திலகவதியார் "நன்னெறி அறியாத சமண்பாழிக்கு வரேன் என்று எம் இளையார்க்கு உரைப்பாயாக" என்று அவ் ஆளி டத்தே சொல்லியனுப்பினர். இதனால், அம்மையார் தம் இளையாரது பெருந் துன்பநிலை அறிந்தும் அவரைப் போய்க் காணாதிருந்தது அவர் பேரிரக்கத்திற்கு இழுக் காய் முடியாதோ என்பர் ஒரு சிலர். அது பொருந் தாது. ஏனெனில், அம்மையார் கலிப்பகையாரது இறப்புக்குப் பின்னும் உயிர் வாழ்ந்தது தம் தம்பியா ரிடத்து வைத்த இரக்கத்தினாலேயாகும். அப்பர் நன்றாக வளர்ந்து தகுந்த ஆண்டில் அம்மையாரது சொற்கேளாமல் சமணர்களிடஞ் சென்ற காலத்துங் கூடத் தம்பியார் சிவபிரானருள் பெற்றுப் பிறவிப் பெரும்பயனை அடைய வேண்டுமென்று தாம் எண்ணி யதும் இரக்கத்தினாலன்றோ? இன்னும், சிவபெருமான் ஆணையினாலேயே சூலை நோய் அப்பருக்கு வந்ததனால் அந்நோய் அவரைக் கொல்லாதென்பதும் அறிந்திருந் தனர். அம்மையார் சமணர்களிடையே போயிருந்து அப்பர் சிவபிரானிடத்துப் பேரன்பு கொள்ளுமாறு அவரைத் திருத்தலுங் கூடாததாகும்; தங் கொள் கைக்கு மாறானவர்களைப் பலவகையிலும் துன்புறுத் தும் இரக்கமில்லாச் சமணர்களிடையே அம்மையார் தனித்துச் சென்று தம் இளையாரைத் திருத்த முயன் றாலும், அதனால் அவர்க்குப் பேரிடர் விளைந்திருக்கும்! அம்மையார் சமண் பள்ளிக்குப் போகாதிருந்தமையே அப்பர் அருள் பெறுவதற்கு ஏதுவாயிருந்தது.

ஆதலால், அம்மையார் சமண்பாழிக்குப் போகாமலிருந்ததன் கருத்து எதிர்கால உணர்ச்சியினாலும் இரக்கத்தினாலுங் கொண்டதாகும்.

இனி அம்மையார்க்குப் பன்னிரண்டாவதாண்டில் மணஞ்செய்வதாக உறுதி செய்யப்பட்டபின், விரைவில் அவர் பெற்றோருங் காதலரும் விண்ணுலகஞ் சென்றனர். அதன்பிற் சில ஆண்டுகளில் அப்பரும் பாடலிபுத்திரஞ் சென்றனர். அப்போது அம்மையார்க்கு இருபது ஆண்டிருக்கலாம். அழகுமிக்க அப்பேரிளமைக் காலத்தில் அம்மையார் உயர்ந்த ஆடை அணிகலன்களை அறவே நீக்கிச் சிவ அடையாளங்கள் தாங்கித் **திருவதிகை வீரட்டானஞ்** சென்று தம் கையினாலேயே திருத்தொண்டு செய்யத் தொடங்கினர்.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்செடைஎம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

என்று தம் இளையாரான அப்பரடிகள் அருளிச் செய்தபடி, அம்மையார் புலர்வதற்குமுன் (விடிவதற்குள்) கோயிலைத் தூர்த்து மெழுகி, இறைவனுக்குப் பூமாலை தொடுத்து, நாள் முழுதும் இறைவனைப் பாடிப் பரவி அவனருள் தமக்கும் தம் தம்பியார்க்கும் கைகூடு நாள் எந்நாளோ என்று எதிர்பார்த்திருந்தனர்.

உலகிற் பெண்மக்களிற் பெரும்பாலார் தாம் பேரன்பு வைத்த கணவன்மாரோ, பிள்ளைகளோ

அல்லது தம் பெருஞ் செல்வமோ மறைந்தொழிந்தால் தாம் முன்னே கடவுளிடத்துப் பயன்கருதிக் காட்டிய சிறு அன்பினையும் அறவே மறந்து, 'கடவுள் என்பார் ஒருவர் இருந்தால் யான் இவ்வளவு துன்பப் படுவேனோ! உயிருக்கு உயிர் தருகிறேனென்று நான் எவ்வளவோ ஆடு கோழிகளை அக்கடவுளுக்காக வெட்டினேன்; அவைகளையெல்லாம் ஏற்றுக்கொண்டு அவர் ஒரு நன்மையுஞ் செய்தாரில்லை; பிறரிடங் கடன் வாங்கிக்கூட அக்கடவுளுக்கும், அக்கடவுளாற் படைக்கப்பட்ட தேவர்க்கு ஒப்பான பார்ப்பனருக்கும் எவ்வளவோ செய்து இப்போது நொந்தேன்; பாழுந் தெய்வம் எனக்கு இரங்கவில்லையே; என்று தாம் நினைத்தவாறெல்லாம் உள்ளீடில்லாப் பதர்மொழிகளைப் பேசி வறிதே காலம் போக்குகின்றனர்! இவ்வாறு வீண்பொழுது போக்கும் இப்பெண்மக்களை நோக்கி இன்னுமொரு சாரார் "ஏன் வீண் போது போக்குகின்றீர்கள்? கடவுளைப்பற்றிப் பேசும் இடங்கட்குப் போய் அறிவுடையோர் சொல்வதைக் கேளுங்கள்! கோயில்தோறுஞ் சென்று இறைவனை வணங்குங்கள்! அல்லது வீட்டிலிருந்தே இறைவனை நினைத்துத் **தேவார திருவாசகங்கள்** பாடுங்கள்! அப்போது நீங்கள் துயரொழிந்து இறைவனது பேரருள் இன்பத்தைப் பெறுவீர்கள்" என்று இடித்திடித்து உரைத்தாலும், அவைகட்கு விடையாக அவர்கள், "நான் ஏன் கோயிலுக்குப் போதல் வேண்டும்? எதை நினைந்து வேண்டப் போகின்றேன்? என் இறந்த பிள்ளைகளை நினைத்து அழுவதற்கே காலம் போதவில்லை; அவர்கள் இறந்து இன்னும் ஓராண்டு கூடக் கழியவில்லை; என் பிள்ளைகளே போய்விட்டார்கள்; எனக்கு ஏதுக்குக் கோயிலுங் குளமும்?" என்று மூச்சுவிடாமற் பேசிவிட்டுத் தம்மையொத்த பெண்மக்களிடம் இறந்தவர்களைப்பற்றியும், ஏனைய

வீணான நிகழ்ச்சிகளைப்பற்றியும் ஓயாமற் பேசிப் பேசித் தம் பிறவிப் பெரும்பயனை இழந்து அறியாமை இருளில் மேலும் மேலும் படிந்துகிடக்கின்றனர்.

ஐயகோ! இப்போது நம் நாட்டிலுள்ள பெண் மக்கள் பெரும்பாலும் இறைவனுணர்ச்சியில் முன்னேறுவதற்கு எட்டுணையும் விருப்பமில்லாதவர்களாய் இருக்கின்றார்கள்! இதை நினைக்க நினைக்க எம் நெஞ்சம் நடுங்குகின்றது! இன்னும் இவர் தமக்கு இறைவனைப் பற்றியும், உயர்ந்த சீர்திருத்தங்களைப் பற்றியும், எடுத்துரைத்து இவர்களைச் சீர்திருத்தவல்ல கணவன்மார்களும், நேசர்களும், உறவினர்களும் வாய்க்கப்பெற்ற பெண்களும் எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள்.

" பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்—அன்றே
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமில் அறிவி னவர் "

என்று நாலடியாரிற் கூறியபடி இத்தகைய நட்பு வாய்க்கப்பெற்ற இவர்களாயினும் உயர்ந்த நோக்கமுடையவர்களா யிருக்கின்றார்களா என்றால் அதுவுமில்லையே! அறிவுடையோர் ஏதுகூறினும் அதை ஒரு பொருட்படுத்தாது மேலெடுத்துக் காட்டியவாறு சிறு தெய்வங்களை வணங்கியும், அவைகட்காக உயிர்களைக் கொன்றும், அறிவிலுஞ் செயலிலுந் தம்மை ஒத்த மக்களான பார்ப்பனரைத் தமக்கு மேலானவர்களெனப் பிழைபட எண்ணி அவர்கட்கு ஏராளமாகப் பொருள் கொடுத்தும், தமக்குத் துன்பம் வந்த காலத்துக் கடவுளைப் பழித்தும், வீண்பேச்சுப் பேசியும் அல்லவோ நம் பெண்மணிகள் தமது காலத்தைக் கழிக்கின்றனர்!

ஆனால், அம்மையாரே, தம் பெற்றோரையும், அருமைக் கணவனாரையும் ஒருங்கிழந்த பின்னும் இறைவனுணர்ச்சியில் மேம்பட்டனரே ஒழிய அவனன்பிற் சிறிதுங் குறையவில்லை. உலகத்தில் இறைவனருளாற் படைக்கப்பட்ட உயிர்களெல்லாம் ஒருகால் தோன்றியும் பிறிதொருகால் மறைந்தும் மாறிமாறிச் செல்லுந் தன்மையவாயிருத்தலால், அவைகளெல்லாம் தமக்கு உறுதுணையாக நிலைபெறமாட்டா என்பதும் அவைகளால் தாம் அழியாத இன்பத்தைப் பெறுதல் இயலாதென்பதும் உணர்ந்தார்; எல்லா உலகங்களையும், உயிர்களையும் படைத்துக் கொடுத்து அருளால் அழித்திடும் ஐயன் ஒருவனே தமக்கு எக்காலத்தும் உற்ற துணையாவானென்பதும், அவனே என்றும் அழிவில்லாத பேரின்பத்தைத் தரவல்லான் என்பதும் அம்மையார் நன்றாக உணர்ந்தார். இக்கருத்துக்கிசையவே அப்பரடிகளும்,

"பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேனென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில்ஆரூ ராஎன்றே போற்றா நில்லே"

என்றருளினர். எப்பொருள் அழியினும் இறைவன் தான் அழிதலில்லாத இன்ப வடிவினனாதலைக் குறித்தே திருவாசகத்திலும்,

"வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினுந்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்கு

ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டுஎன் உள்ள
மும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

என்று அஃது அருளிச்செய்யப்பட்டது.

இன்னும் அம்மையார் தம் இளமைக் காலத்திலேயே உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிவதில் விருப்பமில்லாதவரா யிருந்தனர். இவர் கொண்ட உண்மைத் தவக்கோலத்தின் சீரிய தன்மை அம்மையாரது பற்று நீக்கத்தைத் தெளிவாகக் காட்டுகின்றதன்றோ? அம்மையார் தம் வீட்டகத்தே இருந்து இறைவனை வழிபட விருப்பமில்லாமல் திருவதிகைக் கோயிலுக்குச் சென்று ஆண்டுத் திருத்தொண்டுகள் செய்து சிவபிரானருள் பெற்றது என்னையோ எனிற் கூறுவாம். இறைவனது பேரருளைக் கருதித் தவ முயலும் பெரியோர்கள் "இனிதினிது ஏகாந்தம் இனிது" என்பதற்கேற்பத் தங் கருத்து நிறைவேறும் பொருட்டுத் தனிமையான இடங்களையே தேடா நிற்பர். மக்களியற்கையானது தான் சார்ந்த பொருளின் தன்மைக் கேற்பவே நல்லதாயுந் தீயதாயும் மாறுபாடடைகின்றது; நாம் கொள்ளும் நல்லாரது நேசமும் இறைவனை வணங்குவதிற் பற்றுமே நமக்கு எக்காலமும் நிலையாயுள்ளனவாகும். இவையல்லாச் செல்வமும் உற்றார் பெற்றாரும் ஏனைப் பொருள்களும் நிலையாகா. இவ்வுண்மைகளையே,

"யாதொன்று பாவிக்க நான் அதுவாதலால்"

என்று தாயுமான அடிகளும்,

"நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுள தோஅக மும்பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழி
லுடம்பும்
எல்லாம் வெளிமயக் கேஇறை வாகச்சியே கம்பனே"

என்று பட்டினத்தடிகளும் கூறினார்கள். ஆதலால், திலகவதியார் தம் வீட்டிலிருந்திருப்பாராயின், அவர் தம் தவநிலையினை அறியாத மக்கள் கூட்டங் கூட்டமாக அவரைச் சூழ்ந்துகொள்வர். சுற்றத்தவரும் இவர்தம் உயர்ந்த நிலையறியாது மயங்கிப் பலவாறு பிழைபடப் பேசுவர். வீண் பேச்சுப் பேசிக் காலங்கழிக்கும் ஏராளமான பெண்மக்களுக்கிடையே அம்மையார் கடவுளருளைப்பெற முயலுவதும் பெருந்துன்பமாகும். மக்களிடையிருந்தால் தம் தவமுயற்சிக்கு இடையூறுண்டாமெனக் கருதியே அம்மையார் திருவதிகைக் கோயிலை அடைந்தனர். அமைதியாக இருந்து இறைவனை வணங்குவதற்கு இறைவன் சிறப்பாக எழுந்தருளியிருக்குங் கோயிலே சிறந்த இடமாகும். உண்மைப் பொருளை நுட்பமாக எடுத்தெழுதும் பேராசிரியர்களும், இறைவன் படைத்த இயற்கைக் காட்சியினை வியந்து பாடும் செய்யுட் புலவர்களுங்கூட மக்கட்டொகுதி (மக்கட்கூட்டம்) மிகுதிப்படாத நாட்டுப்புறங்களில் தனித்திருந்தே தாம் நினைத்தவைகளை எழுதியும் பாடியும் வாழ்ந்திருக்கின்றார்கள். இறைவனைக் கண்டு அவனருளையே பெறல் வேண்டும்; பிறிதொன்றும் வேண்டா என்னும் ஒரே எண்ணமுடைய பெரியோர்கள், அவ் இறைவனைச் சிறப்பாக வைத்துக் கொண்டாடும் தனிமையான சிவபிரான் கோயில்களிலிருந்து, அவனுக்கே தொண்டு செய்து அவனை ஓயாமற் கண்டுகண்டு பேருவகை கொள்ளுவதிலேயே ஈடுபட்டு நிற்பர். சிவபிரான் திருக்கோயில்களெல்லாம் மக்களின் தொடர்பு மிகுதியில்லாத மலைகளின் மேலும், நாட்டுப்புறங்களிலுமே கட்டப்பட்டிருக்கின்றன. இக்கோயில்களில் மக்கட்கூட்டம் மிக அருகியே காணப்படும். நாடோறும் மிகச் சிலரே அக்கோயில்கட்குச் செல்வர். திருவதிகை வீரட்டானமானது அழகிய திருக்கெடில

ஆற்றங்கரைமேல் தோப்புகள் சூழ்ந்த இனிய தொரு தனியிடத்தில் அமைந்துள்ளது. இவ் அமைதியான திருக்கோயில் அம்மையாரது அருட் கருத்துக்கும் திருத்தொண்டிற்கும் ஏற்றதாதலைச் சொல்லவும் வேண்டுமோ? அம்மையார் திருவாய் மலர்ந்தருளிய பாடல்கள் எவையும் இல்லாமையால் அவர் தமது சிறிய ஆண்டு துவங்கவே கல்வி கற்பிக்கப் பட்டு அதில் தேர்ச்சி பெற்றனரோ இல்லையோ என இரண்டிலொன்று துணிதற்கு இடமில்லை. என்றாலும், கல்வி என்னும் சொல்லுக்குப் பொருள் நூற் பயிற்சி யென்றே கொள்ளுதல் ஆகாது; நம் மனத்தின்கண்ணி ருக்கும் அறியாமை யிருளைக் கல்லி நீக்கி அறிவை விளக்கும் முயற்சி எதுவாயினும் அதனைக் கல்வி யென்றலே பொருத்தமாம். நாம் பல்லாண்டு பயின்ற நூல்களின் பயனெல்லாம் ஒரு முழுமுதற் பொருளாகிய இறைவனை அறிவதேயாம். "கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்" என்ற **மாணிக்கவாசகப்** பெருமான் திரு மொழிக் கிணங்க, நன்றாகப் பல நூல்களையும் கற்ற றிந்த பெரும் புலவர்களுங்கூட இறைவனுண்மை தெளியாது 'இறைவன் ஒருவன் இல்லை' என்று இல் வழக்குப் பேசுகின்றனர். ஆதலால்,

> "கொடிறும் பேதையுங் கொண்டது விடாவெனும்
> படியே யாகிநல் இடையறா அன்பில்"

என்றவாறு, கடவுளைத் தம் இடையறாத அன்பில் அகப்படுத்தி வணங்கி அவனருளைப் பெறும் உரமான முயற்சியே எல்லாக் கல்விப்பயிற்சியிலுஞ் சிறந்த தாகும். நூற்கல்வியின்றித் தம் அன்பின் வலையிற் சிவபெருமானை அகப்படுத்திய **கண்ணப்பர், திருநாளைப் போவார்** முதலிய பெரியோர்களும் உளரல்லரோ? ஆனால், அம்மையார் போன்ற இத்தகைய தவத் திரு வாளர்கள், தம் முன்னைப் பல பிறவிகளிற் கற்ற கல்வி யின் பயனாகவே, பின்னைப் பிறவிகளிற் சிவபிரானை

ஆசிரியனுகத் தோன்றித் தன் முழுமுதற் றன்மையினை அறிவிக்கும் பேறு பெற்றனர்.

நாமெல்லாம் இறைவனெண்ணமே வரப்பெருமல் உலகப் பொருள்களிடத்துப் பெரும் பற்று வைத்துப் பேரவா என்னும் பேரலைகளால் அலைக்கப்பட்டு, அறியாமையிற் கிடந்து உழலுகின்ரேும். அம்மையார் போன்ற அருளாளர்களது அருள்நிலையை யடைய எத்தனையோ பிறவிகள் நமக்கு வேண்டும். ஆதலாற் சிற்றறிவுடைய நாம் கல்வி கற்கப் பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள இக்காலத்திலே உயர்ந்த அறிவு நூல்கள் கற்பதில் ஊக்கமுடையவர்களாகி, இறைவனது உண்மையை உள்ளவாறு விரித்துரைக்கும் **பெரியபுராணம், சிவஞானபோதம்** ஆகிய அருள்நூல்களைக் கற்றுத் தேவார திருவாசகங்களை ஓயாமல் உள்ளன்போடு உருகிப் பாடி இறைவனை வழிபடுவதிற் கருத்தைப் பதித்தல் வேண்டும். பிறவிகடோறும் இறைவனைப் பற்றிப் படித்துப் படித்து அவனைப் பாடிப் பாடி அன்பில் உயர்ந்துகொண்டே சென்ருற்ருன் முடிவில் ஒரு பிறவியிலே இறைவனே தன் முழுமுதற் றன்மையை நமக்கு அறிவித்து நம்மை ஆட்கொள்வான்.

சிவம்!!

---

உ

திருச்சிற்றம்பலம்

---

# 3. மங்கையர்க்கரசியார்

---

'மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோ னருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மாற் போற்ற லாமே.'

(பெரியபுராணம்)

ஆயிரத்து முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே மதுரையை அரசாண்ட கூன்பாண்டியனுக்குத் தெய்வத் தன்மையும் பேரழகும் நிறைந்த **மங்கையர்க்கரசியார்** என்பவர் மனைவியா யமைந்தனர். இவ் அரசியார் மிகவும் நுட்பமான அறிவும் உயர்ந்த நூற் கல்வியும் உடையர்.

இவர்தங் காலத்திற் சமணக் கொள்கையானது மதுரை முழுவதும் பரவி வரலாயிற்று. சமணர்கள் தங் கொள்கையை எங்கும் பரவச் செய்தது மல்லாமல் இவர்தங் கணவனை கூன்பாண்டியனும் அச் சமண வலையிற் சிக்குமாறு செய்தனர். அரசனே சமணக்

கொள்கையை இறுகப் பிடிக்கவே அவன் குடிமக்க ளெல்லார்தாமும் அதனைக் கைப்பற்றுவாராயினர். மதுரையிலுள்ளார் அரசனுட்பட, எல்லாரும் சமணக் கொள்கையைச் சார்ந்தமையால், திருஆலவாய்ச் சிவ பிரான் கோயிலுக்குச் செல்வார் பெரும்பான்மையும் இலராய்விட, அங்குள்ள சிவபிரான் கோயிலிலே வழி பாடுங் குறைவதாயிற்று. பாண்டிநாடு முழுதும் சமண் நாடாயிற்று. மயிர்பறித்த தலையுங் கக்கத்திற் பாயுங் கையில் மயிர்ப்பீலியுங் கொண்டலையுஞ் சமணக் கூட்டங்களே அந் நகரில் எங்குங் காணப்பட லாயின. ஆடையின்றி நிற்கும் அருகக் கடவுளுக்கே பல கோயில்கள் கட்டப்பட்டு எல்லாச் சிறப்புகளும் அவைகளுக்கே மிகுதியாகச் செய்யப்பட்டன.

இவ்வாறு அரசனும் அவன் குடிகளும் அறிவு கலங்கிச் சமணக் கொள்கையைத் தழுவாநிற்ப, அரசன்றன் மனைவியாரான **மங்கையர்க்கரசியாரும்,** அவர்க்கு முதல் அமைச்சரான குலச்சிறையாருமே சிவ பிரானது உண்மையைத் தீரத்தெளிந்த பேரறிவாளர் களாய்ச் சமணக் கொள்கையைக் கைக்கொள்ளாது சிவனிடத்தே பதிந்த பற்றுடையராயிருந்தனர். இவ்வாறு பற்றுடையராயிருந்தது மல்லாமல், தம் நாட்டிற் பழமைபோற் சைவம் தழைத் தோங்கவுந், தங்கணவன் கூன்பாண்டியனும் குடிமக் களும் சிவபிரானை வழிபட்டுப் பிறவிப்பயனை அடைய வும் வேண்டுமே என்று அரசியார் ஆலவாய் அப்பனை நெஞ்சம் நைந்துருகி இடையறுது வேண்டி வருவாரா யினர்.

அப்போது இறைவன் திருவருளைத் தமது மூன்றும் ஆண்டிற் பெற்று அருட்டலைமை யாசிரிய ராய் விளங்கிய **திருஞானசம்பந்தப் பெருமான்** திருமறைக் காட்டிற்கு எழுந்தருளி இருக்கிருரென்னும் நற்செய்தி யினை மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாருங் கேட்டு

அளவிலாத மகிழ்ச்சியடைந்தார்கள். இவ் இருவரும் **திருஞானசம்பந்தப்பெருமானைக்** கொண்டு தம் நாடு முழுதுங் கவிந்திருந்த சமண் இருளை அறவே நீக்கி, அரசனையும் குடிமக்களையும் அதனினின்றும் விடுவித்துச், சைவமாகிய அருளொளியைப் பரப்ப வேண்டுமென்று உறுதிகொண்டார்கள். உடனே அரசியார் தம் நாட்டின் சீர் குலைந்த நிலைமையினைத் **திருஞானசம்பந்தப்பெருமானிடம்** அறிவிக்குமாறு தம் அமைச்சராகிய **குலச்சிறையார்** வழியாக ஆட்கள் விடுத்தனர்; ஞானசம்பந்தப்பெருமான் எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் பொருளாகிய கடவுளின் பேரருட்டிறத்தை உலகத்தினர்க்கு மயக்கமற உணர்த்துவான் வேண்டிப் பிறந்தருளியவராதலாற், சமணர்களிடையே தன்னந் தனியராயிருந்து சைவங்காக்கும் அருந்தவப் பெண் மணியாராகிய **மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரை**யும் அவரது நாட்டின் நிலைமையையும் உற்றுக்கேட்டு உடனே அவைதம்மை **அப்பர்பெருமானுக்கு** அறிவித்து அவர்பால் விடைபெற்றுக்கொண்டு தம் பதினாயிரம் அடியவர்களோடு மதுரை நோக்கிச் சென்றனர்.

அரசியார் ஏவற்படி குலச்சிறையார், பெருமானையும் அவரடியார்களையும் வரவேற்று அவர்கள் இருக்கும் பொருட்டு மதுரையில் அமைதியாகப் பெரியதொரு மடம் அமைத்தனர். ஆலவாய்க் கருகே திருஞானசம்பந்தப்பெருமானும், அவரடியார்களும் வந்தணைந்தபோது குலச்சிறையார் அவர்களை நிலமுற வீழ்ந்து வணங்கி எதிர்கொண்டு கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். அப்போது திருஞானசம்பந்தப் பெருமான், " மங்கையர்க்கரசி " என்னுந் திருப்பதிகம் அருளிச்செய்தார்.

இதற்குள் மங்கையர்க்கரசியார் கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடவேண்டுமென்று அரசரிடங் கூறி ஆலவாய்க்குச் சென்றார். கோயிலிற் சிவ

பிரானை வணங்கிய பிறகு திருஞானசம்பந்தப்பெருமானைக் காணும் பேரவாவினால் அரசியார் ஒரு பக்கத்தில் ஒதுங்கி நின்றனர். ஒதுங்கி நிற்கும் அரசியாரைக் குலச்சிறையார் திருஞானசம்பந்தப் பெருமானுக்குக் காட்ட அம்மையாரும் பெருகி ஓடும் அன்பினால் வள்ளலாரது திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து, தம் உள்ளக் கருத்து நிறைவேறியதென்னும் பேருவகையாற் கண்ணீர் ததும்பத் தம் பவளம் போன்ற அழகிய வாய் துடிப்ப, 'ஐயனே! யானும் என் ஊராரும் செய்த தவத்தின் பயனால் அடிகள் இங்கு எழுந்தருளப் பெற்றேம்' என்றார். ஞானசம்பந்தப் பெருமானும் அம்மையாரை வணங்கிப் "புறச்சமய இருள் சூழ்ந்திருக்கும் இவ்விடத்தே சிவத்தொண்டில் நிலைபேறுற்று விளங்கும் நும்மைக் காணவந்தேம்" என்றனர். குலச்சிறையார் தம் அரசனும் நாடும் இருக்கும் நிலைமையினைத் தெரிவித்தனர். பின் பெருமான் அரசியார்க்கு அருள் செய்து அவரைப் போக விடுத்தனர்.

அதன்பின் அரசியார் ஏவற்படி குலச்சிறையார் மதுரையில் அமைத்த அப்பெரிய மடத்தில் திருஞானசம்பந்தப்பெருமானும் அவரடியார்களும் தங்கியிருந்தனர். அரசியாராற் பிள்ளையார்க்கும் அவரடியார்க்கும் எல்லா வசதிகளும் பொருந்த விருந்தளிக்கப்பட்டது; இரவும் வந்தணைந்தது.

மதுரைமாநகரில் சிவநெறித் தலைவராகிய திருஞானசம்பந்தர் என்னும் ஒரு சிறுவர் பெருங்கூட்டமான அடியார்களோடு வந்திருக்கின்றார்; இவர் நம் சமணர் கொள்கைக்கு ஏது தீங்கிழைப்பரோ; இவரால் நமக்கு ஏது விளையுமோ எனப் பேரச்சங்கொண்டு, சமணக் குருக்கள்மார்களெல்லாரும் பெரிதுங் கலங்கி அவ்விருள் நேரத்தில் ஒரு கூட்டங்கூடி முடிவில் அரசனிடம் போய்ச் சேர்ந்தனர். இவர்க

ளது முகவாட்டத்தைக் கண்டு அரசன், "ஏன் இவ் இராப்பொழுதில் கூட்டமாக முகமலர்ச்சியின்றி வந்தீர்கள்? குற்ற முளதோ?" என்று கேட்டான். அதற்கவர்கள் "அரசனே! இன்று சிவன்பால் ஞானம் பெற்றவனுகச் சொல்லப்படும் ஒரு சைவச் சிறுவன் தன் பெருந்திரளான அடியவர்களுடன் எம்மை வழக்கில் வெல்லும் பொருட்டு நம் ஊரில் வந்து தங்கியிருக்கின்றுன்" என்று மிகவும் பதை பதைத்துக் கூறினர். இது கேட்டு அரசனும் வெகுண்டு "அம்மாமறைச் சிறுவன் நம் ஊரில் வந்தணைந்தான்; அவனைப் போக்க யாது செய்வோ" மென்று கேட்க, அதற்கு இரக்கமிலாச் சமணர்கள், "வந்திருக்கின்ற அந்தணனை நாம் வலிந்து போக்கிய தாயில்லாமல், அச்சிறுமறையோனிருக்குமிடம் தீப் பற்றி எரியுமாறு எங்கள் மந்திரமொழிகளாற் செய்வோம்; அதனுல் அவன் இந்நகரில் இராமல் ஏகுவான்" என்றனர். அதற்கு அரசனும் ஒருப்பட்டு அவர்கள் அதனை விரைந்து செய்யுமாறு போக்கி விட்டுப், பின் விளைவது யாதோ என்று மனக்கவலை யோடு படுத்திருந்தான். அப்போது அரசியாரும் அங்குவந்து அரசன் முகமலர்ச்சியின்றியிருப்பது கண்டு பெரிதும் வருந்தி, 'என் உயிர்க்குயிராய இறை வனே! தங்கட்குற்ற துன்பம் யாதோ? அதனை அருள் செய்வீராக என்று வேண்டினர். அரசன் தன் மனைவி யாரை நோக்கிச் 'சீகாழியினின்றும் சிவனருள் பெற்றுெருவன் எம் சமண அடிகண்மார்களை வழக்கில் வெல்ல வந்திருக்கின்றுன்; இதுவே யானடையுங் கவலை' என்றுன். மன்னன் இஃதுரைப் பக் கேட்ட அரசியார், 'மன்ன! இப்போது வந்திருக் கிற பிள்ளையாரும் நும் அடிகண்மாரும் வழக்கிட்டு எவர் வெற்றி காண்கின்றுரோ அவர் பக்கஞ் சேர்தலே நமக்கு முறையாகும்; ஆதலால், இதற்காகக் கவலை

கொள்ளற்க' என்றனர். மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் திருஞானசம்பந்தப் பெருமான் பொல்லா அமணர்களை வழக்கில் வென்று புறங்காண்பர்; இனி அவர்கட்கு அஞ்சவேண்டுவதில்லை; அரசனுங் குடிகளும் மீட்கப் படுவரென்பதனுற் பேருவகை கொண்டனர். ஆனால், அன்றிரவு சமணர்கள் பிள்ளையார்க்கும் அவரடியார்க்கும் ஏது தீங்கிழைப்பர்களோ! என்று மங்கையர்க்கரசியார் அஞ்சி, "அவர்களால் நம் பெருமானுக்கு நன்மையல்லாதது ஏதேனும் வரின் உடனே யாம் உயிர் துறந்தொழிவேம்" என்று குலச்சிறையாரிடங் கூறி வருந்தினர்.

இனி, அன்று நள்ளிரவில், வஞ்சகச் சமணர்கள் தம் மறைமொழி வன்மையால் தீயினை எவ்வளவோ ஏவியும், அது பெருமானையும், அவர் திருமடத்தையுஞ் சேராதாயிற்று. இது கண்டு சமணர்கள் பெரிதும் மனம் உடைந்து "நம் மந்திரம் வலிவிழுந்தமையினை அரசன் அறிவானாயின், நம்மையும் நங்கொள்கையையும் ஒழித்து விடுவான் ஆதலால், நெருப்பைக் கொண்டுபோய் அம்மறையோன் மடத்தைச் சூழ வைத்து அதனை எரித்து விடுவதே நாம் செய்யத்தக்க" தென்று நினைத்து அவ்வாறே அவ் வஞ்சமனத்தோர் பெருமானும் அவரடியார்களுமிருந்த திருமடத்தைச் சுற்றிலும் தீக்கொளுவினர். மடமுந் தீப்பற்றி எரியத் துவங்கியது! இத்தீச்செயல்கண்ட மடத்திருந்த அடியவர்கள் பதை பதைத்து ஓடித் திருஞானசம்பந்தப்பெருமானுக்கு அதனைத் தெரிவிப்பாராயினர். உடனே பெருமானெழுந்து என் பொருட்டு இச்சமணர்கள் இத் தீங்கினைச் செய்திருப்பாராயின் பொறுப்பன். சிவபிரானடியவர்க்கு இவர்கள் இஃதிழைத்தல் தகுதியோ; இவ் அடாக் கொடியசெயல் அரசன் செங்கோல் முறையில் வழுவினமையால் இவர்கள்

செய்ததாகும். ஆகவே இத்தீமை அரசனையே சேரற் பாலதாகும்" என உன்னிச்

"செய்ய னேதிரு வாலவாய் மேவிய
ஐய னே அஞ்ச லென்றருள் செய்எனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியர்க் காகவே"

என்று அத்தீயின் வெப்பமானது மெல்லச்சென்று பாண்டியனை அடைக என்று பத்துப் பாட்டுக்களிற் சிவபிரானை வேண்டிப் பதிகம் பாடி யருளினர். மங்கையர்க்கரசியாரது திருநாணுக்குப் பழுது நேரா மைப் பொருட்டும் அரசன் திருந்துதற்பொருட்டும் பெருமானார் அத்தீப்பிணி 'பையவே சென்று பாண்டியனைப் பற்றுக' என்றருளினர். உடனே சமணர்கள் கொளுவிய தீயானது பெருமானது மடத்தைப் பற்ருமல் விட்டுச் சென்று அரசனை மெல்லப் பற்றுவ தாயிற்று! திடீரெனத் தன் மேற் பரவிய தீப்பிணி தாங்கப் பெருமல் அரசன் துடிதுடிப்பாருயினன். அரசன் திடீரென வெப்புநோயாற் ருக்கப்பட்டுத் துன் புறுகின்ருனென்று ஆட்கள் போய் அறிவிப்பக்கேட்டு அரசியாரும் குலச்சிறையாருந் திடுக்கிட்ட மனத்தின ராய்ப் பேரச்சங்கொண்டு அரசனிடம் வந்தணைந்தனர். மருத்து நூலுணர்ந்தோர் பலர் நெருங்கி அரசர்க்கு வெப்பம் தணிய எத்தனையோ செய்தும் பயனில வாயின.

அரசனது நிலைமையினை அறிந்து சமணக்குருக் கண் மார்களெல்லோரும் ஓடிவந்து, தாம் இரவிற் செய்த தீங்கின் பயனே அரசன் இவ்வாறு துன்புறு கின்ருனென்று எண்ணி 'அருகனே! அருகனே!! எம் அரசனைக் காவாய்' என்று ஓலமிட்டு அரசன்வெப்பு நோய் தணிய அவனைத் தடவலாயினர். ஆனல், தம் சமண அடிகண்மார்கள் ஏது செய்யினும், அதனல்

நோயின் கொடுமை சிறிதுந் தணியப் பெருது அவனுடம்பினின்றும் தீப்பொறி சிதறி வீழ்வது போற் பொங்கியதாற் பொறுக்கமாட்டாளுய் அரசன் சமணர்களைப் பார்த்து “ எம் அருகில் நீவிர் ஒருவரு மில்லாது ஒழிந்துபோமின்” என்று உணர்வு சோர்ந்து உரைத்தான். அரசியார் தங்கணவன் நிலைமையைக் கண்டு கலங்கி, “ இன்றிரவு பொல்லாச் சமணர்கள் நம்பெருமானுக்குச் செய்த தீங்குதான் நம் அரசற்கு இவ்வாறு மூண்டதோ ’ என்று குலச்சிறையாரிடங் கூற அவரும், சமணர்கள் நம் பெருமானுக்குத் தீங்கிழைத்ததனுலேயே அரசனை அவர்கள் அணுகி னுலுங்கூட நோய் முன்னிலும் பதின்மடங்காய் மிகு கின்றது’ என்ருர். மங்கையர்க்கரசியார் தம் கணவனர் பக்கத்தி லமர்ந்து, “ என் இறைவனே! நம் மதுரைமா நகர்க்கு வந்திருக்கின்ற பெரியாரான திருஞான சம்பந் தப் பெருமானுக்கு இவ் அருகர்கள் செய்த தீய செயலினுலேயே தங்கட்கு இந்நோய் வந்ததாகும் ; ஆதலின், அப்பெருமானே இந்நோய் தீர்த்தற்கு அருள் செயல் வேண்டும் ; உடம்பையும் மனத்தையும் தூய்மை செய்யாராகிய சமணர்கள் செய்யும் சூழ்ச்சிக ளெல்லாம் இந்நோயை வளர்ப்பனவேயாகும். எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் தந்த அருட்பாலை உண்டு அவனருளைப் பெற்றவராகிய ஞானசம்பந்தப்பெருமான் தங்களை விரும்பி நோக்குவ ரேல் இத்தீப்பிணி ஒழிவதேயல்லாமல் நம் பிறவிப் பிணியுந் தீரும்” என்ருர். அரசன் செவியினூடே அரசியார் கூறிய இம்மெய்யுரையுந் திருஞானசம்பந்தப் பெருமான் என்னுந் திருப்பெயரும் நுழைந்தபோதே அரசன் அயர்வு நீங்கப் பெற்றுச் சமணர்கள் செய்யுஞ் செய்கைகளெல்லாம் தம் நோய்க்கே ஏதுவாயின என்று தெளிந்தான்; பின் அரசன், “ யானடைந்த இந்நோயை அம்மாமறைச் சிறுவர் தீர்ப்பரேல் அவர்

பக்கஞ் சார்வேன்; அவரை அழைமின்" என்று அரசியாரிடங் கூற அரசியாருங் குலச்சிறையாரும் பேருவகை பூத்துப் பேரின்ப வெள்ளத்திற் படிவாரா யினர்.

உடனே மங்கையர்க்கரசியார் தம் கணவனிடம் விடை கொண்டு தோழிமார் பலருஞ் சூழச் சிவிகையில் ஏறித் திருஞானசம்பந்தப் பெருமானை அழைக்கச் செல்வாராயினர். இதற்குள் குலச்சிறையாருங் குதிரைமே லேறிப் பெருமானிருப்பிடஞ் சென்றனர். அரசியாரும் அவரது அமைச்சரும் வந்தணைந்தது கேட்டுச் சண்பையர்கோன் அவர்களை உடனே உள்ளே வருமாறு அருள் செய்தனர். அரசியாருங் குலச்சிறை யாரும் உட்சென்று பெருமானைக் கண்குளிரக் கண்டார்கள். கண்டதும் அமண் கொடியோர் பெரு மானுக்குச் செய்த பெருந்தீங்கினை நினைந்து உருகின மனத்தோடுங் கண்ணீர் ததும்ப நிலமுற வீழ்ந்து புரண்டு பெருமான் திருவடிகளை அன்பினுற் பற்றிக் கொண்டு தேம்பும் அவ்விருவரையும் பெருமான் தம் திருக்கைகளாலெடுத்து ஆறுதல் சொல்லி, " நுங்கட்கு ஏதேனுந் தீங்குளதோ" என்று கேட்டனர். "கொடிய சமணர்களால் அடிகளுக்கு ஏதேனும் தீங்கு நேரிடுமோ என்று முன் அஞ்சி வருந்தினோம். ஆனால், அவர் செய்யுங் கொடுஞ் செயல் நம் பெருமானைச் சேரா தென்னும் உறுதி கொண்டேமாதலின் அவ் அச்சம் ஒழிந்தேம்; அத்தீயோர் செய்த தீத்தொழில் அரசன் பால் வெப்பு நோயாக எழுந்து அளவில்லாமல் அவனைத் துன்புறுத்துகின்றது! அவ் அமண் குண்டர் கள் அரசனது வெப்பு நோய் தணியச்செய்த சூழ்ச்சிக ளாலெல்லாம் அது தீராதாயிற்று. இத்தீப்பிணியால் துன்புறும் மன்னவன் முன் அக் குண்டர்களை வென்று அவனும் யாமும் உய்யுமாறு பேரருள் புரிக" என்று இருவரும் வேண்டினர். இவர்கள் வேண்டுகோளுக்கு

இரங்கி ஞானசம்பந்தப்பெருமான் அவர்களை அஞ்ச வேண்டாமென்று அருள் செய்தனர். பின் வெள்ளம் போற் றிரண்டு வருகின்ற தம் அடியவருடன் வள்ளலார் மடத்தினின்றும் புறப்பட்டு ஆலவாய்க்குச் சென்று வணங்கி,

"நோக்கிட விதியிலாரை நோக்கியான் வாதுசெய்யத்
தீக்கனல் மேனியானே திருவுளமே"

என்றும்,

"ஞாலநின் புகழே மிகவேண்டும்"

என்றும் பாடல்களருளித் தொழுது சிவபிரானிடம் விடைபெற்றுச் சிவிகை ஏறி அன்பரெல்லாம் ஆர்ப் பெடுப்ப அரசியார் சிவிகை மீது பின்வரக் குலச்சிறையார் அடியார் கூட்டத்தின் முன் செல்லப் பெருஞ் சிறப்புடன் அரசனது அரண்மனையை அடைந்தனர். குலச்சிறையார் முன் சென்று அரசனிடம் பிள்ளையாரது வரவு கூற, அரசன் தனக்கு முன்னிருந்த பெருந் துன்பம் நீங்கித் தன் தலைப்பக்கத்தே முழுமணிபதித்த பொன்னிருக்கை ஒன்று இடும்படி கட்டளையிட்டான். அரசன் இவ்வாறு செய்ததைச் சமணர்கள் பார்த்து, "உன்னுடைய சமயத்தை நீயே பாதுகாத்தல் வேண்டும்; ஆதலால் அவரும் யாங்களும் உன் நோய் நீங்குமாறு நீ மொழிந்து, எங்களால் நின் நோய் தீர்க்க முடியாமல் அச் சைவச் சிறுவரால் அது தீரப் பெற்றாயானாலும், யாங்களும் அதனைத் தீர்த்ததாகவே இசைந்து சொல்லுதல் வேண்டும்" என்றார்கள். இது கேட்ட அரசன். 'இருதிறத்தவரும் தத்தமது தெய்வவன்மையால் என் நோயைத் தீர்த்தல் வேண்டும்; ஆதலால், யான் ஓரஞ்சொல்லேன்' என்றான். இதனாற் சமணர்கள் கிளர்ச்சியின்றி இருந்தபொழுது, தவக்கொழுந்தாகிய திருஞானசம்பந்தப்பெருமான் அரசியாரும் குலச்சிறையாரும் முன் செல அரசனது இருப்பிடஞ்

சேர்ந்தனர். வானில் உலவும் முழுமதி இந்நிலத்திருளை நீக்கக் கீழிறங்கி வந்தாற்போலப் பெருமான் வருதலைக் கண்ட அரசன் தன்னிலை மறந்து அவரைக் கை எடுத்துத் தொழுது அவர் அமருமாறு தன் முடியின் பக்கத்தேயிருந்த இருக்கையைக் காட்டினன். பெருமானும் இருக்கையில் அமர்ந்த பிறகு அவரது திருநோக்கம் படுதலாலே அரசன் வெப்பு நோய் சிறிது நீங்க அவரைப் பார்த்துத் "தேவரீரது ஊரெது?" என்று கேட்டனன். அதற்கு விடையாகப் பெருமான் தமது ஊர் பன்னிரண்டு திருப்பெயருடைய கழுமலமென்று அப் பன்னிரண்டு பெயர்களையும் அமைத்துப் பதிகம் பாடி அருளினர்.

சம்பந்தப் பெருமான் இருக்கையில் அமர்ந்திருந்ததைக் கண்ட சமணர்கள் மனம் பொறுராய் அச்சங் கொண்டாராலும், அதனை மறைத்துச் சினங் கொண்டவராய், ஒளிபொருந்திய சிவந்த கதிரோனைக் கரிய வான கூட்டங்கள் சூழ்வனபோற் கருநிறமான சமணர்கள் பிள்ளையாரைச் சுற்றி நின்று வழக்கினுல் இவரை வெல்லுதல் கருதித் தம் நூல்களின் பெயர்களையெல்லாங் கூறிப் பெருங் கூச்சலிட்டனர். இது கண்டு பெருமானுர் சமணர்களை நோக்கி, "நும்முடைய கொள்கைகளை உள்ளவாறு கூறுக" என்றனர். சமணர்களிற் பலர் துள்ளி எழுந்து பதறிக் கதறுவதைக் கண்ட மங்கையர்க்கரசியார் கலக்கங்கொண்டு மனம் பொறுராய்த் தங் கணவனைநோக்கித் "திருஞான சம்பந்தப் பெருமானுர் சிறிய பிள்ளைத் திருமேனியுடைய தனியர்; இச் சமணர்களோ எண்ணில்லாதவர்; இவர்கள் பெருமானைச் சூழ நின்று இங்ஙனங் கூச்சலிடுவது முறையன்று; உம்முடைய பிணியை வள்ளலார் தீர்த்த பிறகு, இவர்கள் வழக்கிடுதலில் வல்லராயிற் பேசுக" என்றனர். அரசனும் "வழக்கு ஏதுக்கு? நீங்களும், பிள்ளையாரும் என் வெப்பினை

ஒழித்து இருவர் தம் தெய்வத்தன்மையையும் என்னிடங் காட்டுங்கள்" என்று சமணர்களை நோக்கிக் கூறினன். பால் மணம் மாருத சிறு ஆண்டினராகிய பெருமானைச் சூழ நின்று அலறும் சமணர்களது கூட்டத்தையும், அவரிடுங் கூச்சலையும் நோக்கி அரசியார் கலங்கி நின்று வெதும்புவதைக் கண்டு ஞானசம்பந்தப் பெருமான்,

"மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாய்ஒரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை ஆதியாயஇ டங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு ஆலவாய்அர னிற்கவே"

என்னுந் திருப்பதிகத்தினை அருளி அரசியாரை அஞ்ச வேண்டாமென்று பணித்தனர்.

அரசன் கூறியவாறே அவனது இடப்பாகத்திலே வெப்பு நோயைத் தீர்க்க முனைந்த சமணர்கள், தமது பீலிகொண்டு மன்னன்றன் இடப்பக்கந் தடவ வெப்பு நோய் மேன்மேலு மூண்டெழுவதாயிற்று. இக் கொடுந்துன்பம் பொருனய் மன்னன் சமணர்களை விலகச்சொல்லிப் பிள்ளையாரை நோக்கினன். உடனே சம்பந்தப் பெருமான் அரசனது குறிப்புணர்ந்து, அவனது வலப்பக்கத்துவெப்பை 'மந்திரமாவது நீறு' என்னுந் திருப்பதிகம் பாடித் திருநீறு பூசித் தீர்த்தருளினர். ஆனுற், சமணர்கள் கைப்பட்ட இடப்பக்கத்தின் வெப்போ வலப்பக்கத்திற் றீர்ந்த வெப்புடன் கூடி மேன்மேல் மிகுந்தெரியுந் தீப்போல் அவ்விடத்தில் அடங்கா தாய்ப் பொங்கி எழுவதாயிற்று. இஃதுணர்ந்த அரசன் பெருவியப்படைந்து, "ஈதென்ன புதுமை! உலகிலுள்ள குளிர்ச்சியெல்லாம் என்னுடம்பின் வலப்புறத்திலும், வெப்பெல்லாம் இடப்பக்கத்திலும் அமைந்துளபோற் றேன்றுகின்றன. மக்களுக்குப் பேரின்பம் ஒரு பக்கமும் உலகத் துன்பம்...

மற்ருெரு பக்கமும் இருப்பது போலவும், ஒரு பக்கம் நஞ்சும், மற்ருெரு பக்கம் இன்சுவைமிக்க அமிழ்தும் அமைந்தது போலவும் என்னுடம்பினுள்ளேயே இப்போது உணரப்பெறுகின்றேன்; ஆதலால், கொடிய தொழிலையுடைய அருகர்களே எம் எதிரில் நில்லாது அகன்று போமின்கள்" என்று சொல்லிச் சம்பந்தப் பெருமானைப் பார்த்து, "யான் பிழைக்குமாறு ஈண்டெழுந்தருளிய வள்ளலே! மற்ருெரு பக்கத்து வெப்பு நோயையுந் தீர்த்து என்னை ஆட்கொள்வீராக" என்றிறைஞ்சினன். பெருமானும் அதற்கிசைந்து முக மலர்ச்சியோடு சிவபிரானை வழுத்தி அப்பக்கமுந் திருநீற்றைத் தடவ, அரசனும் நோய் முற்றும் நீங்கிப் பேரின்பம் பெற்று ஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளைத் தன் முடிமேற்கொண்டு 'யானுய்ந்தேன்' என்றனன். அரசியாருங் குலச்சிறையாரும், 'அரசன் வெப்பு நோய் தீரப்பெற்ருன்; சிவ நெறியின் உண்மையினையும் உணர்ந்தான்; பிறவிப்பயனும் பெற்ருன்' என்று மகிழ்ந்து வள்ளலாருடைய திருவடிகளைத் தம் தலைமேற் கொண்டு பேரின்பக்கடலில் ஆழ்ந்தனர்.

இதுகண்ட சமணர்கள் தஞ்செயல்களெல்லாம் பயனில்லாமை உணர்ந்து அச்சமேற்கொண்டு இன்னும் மேற்செய்வது என்னவென்று நினைத்துப் பார்த்தனர். முடிவில் தீயினுலும் நீரினுலுந் தமது கொள்கையை நிலை நாட்டுவேம் என்று அரசனிடமும் சம்பந்தரிடமுங் கூறினர். இவ்வாறு இவர்கள் வீண்வழக்குப் பேசுவது கேட்ட அரசன் வெகுண்டு, "என் உடல் நோயை நீக்க அறியாத உமக்கு என்ன வழக்கு!" என்றனன். சம்பந்தப்பெருமான் அவர்கள் விரும்பியவாறே வழக்கிடுவோம் என்று கூறியதால் அரசனும் ஒருப்பட்டான். சமணர்கள் சம்பந்தப்பெருமானோடு வழக்கிடுதற்பொருட்டு அரசனேவலால் அரசவை முன்பு பெருந்தீ வளர்க்கப்பட்டது; அதன்கட் சம்பந்தப்

பெருமான் தாம் அருளிச்செய்த 'திருநள்ளாற்றுப் பதிகம்' எழுதிய ஏட்டினையெடுத்துத் தீவடிவாய் விளங்கும் முதற் கடவுளான சிவத்தைத் தொழுது, அதனை அப் பெருந்தீயில் இட்டார். சமண முனிவர்களுந் தமது கொள்கை வரைந்த ஓரேட்டினைக் கொணர்ந்து தீயிலிட்டனர். அவ் ஏடு இமைப்பொழுதில் அழிந்து சம்பராய்ப் போனது. முழுமுதற் கடவுளாகிய சிவபிரானது உண்மையை எழுதியிட்ட சம்பந்தப் பெருமானது ஏடோ அப்பெருந்தீயிற் சிறிதும் பசுமை நிறம் மாருமலே எடுக்கப்பட்டது. அதனைக் கண்ட சமணர்கள் தம் பொறிகலங்கி வயிறெரிந்தனர்.

சமணர்கள் இம்மட்டோடு அடங்காது "இரண்டாம் முறையாக இருவர்தம் கொள்கைகளின் மெய்ப்பொருள் எழுதிய ஏடுகளை வைகை நீரில் விடுவோம்; எதிர்கிழித்தோடி ஒதுங்கும் ஏடே உண்மைக் கொள்கையைத் தாங்குவதாகும்" என்றனர். இதற்குப் பெருமான் இசையவே, இருவர்தம் ஏடுகளும் அங்ஙனமே வைகையாற்றில் விடப்பட்டன. சமணர்கள் விட்ட ஏடு நீர் ஓடும் வழியே விரைந்து ஓடிக் கடலில் மறைந்தொழியத், திருஞானசம்பந்தப் பெருமான் "வாழ்க அந்தணர்" என்னுந் திருப்பதிகம் அருளிச்செய்து அதனை ஓரேட்டிலெழுதி அவ் ஏட்டை வைகையிலிட அஃது ஆற்று நீரை எதிர்கிழித்தோடி ஆற்றங்கரையிலுள்ள திருஏடகத் திருவூர்ச் சிவபிரான் கோயிலுக்கெதிரே நிலைபெறக் குலச்சிறையார் குதிரைமேற் சென்று அதனை எடுத்துவந்தனர்.

சமணர்கள் தாம் எல்லா வகையிலுந் தோல்வி உற்றமை உணர்ந்து மனம் அழிந்தனர். அரசனும், ஊராரும் திருஞான சம்பந்தப் பெருமானல் சிவபிரானது முழுமுதற்றன்மையை உணர்ந்து சிவநெறியைக் கைப்பற்றுவாராயினர். அரசனும் ஊராரும் சைவராகவே, மதுரைமாநக ரெங்குமுள்ள சிவபிரான்

கோயில்கள் எல்லாந் திறக்கப்பட்டன. சிவ! சிவ!! என்ற ஓசை எங்கும் எழுந்தது. திருநீற்றினொளியும் எங்கும் பரவியது. பாண்டிய அரசன் தனக்கு முன்னிருந்த கூனுடம்பும் திருஞானசம்பந்தப் பெருமான் "வேந்தனும் ஓங்குக" என்றருளிச் செய்தமையால் நிமிரப் பெற்றுப் பேரழகுடையனாய் நெடுமாறநாயனார் என்னுந் திருப்பெயரும் தாங்கப்பெற்றான். மங்கையர்க்கரசியார் தாம் நீண்ட நாட்களாகச் சிவபிராற்குத் தொண்டுசெய்து தவமியற்றியதன் பயனாகத், திருஞானசம்பந்தப் பெருமானைக்கொண்டு தங் கணவனும் குடிகளும் சிவபிரானது உண்மையை உணருமாறு செய்தனர். பின்னும், அத் தவத்தை மேற்கொண்டு மேன்மேலும் சிவபிரானை ஓயாமல் வணங்கி அதனால் அவனது மெய்யுணர்வு நிரம்பப் பெற்றவராய் இறைவனருளிற் கலந்தனர்.

---

## அரசியாரது வரலாற்றின் அருங்கருத்துக்கள்

**மங்கையர்க்கரசியார்** புகழ்பெற்றோங்கிய சோழ மன்னன் ஒருவனுக்குத் திருமகளாராய்ப் பிறந்து, மதுரையை அரசாண்ட கூன்பாண்டியனுக்கு அருந்தவ மனைவியாரா யமர்ந்தனர். பேரழகுமிக்க அரசியார் சோழமன்னன்றன் புதல்வியாராயும், பாண்டிமன்னன்றன் அருமை மனைவியாராயும் அமைந்தமையாற் குறைவற்ற செல்வமுடையராயிருந்தும், அச் செல்வ வாழ்க்கையை ஒரு பொருட்டாக நினையாது, இறைவன் திருவருள் பெறுதல் ஒன்றையே பெருங் குறிப்பாகக் கொண்டு அறிவு நூல்கள் கற்பதிலும், இறைவனை இடையறாது வணங்குவதிலுமே தமது வாழ்நாளைப் பயன்படுத்துவாராயினர்.

அரசியார் எழில்மிக்க வடிவத்தினரென்பது சேக்கிழார் பெருமான் "தெய்வப் பாவை" "செங்கமலத் திருமடந்தை" என்றும், திருஞானசம்பந்தப் பெருமான் "பங்கயச் செல்வி" "மானினேர்விழி மாதர்" என்றும் அருளிச்செய்தமையால் விளங்கும். அவ்வாறிருந்தும் அரசியார் தம் இயற்கை உடம்பழகை இன்னும் மிகுதியாக அழகுபடுத்தும் ஒப்பனைகளிலுங் கருத்து வைத்தாரில்லை. தம் உயிரே இறைவனை எண்ணும் எண்ணங்களால் அழகு பெற்று விளங்கவேண்டுமென்று கருதினர்.

இவர் பாண்டியனுக்கு மனைவியாராகி மதுரையிலிருந்தபோது, சமணர்கள் செய்த பெருமுயற்சியாலும் சூழ்ச்சிகளாலும் அவர்தம் பாழான சமணக்கொள்கை அம் மாநகரெங்கும் பரவுவதாயிற்று. அரசனும் சமணர்களது சூழ்ச்சியிற் சிக்கிச் சமணனாயினான். "அரசன் எவ்வாறோ குடிகளும் அவ்வாறு" என்ற பழமொழிக் கிணங்க, அரசன் சமணனாகவே அவன் குடிமக்களெல்லாரும் அவன் பக்கஞ் சார்தலே சிறப்பெனக் கருதி அக்கொள்கையைத் தழுவிச் சமணராயினர். சிவபிரானை வணங்குஞ் சைவர் பெரும்பான்மையும் அவ்வூரில் இலராய்ப் போக, அங்குள்ள சிவபிரான் கோயிலிலே வழிபாடும் அருகலாயிற்று. திருநீற்றுக் காட்சியைக் காண்பதும் அரிதாயிற்று. எவரைப் பார்த்தாலும் அவரெல்லாம் மயிர்பறித்த தலையும், கக்கத்திற் பாயும், கையில் மயிற் பீலியும், பாழடைந்த நெற்றியும் உடைய சமணராகவே காணப்பட்டனர். பாண்டி நாடு சமண்நாடாக மாறியது. இவ்வாறு சைவங் குன்றிச் சமணம் மேலோங்கியதால் தாம் அடைந்த கேட்டினைச் சைவராய்ப் பிறந்த எவருங் கருதிப் பார்க்கவில்லை. அரசனாகிய கூன்பாண்டியனும் எவ்வளவோ நூல்களைக் கற்றவன்; கற்றார் பலருடன் பழகி அவர்கள் கல்வி கேள்விகளில் மிகுதியாக ஈடுபட்டவன்;

அவ்வாறவன் அவ்வளவு கற்றும் பயனென்ன? திருவருட்டுணையின்மையால் எல்லாம் வல்ல ஒரு முழுமுதற் கடவுளை அறியாது மயங்கிச் சமண வலையிற் சிக்குண்டான்.

இறையவனுண்மையைத் தெளிவாகக் காட்டுதலில்லாத பருப்பொருட் கொள்கைகளெல்லாம், அக்கொள்கையினர் செய்யும் வலிந்த பெருமுயற்சிக்கேற்ப மிகுதியாய்ப் பரவும். உலகிற் பல்வேறு காலங்களிற் பல வேறு கொள்கைகளும், பல வேறு அரசாட்சிகளும் தோன்றியும் மறைந்தும் வருகின்றன. ஒரே கொள்கையோ அல்லது ஒரே அரசாட்சியோ எங்கும் எக்காலத்தும் நிலைபெறுவதில்லை. ஏனென்றால் மக்கள் மனநிலையானது பெரும்பாலும் அறிவையும் பற்றாது அறியாமையையும் பற்றி நில்லாது திரிபுணர்ச்சியால் அலையுந் தன்மையது. இவ்வாறு மக்கள் திரிந்த எண்ணத்தினராயிருத்தலினாலேயே பலப்பல அரசாட்சிகளும் கொள்கைகளும் தோன்றாநிற்கும். என்றாலும், எல்லா உலகங்களையும் எல்லா உயிர்களையும் படைத்துக் காத்து ஆண்டுவரும் இறைவனது ஆட்சியும் அவனது உண்மைக் கொள்கையுமோ எக்காலத்தும் அழியாமல் நிலை பெறுதல் உடையனவாகும். கரிய வானில் ஒருபோது மறைபட்ட நிலவானது மறுபோது அம்மறைவு நீங்கி ஒளி வீசுவதுபோல, இறைவனுண்மையைக் கூறுங் கொள்கையானது, மற்றைக் கொள்கையினர் செய்யுஞ் சூழ்ச்சிகளால் ஒரு காலத்து மறைவதுபோற் காணப்படினும், பேரறிவுபெற முயலும் அறிவுடையோர் எக்காலத்தும் உளராதலால் அவர்களால் அது மறுபடியுஞ் சிறந்தோங்கி விளங்கும். ஆறறிவுடைய மக்கள் தமது பகுத்தறிவு கொண்டு மெய்ப் பொருள்களைத் தீரத்தெளிய ஆராய்ந்து, அதனால் முற்றறிவு பெற்று இறைவனருளிற் படிதலே அவர் பிறவி யெடுத்ததன் பெரு நோக்கமாகும்.

இறைவனுண்மையைப் பற்றி நில்லாமல், வெளித் தோற்றத்திற்கு வீண் ஆரவாரமாய் முடியுஞ் **சமணம் புத்தம்** என்னும் சமயங்களின் கொள்கைகளை ஆராயாது அவைகளைத் தழுவுதல் நல்லதாகாதென் பதைக் கூன்பாண்டியன் உணர்ந்தானில்லை. அரசன் சமணக் கொள்கையின் உண்மை காணாது அதனைக் கைப்பற்றியிருப்பானோ என்று சிலர் நினைக்கலாம். அதனைச் சிறிது ஆராய்வாம்.

கடவுளை நேரே கண்டு அவனருள் பெற்று, அவ்வருள் உதவியால், அவனுடைய அருட்பெருந் தன்மைகளை அறிந்தவர்களே, இறைவனது இலக் கணத்தையும் அவன் படைப்பின் உண்மை நிலை களையும் ஆராய்ந்து மாறுபடாமல் மக்கட்கு அறி வுறுத்த வல்லராவர். இவ்வாறு இறைவனை நேரே காணும் பெரும்பேற்றையும், அவன் தன்மைகளைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லும் பேராற்றலையும் பெற்று விளங்கியவர்கள் **மாணிக்கவாசகப் பெருமான், திருஞான சம்பந்தப் பெருமான்** முதலான சைவ சமய ஆசிரியர்களே யாவர். கடவுளை நேரே கண்டு அவனருள் பெற்ற வர்கள் நஞ் சைவ சமயத்தில் தவிர வேறெந்தக் கொள்கையிலும் இல்லை. கடவுள் தந் திருமேனி காட்டி அவர்களை ஆண்டுகொண்ட தன்மை சைவ ஆசிரியர்கள் தம்மை மறந்து பாடிய செய்யுட்களால் நன்கு விளங்குதல்போல, ஏனைச் சமண் முதலான சமயத் தலைவர்தம் நூல்களிற் சிறிதும் விளங்குதலில்லை. சைவமல்லா ஏனைக் கொள்கைகளை நிலைநாட்டிய ஆசிரியர்கள் எவருந் தாம் கடவுளைக் கண்டதாக எங்கும் தெளிவாகக் குறிப்பிடவில்லை. இவ்வுண்மை களை, "**மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும்**"* என்ற நூலில் தெளிவாகக் காணலாம். **புத்தக்**கொள்கையை

---

* சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகளால் எழுதப் பட்டது.

நிலை நாட்டிய கௌதம சாக்கியர் தம் மாணுக்கரிற் சிலர் தம்மை அணுகிக் கடவுளினுண்மையை அறிவுறுத்துமாறு கேட்டபோது, "யாம் கடவுளை நேரே கண்டதில்லை. அதனால் அவனது தன்மையை யாம் விரித்துரைத்தல் ஏலாது; பொய், கொலை, களவு, காமம் என்னும் நான்கினையும் நீக்கித் தூய வழியில் நல்லவனாய் நடக்கின்றவனே கடவுளைக் காணுதல் கூடும்" என்று கூறினார்.

இவ்வாறே சமண ஆசிரியரும் மக்கள் நல்ல வழிகளில் ஒழுகுமாறு அறங்கூறினரே ஒழியத் தாம் கடவுளைக் கண்டதாக எங்குங் கூறவில்லை. இச் சமணப் பெரியார் எல்லாரும் "நல்லவர்களாய் ஒழுகுமின்கள்" என்று கூறிப்போக, அவர் பின் வந்த சமணர்களோ அவர்தம் கருத்துக்கும் மாறுக அக்கொள்கையைப் பல பொருள்படத் திரித்துவிட்டனர்; கடவுளைப் பற்றித் தம் ஆசிரியன்மார் ஏதுங்கூருமையால் கடவுளே இல்லை எனவுங் கரைந்தனர்; ஆசிரியரையே கடவுளெனக் கொண்டு வழிபடலாயினர். 'அவ் ஆசிரியரே தமக்குப் பேரின்பந் தரவல்லார்; உலகத்துப் பொருள்களெல்லாம் பொய்; அப் பொருள்களால் நுகரப்படும் இன்பமெல்லாந் துன்பம்; ஆதலால், உலகம் துன்பம் நிறைந்தது; இன்பமற்றது; ஆனதுபற்றி ஆண் பெண் என்னும் இருவகுப்பார்க்கும் மணம் வேண்டுவதில்லை;' உடம்பும் வெறும் பொய்த் தோற்றமாதலின், அதனைப் பாதுகாக்க நல்ல உணவும் தூய ஆடையும் வேண்டுவதில்லை; என்னுங் கொள்கையினராய் ஊர் ஊராய் இரந்துண்ணுதல், அக்கத்திற் பாயிடுக்கல், கையில் மயிற்பீலியுந் தடுக்கும் ஏந்தித் திரிதல் என்னுமிவற்றையே தவநெறியாகக்கொண்டனர். இன்னுமிவர்கள், பொய், கொலை, களவு, காமம் என்னும் நான்கினையும் நீக்கி ஒழுகுதல் ஒன்றே தமக்குச் சிறந்த நெறியெனக் கருதினர். இவர்களை நோக்கி "நீங்கள்

வழிபடும் முனிவன் எத்தன்மையன்?" என்று கேட்டால், அதற்கவர்கள் "எம் முனிவன் எல்லாம் வல்லவன்; உயிர்களின் அறியாமையை நீக்குவதற்காக மக்கட் பிறவியிற் பிறந்து பல துன்பங்களையும் அடைந்து பிறவியை வெறுக்கின்றான்" என்கின்றனர். இவ்வாற்றால், தம்மைப்போலவே நோய் முதலிய துன்பங்களிற் பட்டொழியும் ஓர் உயிரானது தமக்குப் பிறவித்துன்பத்தை ஒழித்துப் பேரின்பத்தைத் தர வல்லதாகுமென்று கூறுமுறை குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதனையே ஒத்ததாகின்றது. இன்னும் உண வில்லாமல் வருந்தும் வறியோனொருவன் தன்னைப் போன்ற வறியோன் ஒருவனிடஞ் சென்று ஏதும் உதவுமாறு கேட்பானாயின் அவனிடம் அதனைப் பெறுதல் முடியுமா? அவ்வறியோன், தன்னிற் சிறந்த பெருஞ்செல்வவான் ஒருவனிடம் போய்த் தான் வேண்டியதைப் பெற்றாலன்றோ தன் துன்பம் நீங்கப் பெறுவான்? என்றும் அழிவில்லாதவனாய் இன்ப வடிவினனாய் நிற்கும் இறைவன் ஒருவனை நாம் பற்றி நின்றாலன்றோ நமது பிறவித் துன்பம் ஒழியும்? பேரின்பமும் அடையலாம். இக்கருத்தினையே தெய்வத் திருவள்ளுவ நாயனார்,

> "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடிசேரா தார்"

என்றருளினர்.

இவ்வுண்மையைச் சமணர்கள் சிறிதும் உணர்ந் தார்களில்லையே!

இன்னும், உலகம் துன்பம் நிறைந்தது; இன்ப மற்றது என்று கூறுமிவர்கள் தமக்குப் பசித்துன்பம் உண்டாயபோது, ஒன்றும் உண்ணாது அத்துன்பத்தி லேயே உறைத்து நிற்றலே செயற்பாலரல்லது அதை மாற்ற இன்பமாகிய உணவை விரும்புவதேன்?

துன்பத்தைத் தருங் கொடிய வெயிலில் இவர்கள் ஓர் இமைப்பொழுதேனும் நிற்க ஒருப்படுவரா? தம் உடம்பின் தோற்றம் வெறும் பொய்யேயாதலின் அதனை அழிக்க முயல வேண்டுமென்னுமிவர்கள் உணவைத் துறந்து இருத்தல் ஏலுமோ? கூறுமின்கள். இவர்கள் ஒருழைப்புமில்லாமல் இரந்துண்ணுவதே தவநெறி என்பர். நாம் அறியாமை தேய்ந்து அறிவு விளங்கி இறைவனருளைப் பெற்றுப் பேரின்பம் அடைவதற்காகவே இறைவன் நமக்கு இப்பிறவியையும் உலகத்தையும் தந்திருக்கின்றான். நாம் பல துறைகளிலும் உழைப்பதால் நாம் அறியாமை தேய மேலும் மேலும் அறிவு விளங்கிப் பல நன்மைகளையும் அடைந்து வருகின்றோம்.

> "முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்"
> "முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
> இன்மை புகுத்தி விடும்"
> "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"

என்று ஆன்றோர் கூறியவாறு நாம் முயற்சியுடையராயிருத்தலே அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாகும். சமணர்கள் உழைப்பொன்றுமின்றி இரந்துண்ணுதலால் இவர்கட்கு உலகத் தொடர்பு நீங்குவதாமோ? ஏனைய மக்கள் கடு வெயிலையும் மழையையும் பாராது வயல்களில் நின்று வருந்திப் பயிரிட்டு உணவுதருதலாலன்றோ இவர்கள் இரந்துண்ணுந் தொழிலை ஏற்று நின்றனர். மக்களுக்கு மணம் வேண்டாமென்று கூறுமிவர்கள், உலகில் ஆணும் பெண்ணுமாக எதன் பொருட்டுப் படைக்கப்பட்டார்கள் என்னும் உண்மையை அறிந்தவராவரோ?

இவ்வாறு சமணரது கொள்கையானது மக்கட்குச் சிறிதும் பயன்படாது ஒருபுற மிருக்க, இவர் தாமுந் தங்கொள்கையில் வழுவாது ஒழுகினரோவென்றால்

அதுவுமில்லை. இவர்கள் சொல்வது ஒன்று; செய்வது வேறு; நம்மைப் படைத்துக் காக்கும் இறைவன் ஒருவனிருக்கின்றானென்று உணர்ந்து அவனிடத்துப் பேரன்பு கொண்டு ஒழுகுகின்றவர்களே, இறைவன் படைத்த மற்றை எல்லா உயிர்களிடத்தும் ஒரு படித்தான அன்பு காட்டுவர். இறைவனிடத்து அன்பில்லாதவர்கள் பிற உயிர்களிடத்தும் அன்புகொள்ளார் என்பது குறித்தே சிவஞான சித்தியாரும்,

"ஈசனுக் கன்பில்லார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்"

என்று கூறுவதாயிற்று. சமணர்கள் கடவுளிடத்தில் அன்பு கொள்ளவில்லையாதலின், அடியார்களிடத்தும் பிற உயிர்களிடத்துஞ் சிறிதும் அன்பில்லாதவராயினர். அங்ஙனமன்று; அவர்கள் சிற்றுயிர்களிடத்துப் பேரிரக்கங் காட்டும் இயல்பினராதலால், தம் தலையில் மயிர் வளர்க்கப் பேன் உண்டாகும்; அதனைக் கொல்லுதல் வேண்டுமே என்று மொட்டையராயினர்; இரவில் விளக்கேற்றுவதாற் பல சிற்றுயிர்கள் விளக்கில் வீழ்ந்து மாயுமேயென்று இரங்கி இருட்டுவதற்குள் உணவுகொள்வர் என்பார் பலர். அவர்கள் இவ்வாறு உயிர்களிடத்துப் பேரிரக்கங் காட்டுவது வெறுவெளித் தோற்றமேயல்லாமல் வேறில்லை. எவ்வாறெனில், தங் கொள்கைக்கு இசைந்தவர்களைத் தம்போலாக்கியும் அவ்வாறு இசையாதவர்களைப் பலவகையில் துன்புறுத்தியும் வந்தனர். எடுத்துக் காட்டாகத் தங் கொள்கையோடு மாறுபட்டு அதனின்றும் விலகிய அப்பரடிகளைக் கற்பாறையோடு கட்டிக் கடலில் தள்ளியும், நீற்றறையில் அடைத்தும், யானைக்காலில் இடறுவிக்க முயன்றும் அவரைக் கொல்லுவதற்காக எத்தனை கொடுந் தொழில்களைச் செய்யத் துணிந்தனர். திருஞான சம்பந்தப் பெருமானையும் அவர் அடியார்களையும் மடத்தோடு கொளுத்தி அழிக்க முயன்றனர். இவ்வாறு

தங்கொள்கைக்கு இணங்காதவர்களைப் பல கொடிய வழிகளில் துன்புறுத்தி அவர்களின் அருமையான ஆறறிவுயிரையே அழிக்க எண்ணிய இக்கொடிய சமணர்கள் தம் மயிரிலுள்ள பேனினிடத்தும், விளக்கில் மாயும் சிறு பூச்சிகளிடத்தும் பேரிரக்கங் காட்டுவதாகச் சொல்லுவது எட்டுணையும் பொருந்தாதன்றோ? சிற்றுயிர்களிடத்துப் பேரிரக்கங் காட்டுதலை வற்புறுத்தும் இவர்கள் தாமே தம் கொள்கைக்கு மாறாய் மக்களை மாய்த்தல் பொருந்துமோ?

இவர்கள் இவ்வாறு சிறிதும் இரக்கமில்லாத வன்னெஞ்சர் என்பது ஒருபுற மிருக்க, இனி இவர்கள் பொய் சொல்லவும் அஞ்சாதவர்க ளென்பதைச் சிறிது காட்டுவாம். இவர்கள் **திருஞானசம்பந்தப் பெருமான்** தம் அடியவரோடு இருந்த மடத்தைத் தம் மந்திர மொழியின் ஏவலால் தீப்பற்றச் செய்வோமென்று அரசனிடங் கூறி வந்து, பின் அம்மந்திரமொழியால் மடம் எரியாமற் போகவே, மனம் வெதும்பி அரசனிடங் கூறியதற்கு மாறாகத் தீயையே கொண்டுபோய் மடத்தைக் கொளுத்தினமையால் இவர்கள் பொய்யர் என்பதும் பெறப்படுகின்றது. சம்பந்தப் பெருமான் அரசனது வெப்பு நோயைத் தீர்க்க வருகின்றாரென்பது கேட்ட இவர்கள் அரசனிடஞ் சென்று, "இறைவனே! அவ் அந்தணச் சிறுவனால் நீ உன் கொடிய வெப்பு நோய் நீங்கப்பெற்றாலும், நாங்களும் அதனை உடனிருந்து நீக்கினோமென்று உன் சமயத்தைப் பாதுகாப்பதற்காகப் பொய் சொல்லுதல் வேண்டும்" என்று அரசனையே **பொய்** சொல்லுமாறு ஏவினதாலும் இவர்கள் பெரும் பொய்யர்கள் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றதன்றோ?

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்"

என்று ஆசிரியர் திருவள்ளுவர் கூறியவாறு பொய் சொல்லாமை ஒன்றே மற்ற எல்லா அறங்கட்குந் தலைமையாய் நின்று தவநெறி காட்டுதலின், பொய் சொல்லாமை யாகிய அறத்தை ஆன்றோர் முன் வைத்தனர். பொய் சொல்லத் துவங்குஞ் செயலே கொலை, களவு, காமம் என்னும் மூன்றினுக்கும் ஏதுவாகும். சமணர்கள் பொய் சொல்லுதல் கூடாதென்னுந் தங் கொள் கைக்கும் பகைஞராயினர். இவர்கள் பொய் சொல்லத் துவங்கியபின் திருஞானசம்பந்தப் பெருமானையும் அவரடியவர்களையும் மடத்தோடு தீவைத்து எரித்துக் கொலைசெய்யத் துணிந்ததாற் கொலைஞருமாயினர்.

"நல்லாறு எனப்படுவது யாதெனில் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி"

என்ற குறளறிவுரையை அறவே மறந்தனர்.

எல்லாக் கொள்கையினரும் தம்மோடு மாறுபட்ட கொள்கையினரைத் துன்புறுத்துவது வழக்கம். இது போல், திருஞானசம்பந்தப் பெருமான் பாண்டிய னுக்கு வெப்பு நோயை ஏவியதும், பாண்டியனாற் சமணரைக் கழுவேற்றுவித்ததும் பொருத்தமோ என்பர். சம்பந்தப் பெருமான் மதுரைக்கு வருவதன் முன்னும் அதன் பின்னும், சமணர்கள் சைவசமயத் தவர்க்குப் பல வகையான இடையூறுகள் செய்தார்கள் என்பதைப் பெருமானே,

"ஆனைமாமலை ஆதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கு எளியேன் அலேன்திரு ஆலவாய்
அரனிற்கவே"

என்றருளிச்செய்தல் காண்க.

எத்துணை தீமை புரிந்தாலும், பின் அது செய்வதினின்றும் மாறி மனந் திரும்பியவர்களையே இறைவனும் அவனடியார்களும் பாதுகாப்பர். ஆனாற் சமணர்களோ ஒரு காலத்தும் மனந்திரும்பியவரல்லர். பாண்டியன் பழவினை தேய்ந்து அறிவு பெறுதற் பொருட்டும், அரசனாயிருந்தும் முறை பிறழ்ந்து சமணர்கள் செய்த தீச்செயலுக்கு இசைந்த குற்றத்தை அவன் தானே உணருதற் பொருட்டுமே **திருஞான சம்பந்தப் பெருமான்** அவனுக்கு வெப்பு நோய் தந்து அவனை ஆட்கொண்டருளினர். பல்லாயிரம் அடியவர்களைத் தீயிட்டு அழிக்கக் கருதிய சமணர்களைப் பெருமான் உடனே அழிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தால் அப்போதே அச் சமணர்களோடு அவர்களது கொள்கையும் அழிந்திருக்குமல்லவோ? ஆனாற் பெருமானோ இரக்கமே ஒரு வடிவு கொண்டவராதலின், சமணர்களை ஒருது அவர்கள் தீச்செயலுக்கு இசைவாயிருந்த அரசனைத் திருத்துதல் ஒன்றே கருதிச் 'சிறிதளவாக வெப்பு நோய் அவனை யடையட்டும்' என்றார். இறைவன்றன் பேரிரக்கத்தால் படைக்கப்பட்ட எல்லா உயிர்களும் அவனையறிந்து உய்தல் வேண்டுமென்ற பேரிரக்கம் சைவ ஆசிரியர்களுக்கு மட்டுமே உரியதாயிருந்தது.

**திருஞானசம்பந்தப் பெருமான்** தானென்னும் முனைப்பும் தந்நலங் கருதுதலும் ஒரு சிறிதும் இல்லாதவர். அவர் சிவபிரானது அருளையே பெருந் துணையாகக் கொண்டு, அவனது உண்மையே உலகெங்கும் பரவ வேண்டு மென்று குறையிரந்து "ஞாலநின் புகழே மிக வேண்டும்" என்றருளினர். தாம் சமணர்களோடு வழக்கிடப் புகுமுன், சிவபிரானை வேண்டி விடை பெற்ற பின்னரே அதற்கு உடன்பட்டனர். இப் பெரியார் தங் கொள்கைக்கு இணங்காதவர்களுக்கு ஏதொரு துன்பமும் செய்தாரில்லை. சமணர்கள்

அப்பரடிகளது அருள் நிறைந்த உயிரை அழிக்கப் பல இடையூறுகள் செய்தும், அப்பர் பெருமான் அத் தீயவர்கட்கு ஏதேனும் துன்பம் விளைத்தனரா? சிறிதும் இல்லையே! நம் சைவப் பெருமான்கள் பிற உயிர்களிடத்துக் காட்டிய பேரிரக்கத்திற்காகவே சிவபிரான் அவர்கள் வேண்டியவாறு அருள்புரிந்து, அவர்கள் பிறர் செய்யுந் தீமைகளாற் பற்றப்படாமல் இருந்து மக்களைத் திருத்துமாறு உதவினன்.

இன்னும், சமணர்கள் பிற கொள்கையினரைத் தம்மோடு சேர்த்தற்குப் பெரிது முயலல்போற் சைவர்கள் மற்றைச் சமயத்தினரைத் தங் கொள்கையிற் சேர்ப்பதில்லை. முழுமுதற் கடவுளின் அருட்டன்மைகளை அவரவரே பகுத்தறிந்து உய்யுமாறு அவனருள் பெற்ற சைவப் பெரியார்கள் அவ்வவர்கட்கு உதவி செய்தாரே யல்லாமல் மற்றைக் கொள்கையினரை ஒரு சிறிதும் துன்புறுத்தியதில்லை

இனித், திருஞானசம்பந்தப் பெருமான் சிவபிரானது பேரருட்டிறத்தைச் சமணர்களெதிரே பல அருள் நிகழ்ச்சிகளால் அறிவுறுத்திக் காட்டியும் அச் சமணர்கள் இறைவனுண்மை உணராராயினர். பெருமானோடு இவர்கள் இருமுறை தோல்வி அடைந்தும், தாம் தம் கொள்கையினிடத்து வைத்திருந்த குருட்டுப் பற்றினால் உண்மையை யுணர விரும்பாமல் மேலும் மேலும் விடாப் பிடியாய்த் தங் கொள்கையையே நிலைநாட்ட முயன்றனர். இவர்கள் தம் உயிரினுங் கொள்கையே சிறந்ததெனக் கொண்டதால், இவர்கள் தாம் தோல்வி அடைந்தால் உயிர்வாழ விருப்பமில்லாமற் கழுவேறி உயிரை மடித்துக்கொள்வதாக அரசனிடங் கூறியிருப்பார் என்பதில் ஐயமுண்டோ? தங் கொள்கைக்காகப் பிற கொள்கையினரைக் கொலை செய்ய முயலும் இச்சமணர்களை அரசன் முறைப்படி கழுவேற்றுதலுங் குற்றமாகாது.

உண்மையில் அச்சமணர்கள் தீத்தொழில் புரிந்து தங் கொள்கையை வளர்ப்பதில் தலை நின்றமையால்,

"தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடியுறைந் தற்று"

என்று **திருக்குறள்** கூறியவாறு, சமணர் தமது கொடுஞ் செயலினாலேயே தாம் அழிந்தனர்.

இனி, இறைவனருளை ஒரு சிறிதும் பற்றி நில்லாத பயனற்ற சமணக் கொள்கையை அறிவுடைய அரசன் கைப்பற்றியது அவனது ஊழ்வினையென்றே சொல்லு தல் வேண்டும். அரசன் சமணக் கொள்கையைத் தழுவியதற்கு இன்னுமோர் ஏதும் உண்டு. அக்காலத் தில் சமணக் கொள்கையைப் பரப்புதற்கு எண்ணா யிரஞ் சமணக் குருக்கண்மார்களும் ஒற்றுமையுடைய ராய்ப் பாண்டி நாட்டை முற்றுகை யிடுவதுபோற் சுற்றித் திரிந்ததால், தாம் மேற்கொண்ட பயனற்ற கருத்தை நிறைவேற்றி அரசனையும் அவனது குடி மக்களையும் சமணர்களாக்கினர்; ஆக்கியும் பய னென்ன? உலகெங்குங் கவிந்த பேரிருளை ஒரு சிறிய ஒளிப் பிழம்பு வடிவாய்த் தோன்றும் பகலோன் வெளிப்பட்டு அகற்றி ஒளி வீசுதல் போல், அறிவுக் கதிரோனாகிய **ஞானசம்பந்தப் பெருமான்** சிறு குழந்தை வடிவினராயிருந்தும், பாண்டி நாட்டை மூடிய சமண இருளை அறவே நீக்கி யருளினர்.

இனிக் கல்வியறிவுள்ள அரசன் முதல் அவன் குடிகள் வரை உள்ளார் எல்லோரும் சமணராக, அரசன் மனைவியாராகிய **மங்கையர்க்கரசியாரும்,** அமைச்சராகிய **குலச்சிறையாரும்** சிவபிரானிடத்து மாறாத உண்மையன்பு பெருகப் பெற்றவராயிருந்தது ஒரு பெரிய வியப்பினையே தருகின்றது. அரசியார் ஆலவாய்க் கோயிலைக் **குலச்சிறையாரைக்** கொண்டு

திறப்பித்துத் தாமும் நாடோறும் கோயிலுக்குச் சென்று பூமாலை தொடுத்து அதனை இறைவற்குச் சாத்தி வழிபாடு செய்து வந்தனர். தாம் இறைவனை வழிபடும்போதெல்லாம் தங் கணவனாகிய அரசனும், குடிகளும் நன்னெறியல்லாத சமணினின்றும் விடுபட்டுச் சிவபிரானை உணரவேண்டுமென்னுங் கவலையே நிரம்பப் பெற்றவராய் அல்லும் பகலும் அவனையே வேண்டி வந்தனர். அரசியார் தம் ஏவல் வழி நின்ற பெண்மக்களைக் கொண்டு ஆலவாய்ச் சிவபிரானுக்குத் தொண்டு செய்யும் பெரும்பேறு தமக்குக் கிடைத்தல் வேண்டுமென எண்ணியே தாமே பூமாலை தொடுத்து இறைவற்கு அணிவித்தார். அரசியார் நாடொறும் சிவபிரானுக்குப் பணி செய்து பரவியதைத் திருஞான சம்பந்தப் பெருமான் ஐந்து பாட்டுக்களில் மிகவும் அழகாக எடுத்தருளிச் செய்தனர். அவைகளில் ஒரு பாட்டை ஈண்டெழுதுவாம்.

"மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே."

இன்னும், அறிவு நூல்களை ஓயாமற் கற்பதில் மட்டும் விருப்ப முடையவர் பலர். ஆனால், அவைகளிற் கூறியவாறு இறைவனுண்மையைக் கடைப்பிடித்து அவனிடத்துப் பேரன்பு கொள்வார் மிகச் சிலர்.

"வேதம் ஓதில்என் வேள்விகள் செய்கில்என்
நீதி நூல்பல நித்தல் பயிற்றில்என்"

ஓதி அங்கம் ஓர்ஆறும் உணரில்என்
ஈசனை உள்குவார்க் கன்றி இல்லையே''

என்று **அப்பர் பெருமான்** அருளியவாறு பல நூல்களைக் கற்பதால் மட்டும் இறைவனை அறிதல் முடியாது. கற்றவைகளில் ஓயாமல் ஐயங் கொள்ளாமல், இறைவனிடத்துக் கலங்கா அன்பு கொண்டு பல பிறவிகளிலும் பதப்பட்டு வந்தவர்களே இறைவனருளைப் பெறுவர். எவ்வளவு கற்றவராயினும், அவர் இறைவனுண்மையை அறிவதற்கு முயலுதல் வேண்டும். அப்போது தான் இறைவன் தன்னை அவர்கட்கு உணர்த்துவான். இதுபற்றியன்றே,

"சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கி" **(திருவாசகம்)**

"அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவன்இறைவ னென்றுஎழுதிக் காட்டொணாதே"
**(திருத்தாண்டகம்)**

என்னுந் திருமொழிகள் எழுந்தன. நம் அரசியார் பிறவிகள்தோறும் இறைவனுண்மைகளை அறிந்தறிந்து பழவினையும் அறியாமையும் முற்றுந் தேயப் பெற்றுத் தவமுடையவராய்ப் பிறந்தமையின், எல்லாம் வல்ல முழுமுதற் சிவத்தை வணங்குவதிலேயே உறைத்து நின்றனர். பல பிறவிகளிற் செய்த தீவினைப் பயன் அரசனைத் திண்ணிதிற் பற்றியிருந்தது. ஆனாலும், அஃது அரசியாரது தெய்வச் சார்பாலன்றோ நாளடைவில் தேய்ந்து தேய்ந்து முடிவில் **திருஞான சம்பந்தப் பெருமான்** திருநீறணிய முற்றும் ஒழிந்தது. அப்போது அரசன் பழவினையின் தொடர்பும் அறவே நீங்கப் பெற்று அறிவு நிரம்பிச் சிவபிரானை அறிந்தான்.

இனி, அரசனும் அரசியாரும் கொள்கை அளவில் மாறுபட்ட எண்ணத்தினரா யிருந்தாலும், தாம் ஒருவர் மேல் ஒருவர் வைத்த அன்பில் ஒரு சிறிதும் குறைவு பட்டிலர். அரசன் தன் அருமை மனைவியாரது சமயக் கொள்கைக்கு இசையாது ஒழுகினனேயல்லாமல், சமணக் கொள்கையைத் தழுவுமாறு அவரைத் துன்புறுத்தினனில்லை; அவர் நாடோறுங் கோயிலுக்குச் செல்வதையுந் தடுத்தானில்லை; தன் கொள்கைக்கு இணங்காமற் சைவரா யிருந்த தன் அமைச்சராகிய குலச்சிறையாரையுங் குறை கூறின னில்லை. அரசியார் தங் கணவனைத் திருத்த எவ்வளவோ முயன்றிருக்கலாம்; முயன்றும் பயனில்லாமை கண்டு பின் அது பற்றி அரசனிடம் ஒன்றும் பேசாது, அமைதியாக அவன் திருந்தும் நாளை நோக்கிச் சிவபிரானை வேண்டி வருவாராயினர். அரசன் சமணனானதுபற்றி அரசியார் அவனிடத்து வெறுப்புக் கொள்ளவில்லை என்பது, அரசன் சமணர்களது தீய கருத்துக்கிசைந்து, அதன் பின் கவலையோடு படுத்திருந்தக்கால் அவன் முக வாட்டங் கண்டு மனம் பொறாராய் வருந்திப் பேசியதை,

"மன்னவன் உரைப்ப தின்றி யிருக்கமா தேவி யார்தாம்
என்உயிர்க் குயிரா யுள்ள இறைவநீ உற்றதென்னோ
முன்உள மகிழ்ச்சி யின்றி முகம்புலர்ந் திருந்தாயின்று
பன்னிய உள்ளத் தெய்தும் பருவரல் அருள்செ
யென்றார்"

(திருஞா. பு. செ. 690)

என்று சேக்கிழார் பெருமான் மிக அழகாக எடுத்துக் கூறு மாற்றால் விளங்கும். அரசன் செருக்கில்லாத அருமையான இயற்கையுடையவன்; வீண் பிடியில்லாத் திருந்திய மன முடையவன். ஆதலால், தம் மனைவியாரது தெய்வத் திருமொழியைத் தக்க நேரங்

களிற் புறம்பழித்திலன். எவ்வாறெனில், அரசன் திருஞானசம்பந்தப் பெருமான் வருகையை உணர்ந்து வருந்தியபோது,

"மன்னவ னுரைப்பக் கேட்டு மங்கையர்க் கரசி யார்தாம்
நின்னிலை இதுவே யாகில் நீடிய தெய்வத் தன்மை
அன்னவர் வாது செய்தால் வென்றவர் பக்கஞ் சேர்ந்து
துன்னுவது உறுதியாகுஞ் சுழிவுறேல் மன்ன என்றார்"

(திருஞா. பு. செ. 693)

என்று சேக்கிழார் அருளிய வண்ணம் அரசியார் கூறிய அறிவுரை கேட்டு அதற்கு இணங்கி வழக்கில் வென்றவர் பக்கஞ் சார்வதற்கு உறுதி கொண்டிருந்தான். இன்னும், சமணர்கள் தீர்க்க முடியாத வெப்பு நோயால் அரசன் துன்புற்றபோது "திருஞானசம்பந்தப் பெருமான் ஒருவரால் மட்டுமே வெப்பு நோய் நீங்கப் பெறுவீர்" என்று அரசியார் அவனுக்கு அறிவுறுத்தியபோதும், "அவரை அழைமின்" என்றிசைந்தான். நம் தெய்வ அரசியாராகிய மங்கையர்க்கரசியாரது சொற் கேட்டது முதல் அரசன் தன் பழவினை தேயப்பெற்று மெய்யுணர்வு நிரம்பினன். அறிவு மிக்க தம் அருமை மனைவியாரது சொற் கேளாதிருந்த வரையில் அரசன் அறியாமை வயப்பட்டவனய்ப் பிறவி வட்டத்தில் வைத்துச் சுழற்றப்படும் உயிரையே கடவுளென்று பிழைபட எண்ணி இறைவனெண்ணமே சிறிதும் வரப் பெறாமலிருந்தான். ஆகவே ஆணுயினும் பெண்ணுயினும் அறிவில் வேற்றுமை காணப்படுதல் இல்லாமையால் நாம் அறிவுடையார் பக்கஞ் சார்ந்து அறிவு பெறுதலே உயிர்க் குறுதி பயப்பதாகுமென்பது உணரப்படும்.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்று தெய்வத் திருக்குறள் கூறியவாறு, ஆணிலும் பெண்ணிலும் உயர்வு தாழ்வு காண்பது, அவரவர் அறிவில் மேன்மையுந் தாழ்மையுங் காணப்படுதல் பற்றியே யாகும்.

ஆறறிவுயிராகிய நாம் இறைவனாற் படைக்கப்பட்டுக் கணவன் மனைவி என்ற முறையில் அமைந்தமை, ஒருவர்க்கொருவர் துணையாய் வாழ்ந்து மக்களைப் பெற்று அறிவுடையராக்கி இறைவனருளைப் பெறுவதற்கே அல்லாமல், "நான் ஆண்மகன், நானே எவ்வகையிலும் உயர்ந்தேன்: நீ பெண், ஆதலின் நீ எவ்வகையிலும் தாழ்ந்தாய்; ஆதலால் நீ எவ்வளவு அறிவுடைமையோடு நல்லுரை கூறினுங் கேட்பேனல்லேன்" என்று வீண் வழக்குப் பேசிக் காலங் கழிப்பதற்கு அன்று.

இன்னும் "தையல் சொல் கேளேல்" என்ற ஔவையார் கூறியது கொண்டு பெண் மக்கள் சொற்களைக் கேட்பது முறையாகாது என்று ஆண்மக்களிற் பலர் பிழைபடக் கூறுகின்றனர். **தையல்** என்னுஞ் சொல்லுக்குப் பெண் என்று பொதுப்படப் பொருள் கொண்டாலும் பெண்ணிலும் அறிவுடையாரும் அறிவிலாதாரும் தீயோரும் என மூவகையினர் இருத்தலால், ஔவையார் கூறிய 'தையல் சொற் கேளேல்' என்னும் இச்சொற்றொடரிலுள்ள **தையல்** என்னுஞ் சொல்லுக்குத் **தீய தன்மையுடைய பெண்** என்றே பொருள் கொள்ளல் வேண்டும். ஒழுக்கமில்லாக் கொடிய பெண் மக்களை நம்பி, அவர் சொற்கேட்டு எத்தனையோ ஆண்மக்கள் தம் அருமை மனைவி மக்களை ஊணுக்கும் உடைக்குங் காற்றுய்ப் பறக்க விட்டுத், தம் பெரும் பொருளை அவர் பொருட்டு வீணே செலவழித்துத், தம் பிறவியைப் பாழாக்குவது கண்டே அறிவிற் பெரிய ஔவையார் அவர்களை நோக்கிக்

'கொடிய பெண்களது சொற்கேட்டு வீணுகாதே' என்று கூறினர். இவர் பின்னும் ஓரிடத்திலும் "மைவிழியார் மனையகல்" என்ருர். இக்கருத்தினையே திருவள்ளுவப் பெருமான்,

"பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து"

என்பதனுல் அறிய வைத்தனர். தீய செயலுடைய பெண் மக்கள் சொற் கேட்பதனுல் தாங் கெடுவதன்றித் தம்மைச் சார்ந்தவர்களுங் கெட்டுப்போதற்கு இடஞ்செய்கின்றனர். ஆதலால் கொடிய பெண்களின் சொற்கேளாது அறிவுடையரா யிருக்குந் தன்மையே சிறந்ததென்பதாம்.

இன்னும், ஆண்மக்களிற் பலர், மெய் அறிவில்லா மனைவிமார் சொற்கேட்டு அவர்கள் நினைத்தவாறு செய்யவும் பேசவும் இடந்தருகின்றனர். இதுவும் பெருங்கேடாய் முடியும். எவ்வாறெனில், நம் பெண் மக்களிற் பலர் கடவுளிடத்து அன்புடையோம் என்று சொல்லிக்கொண்டு, 'நானே கடவு'ளென மறைவாகக் கூறும் மாயாவாத நூல்களைச் சிறிது கற்று, அதனுல் எல்லாம் உணர்ந்தார்போல் எண்ணி எல்லாம் பிரமம்; நானும் பிரமம்; நீயும் பிரமம் என்று பேசி, மெய்யல்லா அறிவுடைய மாயாவாத அடிகண்மார்களை, ஊர் ஊராகச் சென்று காணப்போகின்றனர்! தம் பிள்ளைகளும் கணவன்மார்களும் வீட்டிலிருந்து படுந் துன்பத்தை இவர்கள் சிறிதேனும் கருதிப் பார்ப்பதில்லை. ஆகவே ஆண் மக்கள் மட்டும் கற்றறிவுடையராய்ச் சீர்திருந்துதல் போதாது. தம் வீட்டிலுள்ள பெண் மக்களும் மெய்யறிவு வாய்ந்து திருந்துமாறு செய்தல் வேண்டும்.

இன்னுந், தம் வீட்டுப் பெண்கள் சிறு தெய்வங்களை வணங்கி, அவைகட்குக் கொலை புரிவதிலும், பய

னற்றவர்களுக்கு ஏராளமான பொருள் தருவதிலும், எடுத்ததற்கெல்லாம் குருட்டு நம்பிக்கை கொள்வதிலும் காலங் கழிப்பதைக் கண்ணூரக் காணும் கற்றறிவுடைய ஆண்மக்களும் இருக்கின்றனர். இவர்கள் தம் பெண் மக்களது பாழான கருத்துக்கு உடன்பாடில்லாதவராயினும், 'வீட்டிலுள்ள பெண் மக்கள் எவ்வாருயின் என்? அவர் சொற்கேட்டு அவர் மனம் வருந்தாமல் அவர் விரும்பியவைகளைக் கொடுத்து விடுவதே நல்லது' என்று சொல்லி விடுகின்றனர். தம் மனைவிமார் திருந்தாவிட்டால், ஆண் மக்கள் தாம் அடைவதாகக் கருதும், பயன் சிறிதுமே இல்லையாய்ப் போம். பெண் மக்கள் உயர்ந்த அறிவாற்றல் உடையவரா யிருந்தாற்ருன் ஆண்மக்கள் எவ்வளவு கற்றவராயினும் அவர் மேலோங்கி மெய்யுணர்வு பெறுவர். பெரிய புராணத்திற் சொல்லப்படுந் தலைவிமார்களெல்லாம் சிறந்த அறிவுடையரா யிருந்தமை யினுற்ருன், நாயன்மார்கள் மிக எளிதில் இறைவனருளைப் பெறலாயினர். மங்கையர்க்கரசியாரது அருளுரையை அரசன் வெறுத்துத் தள்ளி யிருப்பானுயின் அவன் பிறவி யெடுத்ததின் பயனை இழந்திருப்பானல்லனே?

இனி, அரசியார் தென்னுட்டிற் சிவபிரானது உண்மைத் தன்மையை விளக்கி நிலைநாட்டும் முயற்சியில் அஞ்சா நெஞ்சினராயிருந்தமை பெரிதும் வியக்கற்பாலதாகும். அரசியார் அச்சமணர்களிடையே சைவந் தழைத்தோங்குமாறு எவ்வளவோ முயற்சிகள் செய்தனர்.

"தாமின் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்ற பொய்யாமொழிக் கிணங்க அரசியார் தாம் செய்த பெருமுயற்சியெல்லாம் தங்கணவனும் குடிமக்களும்

எல்லாம் வல்ல முழுமுதற் பொருளாகிய கடவுள் நெறியை யறிதற் பொருட்டேயாம். சமணர்கள் தாம் மேற்கொண்ட தவறான நெறியை மக்கட்கு அறிவுறுத்தி அவர்களைப் பாழாக்க நினைத்தது போலல்லாமல் அரசியார் தாம் இறைவனருளால் அறிந்த முழுமுதற் கடவுள் நெறியை மக்களறிந்து உய்வதற்காக உறுதியான எண்ணங் கொண்டனர். தாங் கொண்ட எண்ணத்துக்கு மாறாகச் சமணர்களாற் பிள்ளையார்க்கு ஏதேனும் தீங்கு நேர அதனாற் சைவம் அழியுமாயின், அரசியார் தம் உயிரையே இழப்பதாகக் குலச்சிறையாரிடங் கூறி வருந்தினர். இதனைச் சேக்கிழார் பெருமானும் பின் வருஞ் செய்யுளால் விளக்கியருளினர்.

"மானியார் தாமு மஞ்சி வஞ்சகப் புலையர் தாங்கள்
ஈனமே புரிய வல்லார் செய்வதென் னூமென் றெண்ணி
ஞானசம் பந்தர் தம்பா னன்மையல் லாத செய்ய
ஊனம்வந் தடையில் யாமும்உயிர்துறந் தொழிவ தென்
[றூர்"

(திருஞா - பு - செ. 696)

இவர் பெண்மகளிராயிருந்தாலும் இவர்க்கிருந்த மெய்யறிவும், அஞ்சாமையும், அடக்க ஒடுக்கமும் அம்மதுரைமா நகரிலிருந்த ஆயிரக்கணக்கான ஆண் மக்களிற் குலச்சிறையாரைத் தவிர மற்றெவர்க்கும் இருந்தனவாகத் தெரியவில்லை. இரக்கமில்லா நெஞ்சத்தினராகிய சமணர்களிடையே, அரசியார் சிவபிரானருளையும் குலச்சிறையார் உதவியையுமே பெருந்துணையாக் கொண்டு திருஞான சம்பந்தப் பெருமானையும், அவர் தந் திரண்ட அடியார் கூட்டத்தையும் வரவேற்றுத் தம் நகரிற் பெரியதோர் மடம் அமைத்து அவர்கட்கு வேண்டிய வசதிகளையெல்லாம் குறைவறச் செய்தனர்.

திருஞானசம்பந்தப் பெருமானைக் கண்டு வணங்கி மகிழும் பொருட்டு ஆலவாய்க் கோயிலின் ஒரு புறத்தே ஒதுங்கி நின்றுகொண்டிருந்த அரசியாரைக் குலச்சிறை யார் பெருமானுக்குக் காட்ட, உடனே அரசியார் திருஞானசம்பந்தப் பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அரசியார் 'யான்' 'எனது' என்னுஞ் செருக்குச் சிறிதும் இல்லாதவர். தமக்கிருந்த பெருஞ் செல்வத்தைப் பெரிதாகக் கருதி இறுமாந்தவரல்லர். அருட் செல்வத்தால் உயர்வதே தமக்குச் சிறப்பெனக் கருதினவர். அரசியார் அருட்களஞ்சியமாகிய திரு ஞானசம்பந்தப் பெருமானைக் காணும் பேரவாவினால் ஐம்புலனும் ஒடுங்கிச் சிறிதும் ஆரவாரமின்றி அடக்கத்தோடிருந்த சிறப்பைச் சேக்கிழார் பெருமான்,

"பிள்ளையா ரெழுந்தருளி முன்புகுதும் அப்போது
வெள்ளநீர் பொதிவேணி யார்தமைத் தொழும்விருப்பால்
உள்ளணைந்திட எதிர்செலா தொருமருங் கொதுங்குந்
தெள்ளுநீர் விழித்தெரிவை யார்சென்று முன்பெய்த"

(திருஞா. பு. செ. 669)

என்றருளினர்.

அம்மதுரைமா நகரில் சைவமும் சைவரும் இல்லை யாய்ப்போன அக்காலத்தில், அஞ்சாநெஞ்சத்தோடு தன்னந் தனியராய் நின்ற ஆண்மை மிக்க மங்கையர்க் கரசியாரைப் போன்ற ஆண்மக்கள் இக்காலத்தில் ஒரு வரும் இல்லையென்றே சொல்லல் வேண்டும். ஏனெ னில், சிவபிரானது முழுமுதற் றன்மைகளைத் தெளி வாகக் கூறும் சைவநூல்களும், அவைகற்ற அறிஞர் களும் சைவர்களும் மிகுதியா யிருக்கும் இக்காலத்தே சில இயக்கத்தினர் கடவுள் இல்லை என்றுரைத்துச் சைவ ஆசிரியன்மார்களைப் பழித்துப் பேசி வருகின் றனர். மேற்கூறிய இத்தனை வசதிகளும் பொருந்தி

யிருக்கும் இக்காலத்தில் சைவ ஆண்மக்கள் அஞ்சா நெஞ்சினராய் ஆங்காங்குச் சிறிது முயற்சி யெடுத்தாலும் போதும் ; சைவந் தழைத்து ஓங்கும் ; ஆனால், அதனை வளர்க்க முயற்சி எடுப்பார் ஓரோ ஓரிடத்தில் அருகிக் காணப்படுகின்றனர். இவ் வறிஞர் ஒரு சிலரும் அவ்வியக்கத்திற்கு மாறாகப் பேசி உண்மையை அறிவிக்க முன்வந்தாலும் அவர்கட்கு மற்றவர்கள் உதவி புரிகின்றார்களில்லை. கடவுள் இல்லை எனும் இக் கொள்கையினரை மறுத்துப்பேச அஞ்சுவது மன்றி, இவர்களது பெயரைக்கூடச் சொல்லுவதற்கும் நடுங்குகின்றனர். நம் அரசியாரது அஞ்சா நெஞ்சத்தின் வன்மையாலே தமிழ்நாட்டிற் சைவந் தழைத்தோங்கிய தென்பதை உணரும் ஆண்மக்கள் எவரும் சிவபிரானது உண்மையைப் பரப்புதற்கு முன்வராராயின், அவர் உலகிற் பிறந்தும் பிறவாதவரே யாவர்.

தென்னாட்டிற் சைவம் பரவுதற்கு அரசியாரே ஏதுவாயிருந்ததனால், அவரது தெய்வத் தன்மையைப் பாராட்டித் திருஞானசம்பந்தப் பெருமான்

"செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெயப் பாரிட நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தந்
தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல்
ஆலவா யாவது மிதுவே"

என்றருளினார். இன்னும், சேக்கிழார் பெருமான்

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி

செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோ னருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மாற் போற்ற லாமே"

என்று பெருந்தமிழ் நாடடைந்த இடரை நீக்கித் திருநீற்றின் ஒளியைப் பரப்பிய மங்கையர்க்கரசியாரை வணங்குகின்றவர்களுடைய அடிகளை வணங்குவோம் என்றனர்.

அருள் நிறைந்த நம் அரசியார் சிவபிரானிடத்துக் கொண்ட பேரன்பில் ஒரு சிறிதேனும் வரப்பெற்று அறிவு நூல் கற்பதில் நம்மவர்கள் மேம்படுவார்களாயின், அறிவுப் பெண்மணிகள் நிறைந்த ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளைவிட நந் தமிழ்நாடு சிறந்து விளங்கும்.

முற்றிற்று.

Publicati n No. 2

# MUPPENMANIGAL VARALARU

BY

T. NEELAMBIKAI AMMAIYAR

*The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,*
*Tirunelveli :: & :: Madras.*

Price Re. **1-0**

Wrapper printed at the Central Art Press, Madras